15346

# அவதானக் கலை

கரு. நாகராசன்

# அவதானக்கலை

கரு. நாகராசன்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே

தமிழ்ப் பதிப்பகம்
33, திருமலை நகர் இணைப்பு,
பெருங்குடி, சென்னை-600096

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the book | — | Avathanak Kalai |
| Author | — | KARU. NAGARAJAN M.A.,<br>Asst. Professor of Tamil,<br>Guru Nanak College,<br>Madras-600 032. |
| Publisher | — | Tamil Pathippakam,<br>33,Tirumalai nagar Annexe,<br>Perungudi, Madras-600 096. |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | October 1982 |
| Paper used | — | Sheshasayee—16.2.kg. |
| Size of the Book | — | 21×14 Cms. |
| Printing types used | — | 10, 12, 18, 24. |
| Number of Copies | — | 1,200 |
| Number of pages | — | 114+7 |
| Price | — | Rs. 10-- (Rupees Ten) |
| Printer | — | Meipporul Achagam,<br>Ayanpuram, Madras-600 023. |
| Binding | — | Card board |
| Artist | — | Thennan |
| Subject | — | A Study on Avathanak Kalai. |

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

**International Institute of Tamil Studies**

அடையாறு, டி.டி.டி.ஐ. (அஞ்சல்), தரமணி,

சென்னை — 600 113.

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்


## அணிந்துரை

தமிழகத்திற்கே உரிய பல கலைகளில் அவதானக் கலையும் ஒன்று. நினைவாற்றலால் இக்கலை முழுநிலையில் வளர்ந்தது. அஷ்ட அவதானக்கலை முதலாகச் சதா அவதானக்கலை ஈறாகப் பலநிலைகளில் அவதானக்கலை அமைகின்றது. நினைவாற்றலால் கவிதை இயற்றலும் கற்பனை ஆற்றலும், எண்களைப் பற்றிய அறிவும் என்று பல துறை அறிவு இவ் அவதானக் கலைக்குத் தேவைப்படுகிறது. அவதானக்கலை பற்றி இதுவரை எந்த நூலும் வெளிவரவில்லை. இதுவே முதல்நூலாக அமைகின்றது.

இந்நூலை மிகச்சிறப்பாக நன்கு முயன்று தொகுத்து உருவாக்கிய திரு.கரு.நாகராசன் அவர்களைப் பாராட்டுகிறேன். இதனால் அவர் தமிழ் உலகிற்குப் பெரும் தொண்டினைச் செய்துள்ளார் என்று நான் நம்புகிறேன்.

தமிழகத்தில் அழிந்து கொண்டிருக்கும் பல கலைகளுள் அவதானக் கலையும் ஒன்றாக அமைகின்றது. அவதானக்கலை இன்று அறிவியலில் மலர்ந்துள்ள 'கம்பியூட்ட'ரோடு ஒத்து இணைத்து எண்ணத்தக்கது. அத்தகைய கலையைப் பற்றிய செய்திகளைத் தருகின்ற திரு. கரு. நாகராசன், இதுபோன்ற பல நல்ல நூல்களைத் தமிழ் உலகிற்குத் தர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அன்புள்ள

16-10-1982

ச. வே. சுப்பிரமணியன்

# என்னுரை

தமிழரின் பெருமைக்குச் சான்று பகரும் அருங்கலைகள் பல. அவைகளுள் ஒன்றுதான் அவதானக்கலை. ஒரு சமயத்தில் குறிப்பிட்ட ஒரு செயலைக்கூட ஒழுங்காகச் செய்ய முடியாது அல்லற் படுபவர் பலருண்டு. ஆனால், ஒரே சமயத்தில் நூறு விதமான அருஞ்செயல்களையும் தம் அறிவு நுட்பம் தோன்றச் செய்து சிறப்படைந்துள்ளார்கள் அவதானிகள். இன்று அருகிவரும் அக்கலையைப்பற்றி நாம் ஓரளவேனும் அறிந்து கொள்வது நம்முடைய கடமையாகும். அத்தூய முயற்சிக்கு இந்நூல் நிச்சயம் துணைபுரியும் என்று நம்புகிறேன்.

தகுதியான நூல்களை வெளியிட்டுத் தமிழ் வளரத் துணை புரிவதுடன், தரமான எழுத்தாளர்களையும் உருவாக்கி வரும் தமிழ்ப் பதிப்பகம் கிறியேனையும் ஊக்குவிக்கும் நோக்குடன் இந்நூலையும் வெளியிடுவதை எண்ணி மகிழ்கிறேன். அப்பதிப் பகத்தாருக்கும், இச்சிறிய முயற்சிக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கட்கும் என் பணிவான நன்றி களைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்நூலை அச்சிட்டு உதவிய மெய்ப்பொருள் அச்சகத்தார்க் கும், ஓவியர் தென்னன் அவர்கட்கும் என் இனிய நன்றிகளை உரித்தாக்குகிறேன். இம்முயற்சி அனைவராலும் போற்றி வரவேற்கப்படும் என்று நம்புகிறேன்.

கரு. நாகராசன்

# பொருளடக்கம்

1. அவதானம்- ஓர் அறிமுகம் 1

தமிழரின் தனிச்சிறப்பு-தமிழர் வாழ்வில் அவதானம்-அவதானம்-சொற்பொருள்.

2. அவதானம் பற்றிய பொதுவான எண்ணங்கள் 6

தோன்றிய காலம்-தோன்றக் காரணம்-வடசொல் ஏன்? கலைக்களஞ்சியம் கூறும் கருத்து-உளவியலார் கருத்து.

3. அவதானத்தின் அருமை 11

கவிராயர் பாடல்-எல்லோரும் கவிஞர்களே-சோதனையும் சாதனையும்- 'ஐ' எனத் தொடங்கி 'ஐ' என முடிதல்-உண்ணக் கொடுத்து எண்ணக்கூறுதல்-மொட்டைத்தலையும் முழங்காலும்.

4. அவதானத்தின் வகைகள் 16

சட்டாவதானம்- அட்டாவதானம்- தசாவதானம்-சோடசாவதானம்-சதாவதானம்-பிற அவதானங்கள்.

5. அவதானங்கள் எவை? 20

ஆறுமுகம் பிள்ளை செய்த அவதானங்கள்-இராமலிங்கக் கவிராயர் அவதானங்கள்-பன்னிரண்டு அவதானங்கள்-செந்தமிழ்ச்செல்வி கூறுவது.

6. அவதானம்-அன்றும் இன்றும் 25

வளர்ந்த வேகம்-ஆதரவு-அவதானிகளின் ஆர்வம்-பயிற்சியா? பரம்பரையா?-முயன்றால் முடியும்.

7. காப்போம் அவதானக் கலையை! 28

அருங்கலை மறையலாமா?-வளராமைக்குக் காரணங்கள்-வளர்ப்பதற்கான வழிமுறைகள்-ஆர்வமும் முயற்சியும்-அரசின் கடமை-பொதுமக்களின் பொறுப்பு.

8. சட்டாவதானம் 34

கங்காதர பால தேசிகர்-வைரக்கண் வேலாயுதப்புலவர்.

9. அட்டாவதானம் 37

அட்டாவதானியார்-பூவை. கலியாணசுந்தர முதலியார்-புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார்-வீராசாமி செட்டி

யார்-அரங்கநாதக் கவிராயர்- சொக்கலிங்கப்புலவர்-சரவணப் பெருமாள் கவிராயர்-இராமசாமியா பிள்ளை-சந்திரசேகர உபாத்தியாயர்-நா. கதிரைவேற்பிள்ளை-நா. ஏகாம்பரம்-அரங்க சாமி ஐயங்கார்- அப்துல்காதர்- முத்துச்சாமிக்கோனார்- இராமனாதன் செட்டியார்-சின்ன இபுறாகீம் மொகையதீன்- சுப்பிரமணியதாசு-முத்துச்சாமி ஐயங்கார்-சுப்பிரமணிய ஐயர்- இராமசாமிக் கவிராயர்-இன்ப கவிராயர்-குமாரசாமிக் கவிராயர்- சாமிநாதையர்-சிறிய சரவணக் கவிராயர்-சி. சுந்தரம் ஐயர்- சோமசுந்தர குரு-கிருட்டின ஐயங்கார்-சேடாசலக் கவிராயர்- ரா. அரங்கையர்-நயினார் பிள்ளை-சுப்பையர்-ச. செகராவ் முதலியார்-நாகலிங்கம் பிள்ளை-இராமானுசக் கவிராயர்-இரங்க நாதக் கவிராயர்-கலியாணசுந்தரம் பிள்ளை-அ.ம.சி.முகமதுமீரா ராவுத்தர்-வடபத்திர ஐயங்கார் -சரவணப் பெருமாள் பிள்ளை- வேலாயுதக் கவிராயர்- எம்.எம். முகமது அப்துல்காதிரு சாகிபு- இராமலிங்கக் கவிராயர்-கதிர்வேல் கவிராச பண்டிதர்-பெரிய- திருவடிக் கவிராயர்-மகாதேவ ஐயர்- இராமலிங்கக் கவிராயர் மீனாட்சிசுந்தரக் கவிராயர்- ச. முத்துக்குமாரு-வாலசுப்ரமணிய ஐயர்-அச்சுத உபாத்தியாயர்-இராமலிங்கம் பிள்ளை-சொக்க நாதப்புலவர்-பொன்னுங்கூட அவதானி-பாப்பையர்-சுப்பராயச் செட்டியார்.

10. தசாவதானம் 80

ஆறுமுகம் பிள்ளை-ஜெகநாதப்பிள்ளை- மு. திருஞான சம்பந்தன்-முத்துவீர உபாத்தியாயர்-பாலசுப்ரமணிய ஐயர்- சரவணப் பெருமாள் கவிராயர்- இராமையா.

11. சோடசாவதானம் 89

சுப்பராயச் செட்டியார்-வேலாயுதக் கவிராயர்-மீனாட்சி சுந்தரக் கவிராயர்-சரவணப்பெருமாள் கவிராயர்;

12. சதாவதானம் 94

செய்குத்தம்பிப் பாவலர் மத.மபா.கருட்டிணசாமிப் பாவலர்- முத்துச்சாமி ஐயங்கார்-பாலசுப்ரமணிய ஐயர்-மீனாட்சிசுந்தரம் ஐயர்-பாலசுப்ரமணிய ஐயர்-இராமநாதச் செட்டியார்-சுப்பிர மணிய ஐயர்-சரவணப்பெருமாள் கவிராயர் -வால சுப்ரமணிய ஐயர்.

13. துவிசதாவதானம் 105

ம.உ. சுப்பராமையர்.

14. திருக்குறள் அவதானம் 107

சுப்ரமணிய தாசு-இராமதாசு.

15. அட்சராவதானம் 109

பெருங்கருணை முத்தழகர்.

துணை நூற்பட்டியல் 110

அவதானிகள்-அகரவரிசை. 112

# அவதானம் - ஓர் அறிமுகம்

## தமிழரின் தனிச்சிறப்பு

"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே"

என்று அறிவியல் வளர்ச்சியால் மேலை நாடுகளில் வளர்ந்து வரும் அருங்கலைகள் பற்றிப் பாடினார் பாரதியார். அத்தகு கலைகள் நம் தாய்மொழியிலும் வளரவேண்டும் என்று விரும்பினார் அவர். ஆனால், அறிவியல் கதிரவன் அகிலத்தில் தோன்றுவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பாகவே கவின்கலைகள் பலவற்றைக் கண்டு வளர்த்த பெருமை தமிழினத்திற்குண்டு. விண்ணைமறைக்கின்ற கோபுரங்களும், நம் விந்தையைக் காட்டுகின்ற ஓவியங்களும் சிற்பங்களும் தமிழரின் தனிச்சிறப்பை என்றும் எடுத்து இயம்ப வல்லனவாகும்.

வளர்ந்துவரும் நாடுகள் பெற்று வரும் வளர்ச்சிகளெல்லாம் புற உலகில் அவை பெற்றுவரும் வளர்ச்சிகளாகவே அமைந்துள்ளதை உணர்கிறோம். அதனால்தான் அவ்வளர்ச்சியின் மிகுதியாலேயே போட்டிகளும் பொறாமைகளும் தோன்றக் காண்கிறோம். போரும் பூசலும் வெடித்து வளர்ச்சியே வீழ்ச்சிக்கும் வித்தாக அமைவதை அறிகிறோம். ஆனால் உயர்ந்த மாளிகைக்கு ஆழமான அடித்தளம் அமைப்பது போல அகவாழ்வைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து அரிய பல உண்மைகளை வெளிப்படுத்திய பெருமை தமிழினத்திற்குண்டு. அதனால்தான் தமிழரின் புறவாழ்வும் அன்பும் அருளும் கலந்ததாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

மனத்தைப் பற்றியும், ஆன்மாவைப் பற்றியும், உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும், இவ்வுலகின் நிலையைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்தவர்கள் தமிழர்கள். அவர்கள் சிந்தனைகளெல்லாம் தத்துவங்களாகி உலகம்போற்றும் உன்னதநிலையைப் பெற்றுள்ளதை அனைவரும் அறிவர். விஞ்ஞானிகள் பலர் இம்மண்ணில் தோன்றா விட்டாலும் கூட உலகம் உய்வடையும் உயரிய வழியைக் காட்டிய மெய்ஞ்ஞானிகள் பலர் அவதரித்த புண்ணிய பூமி இது.

மனத்தின் மாண்பினைப் பற்றியும், அதனை ஒருவழிப் படுத்தல் அல்லது ஒரோ வழி அடக்கி வைத்தல் ஆகியவற்றின் மூலமாகச் செயற்கரிய செயல்கள் பலவற்றைச் செய்யமுடியும் என்பதையும் எடுத்துக்காட்டியவர்கள் இந் நாட்டு ஞானிகள்.

பொறி புலன்களின் போக்கில் மனத்தைச் செலுத்திப் பாவச் சேற்றில் அழுந்தி வருந்தாமல் நெறிவழியே நின்று உயரும் பாங்கை உணரவே அரிய தவங்கள் பலவற்றை அவர்கள் இயற்றினார்கள். அத்தவத்தின் மூலம் அவர்கள் பெற்ற பேராற்ற லால் எண்ணற்ற ஆண்டுகள் இம் மண்ணுலகில் வாழும் வலிமை யுடன், எதிர்காலத்தை நோக்கியறியும் நுட்பத்தையும் பெற்றிருந்தார்கள். அறிவியல் ஆற்றலால் சாதிப்பதைவிட மனத்தின் திண்மையால் அதிகம் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டிய பெருமை தமிழ்நாட்டில் தோன்றிய சான்றோர்களுக்குண்டு.

## தமிழர் வாழ்வில் அவதானம்

தவத்தைப் போலவே யோகம் போன்ற நெறிகளும் மனத்தின் மாண்பினால் மலர்ந்தவைகளே! ஆசனம் என்ற அரியகலை,உடல் வளர்ச்சிக்கேயன்றி மனவளர்ச்சிக்கும் பயன்பட்டுள்ளதை அறி கிறோம். அந்நெறிகளின் மூலம் மனம் பெற்ற பயிற்சியையும் பக்குவத்தையும் பொறுத்தே அவர்களால் அரிய செயல்கள் பலவற்றைச் செய்ய முடிந்தது.

மனத்தின் இயல்புகளை உணர்ந்து தெளிந்து உரைத் தவர்களில் தமிழ்நாட்டுச் சித்தர்கள் குறிப்பிடத்தக்கவராவார் கள். நாடு அடிமையாக இருந்தபோதும் எந்த அடிமைத் தளைகளுககும் தங்களை ஆட்படுத்திக் கொள்ளாமல் உரிமை யுணர்வோடு உணர்ந்ததைப் பாடிய அவர்கள் சமயத் தொடர்பான பல உண்மைகளையும் தங்கள் பாடல்களில் வடித்துச் சென்றுள்ளார்கள். அப்பாடல்களில் பல, புரட்சி மணங்கமழக் கூடியதாகவும் அமைந்துள்ளதைக் கற்போர் உணரலாம்.

நட்டகல்லைத் தெய்வமென்று நம்பி, மலர்களால் அர்ச்சிப் பவர்களைப் பார்த்து, ''நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்'' என்று எடுத்துக்காட்டியவர் ஒரு சித்தரே! நாமெல்லாம் தேங்காயில் பாலெடுத்துப் பருகும் திறனையே பெற்றுள்ளோம். ஆனால் மாங்காயிலும் பாலெடுக்க முடியும் என்று கூறுகிறது சித்தர் பாடல்.

> ''மாங்காய்ப்பா லுண்டு மலைமேல் இருப்பவர்க்குத்
> தேங்காய்ப்பா லேதுக்கடி''

என்று கேட்கிறார்

குதம்பைச் சித்தர். மன உலகைப் பற்றிப் பாடியிருப்பதோடு பக்தியுலகிலும் புரட்சி செய்த பெருமை சித்தர்களையே சேரும்.

தமிழ்நாட்டில் இச்சித்தர்கள் வாழ்ந்த காலத்திற்கும் அவதானிகள் தோன்றியதற்கும் ஓர் தொடர்பு உண்டு. திருமூலர் போன்ற சித்தர்கள் காலத்தால் முந்தியவர்களாக இருந்தாலும் பெரும்பாலான சித்தர்கள் ஏறத்தாழ கி.பி.16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி, 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே வாழ்ந்துள்ளார்கள். நமக்குக் கிடைக்கும் சான்றுகளின்படி பார்த்தால் கி.பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தமிழ்நாட்டில் அவதானக் கலை தோன்றியுள்ளது. அவதானம் தோன்றிய காலமும் தோன்றியதற்கான காரணமும் இந்நூலில் பின்பு ஆராயப்படவிருக்கிறது. எனினும் ஒன்றை நாமிங்கு உணர வேண்டியுள்ளது.

மனத்தைப்பற்றிய சித்தர்களின் ஆராய்ச்சி முடிவுகளின் பயனாகத்தான் அவதானக்கலையும் தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் அவதானக்கலைக்கும்மனநிலையே அடிப்படையானது மனத்தைக் கட்டுப்படுத்தும் திறனில்லார் அவதானத்தின் அரிச்சுவடியைபே அறியத் தகுதியற்றவராவார். ஒரே சமயத்தில் பலர் விடுக்கும் வினாக்களுக்குப் பதில்கூறும் பாங்கும், நினைத்தவுடன் பாட்டெழுதும் திறமும் எல்லோருக்குமே எளிதில் கைவந்துவிடக் கூடியதல்ல. சித்தர்கள் உரைத்துச் சென்ற உண்மைகளை உணர்ந்து அதை நடைமுறைப்படுத்தியதன் மூலம் பெற்ற மன அனுபவமே அவதானக்கலை தோன்றத் துணை செய்திருக்க வேண்டும் என்று நம்ப வாய்ப்புள்ளது.

### அவதானம்-சொற்பொருள்

அவதானம் என்பதற்கு 'நினைவுக்கலை' என்றே இன்று பலரும் தமிழில் குறிப்பிட்டு வருகின்றார்கள். இச்சொல் ஓரளவு பொருந்துமேயன்றி அவதானிகளின் செயல்களை அப்படியே இச்சொல் குறிப்பிடுவதாகக் கூறமுடியாது. ஏனென்றால்; நினைவாற்றல் மட்டுமே உடையவர்கள் நிச்சயம் அவதானிகளாக ஆகிவிட முடியாது. பல தமிழறிஞர்கள் மிகுந்த நினைவாற்றல் பெற்றுச் சிறப்படைந்துள்ளார்கள். குறிப்பிட்ட சில சங்க இலக்கியப் பாடல்கள்அனைத்தையுமே பாராமல் கூறுமளவிற்குநினைவாற்றல் பலருக்கிருந்திருக்கிறது. அவர்களெல்லாம் அவதானிகள் ஆகிவிடவில்லையே!மேல் நாட்டுக் கவிஞன் மில்டனின் பாடல்களை அப்படியே ஒப்புவித்தவர்கள் அந்நாட்டில் உண்டு. ஜேக்ஸ்

பியரின் சில நாடகங்களைச் சிறிதும் பிறழாமல் ஒப்புவிப்பவர்கள் இந்நாட்டிலும் கூட உண்டு. அவர்களையும் அவதானிகள் என்று ஏற்றுக்கொள்ள முடியுமா?

உடனுக்குடன் ஆசுகவி பாடும் ஆற்றலும் அவதானிகளுக்கு அமைய வேண்டிய ஒன்றாயிற்றே! அகராதிகள் சிலவற்றை நோக்கும்போது நமக்குச் சில உண்மைகள் தெரிய வருகின்றன.

திரு. ந.சி. கந்தையா பிள்ளை அவர்களால் தொகுக்கப் பெற்ற 'செந்தமிழ் அகராதி'யில் அவதானம் என்பதற்கு, கவனம், மறதியின்மை என்ற பொருள்கள் தரப்பட்டுள்ளன. 'கழகத் தமிழ்க் கையகராதி'யில் மறப்பின்மை, கவனம், மேன்மைச் செயல் என்ற பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 'கோனார் தமிழ்க் கையகராதி'யில் ஞாபகத்திறமைச்செயல், கவனம் என்ற பொருள்கள் கூறப்பட்டுள்ளன.

அவதானம் என்பதற்குக் 'கவனம்' என்ற பொருளை மேற் கண்ட மூன்று அகராதிகளுமே குறிப்பிட்டுள்ளன. மறதியற்ற நிலையையும் அவதானம் என்று இரு அகராதிகள் கூறுகின்றன. ஞாபகத் திறமைச் செயல் என்றும், மேன்மைச்செயல் என்றும் கூட அவதானத்தின் பொருள் கூறப்பட்டுள்ளது சிந்தித்தற் குரியது. ஞாபகம் இருந்தால் மட்டும் போதாது; செய்யும் செயலுக்குரிய திறமையும் வேண்டும்; அப்போதுதான் அது மேன்மைச்செயலாகக் கருதப்படும் என்ற நுட்பத்தையே அச் சொற்கள் விளக்குகின்றன.

மேற்கண்ட அகராதிப் பொருட்களை நோக்குமிடத்து, அவதானம் என்பதற்குக் கவனம் என்ற பொருளே பொருந்து மென்று எண்ண முடிகிறது. கவனம் [attention] வேறு; நினைவு [memory] வேறு; நினைவாற்றலும் அவதானத்திற்குத் துணை செய்யலாம்; ஆனால்கவனமே அக்கலையின் வெற்றிக்குப் பெரிதும் வேண்டுவதாகும்.

'தசாவதானி' என்ற சொல்லைக் குறிக்குமாறு 'பதின்கவனகர்' என்ற சொல்லும் இந்நாளில் வழக்கில் உள்ளதை அறிகிறோம். அவதானம் என்பதற்குக் கவனம் என்ற பொருள் இருப்பதுபோல 'அவதானி' என்பதற்குக் 'கவனகர்' என்ற பொருள்தரும் இச்சொல்லாக்கமும் பொருத்தமுடையதே. 'கவனம்' உடையவர்

க்வனகர்' என்று அழைக்கப்படுவது ஏற்புடையதேயாகும்.கவனம் என்ற சொல்லிற்கு போர், படை, கலக்கம், வெப்பம், கருத்து, வேகம், காடு என்ற பல பொருள்களை அகராதிகள் தருகின்றன' 'கவனன்' என்பதற்கு வேகமுடையவன் என்றும், 'கவனித்தல், என்பதற்குக் கருத்தூன்றி அறிதல் என்றும் பொருள் உள்ளதால் அவதானிகளை வேகமாகக் கருத்தூன்றி அறிபவர்கள் என்று கூறலாம்.

# அவதானம் பற்றிய பொதுவான எண்ணங்கள்

## தோன்றிய காலம்

தமிழ்நாட்டில் சித்தர்கள் தோன்றிய பின்னரே அவதானிகள் தோன்றியிருக்கக் கூடும் என்பதை முன்னர்க் கண்டோம். இருப்பினும், முதன் முதலாகத் தோன்றிய அவதானி யார்? அவர் எத்தகைய அவதானங்கள் செய்தார் என்பது இது வரை தெளிவாகத் தெரியவில்லை. கிடைத்துள்ள ஆதாரங்களை வைத்து நோக்குமிடத்து, அவதானிகளுள் காலத்தால் முந்தியவராகக் கருதப்படுவர், 'அட்டாவதானியார்' என்ற காரணப் பெயரையே தமது பெயராகக் கொண்டுள்ள புலவரேயாவார்; அவரது இயற்பெயர் என்னவென்று தெரியவில்லை. ஒருவேளை அவதானத்தில் முதன்முதலாக இவரே பிறர் அறிந்து போற்றும் பெருமையைப் பெற்றிருந்தது கருதி அப்பெயராலேயே இவர் அழைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதவும் இடமுண்டு. அப்படிப் பார்த்தால் அவதானங்களில் காலத்தால் முந்தியது அட்டாவதானமே என்று எண்ண முடிகிறது.

இப்புலவரின் காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு என்று சிலரும், கி.பி. 18ஆம் நூற்றாண்டு என்றுவேறுசிலரும் குறிப்பிட்டுள்ளனர். இவர் கி.பி. 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றுகுறிப்பிடும் 'தமிழ்ப் புலவர் அகராதி'ஆசிரியர் திரு. ந. சி. கந்தையாபிள்ளை அவர்கள், இவரே சுப்ரதீபக் கவிராயராவார் என்றும் குறிப்பிட்டுள்ளார். அப்படி அவர் கூறுவதை உறுதிப்படுத்துவதற்குப் போதிய ஆதாரமின்மையால் அக்கருத்து ஏற்புடையதாகக் கொள்ளவியலாது. எனவே, அட்டாவதானியார் என்பவர் வேறு; சுப்ரதீபக்கவிராயர் என்பவர் வேறு என்பதே பலருக்கும் ஒப்ப முடிந்த முடிபாகும்.

இவர் கி.பி, 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவரே என்று 'The Tamil Literature' என்ற நூலில் திரு. பூர்ணலிங்கம் பிள்ளை குறிப்பிடுகிறார். 'தமிழ்ப் புலவர் வரிசை' என்ற நூலாசிரியர் திரு. சு. அ. இராமசாமிப் புலவரும் அதனையே உறுதிப்படுத்துகின்றார். எனவே அட்டாவதானியார் காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டே எனவும், அவதானக்கலை பிறர்அறிந்து போற்றும்

பெருமையைப் பெற்றது அதன் பிறகே என்றும் துணியலாம் பெரும்பாலான அவதானிகள் கி.பி. 18, 19, 20ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்களே என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தோன்றக் காரணம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி. பி. 13ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு 17ஆம் நூற்றாண்டு வரை சமய காலமாகவே அமைந்துள்ளதை உணர்கிறோம்.பாண்டிய நாடும் சோழ நாடும் அப்போது நாயக்கர்களின் ஆட்சியின்கீழ் இருந்தன. "நாயக்க மன்னர்கள் சமய நூல்களுக்கும், சமயக் கலைகளுக்கும், இலக்கியங்களுக்கும் மதிப்புத்தந்து வளர்த்து வந்த காரணத்தால் அவ்வப்போது சமயச் சான்றோர்கள் தோன்றிச் சிறந்த நூல்கள் எழுதினார்கள். சில புலவர்கள் தல புராணங்கள் பாடி அந்தந்த ஊர்மக்களை மகிழ்வித்தார்கள். சிறு சிறு நூல்கள் இயற்றி அங்கங்கே இருந்த செல்வர்களையும் சிற்றரசர்களையும் மகிழ்வித்து அவர்கள் தந்த செல்வத்தால் மனநிறைவு கண்ட புலவர்களும் உண்டு'' என்கிறார் டாக்டர் மு.வரதராசனார். எனவே அத்தகைய சூழ்நிலையில் சேக்கிழார், கம்பர் போன்ற புலவர்கள் தோன்றிச் சிறந்த காப்பியங்கள் படைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. சமயஉணர்வு ஓங்கி வந்த காரணத்தாலோ என்னவோ வடமொழி மோகமும் அப்போது இங்கு வளர்ந்து வந்தது. வடமொழியிலிருந்து பல புராணங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. வடமொழிச் சிவசங்கரசங்கிதை தமிழில் கந்தபுராணமாகியது; பாரதத்தில் வரும் நளன் கதை நளவெண்பாவாக மாறியது. இவைபோன்று பல நூல்கள் மொழி பெயர்க்கப் பெற்றன.

அதே நேரத்தில் வேறு ஓர் பணியும் தீவிரமாக நடைபெற்றது. அதுவே தலபுராணங்கள் பாடுவதாகும். போட்டி போட்டுக் கொண்டு ஒவ்வொரு புலவரும்பல தல புராணங்களைப் பாடினர். இத்தகைய சூழ்நிலையில்தான் தமிழ்நாட்டில் அவதானிகள் தோன்றியுள்ளதை அறிகிறோம். அவதானிகள் அனைவருமே புலவர்களாகவும் இருந்துள்ளதால் அவர்களில் சிலர் தல புராணங்கள் பாடியவர்களாகவும், வேறு சிலர் செல்வர்களையும் சிற்றரசர்களையும் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றவர்களாகவும் இருந்துள்ளதை அறிகிறோம். ஆற்றல்மிக்க அந்தப் புலவர்களே ஒருவேளை வேறுகாலத்தில் வாழ்ந்திருந்தால் சிறந்த காப்பியங்களைப் படைத்திருக்கவும் கூடும். ஆனால் கி.பி. 17 ஆம்

நூற்றாண்டிற்குப் பிறகு தோன்றிய அவர்களால் ஆசு கவி பாடுவதற்கும்,அள்ளித் தந்த வள்ளல்களைத் துதிபாடுவதற்குமே முடிந்தது; காலத்தின் கோலம் அப்படி!

எனவே, வாழ்ந்த காலத்திற்கு ஏற்பத் தங்கள் புலமையைப் பயன்படுத்திக் கொண்டாலும் அவதானம் செய்வதில் சிறந்து நின்ற அவர்களது ஆற்றல்களை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது.

## வடசொல் ஏன்?

அவதானம் செய்தவர்கள் அனைவருமே அருந்தமிழ்ப் புலவர் களே! அவர்கள் அவதானம் செய்த மொழியும் தமிழே! அவ தானத்தின்போது அவர்கள் பாடிய ஆசுகவிப் பாடல்களும் அழகு தமிழ்ப் பாடல்களே! அப்படியிருந்தும் இந்த அரிய கலையின் பெயர் மட்டும் வடசொல்லாக இருப்பானேன் என்ற ஐயம் எல்லோர்க்கும் எழுவது இயல்பே. அதற்குரிய முக்கியக் காரணம், இக் கலை இந்நாட்டில் வளரத் தொடங்கிய நேரம் இங்கிருந்த வடமொழி மோகமே! பெருமைக்குரிய எதையுமே வடசொல்லால் சொல்லும்போது தான் அது புனிதத்தன்மை யடைகிறது என்ற போலிக்கொள்கை இன்னமும் நம்மில் பலரிடம் காணப்படுகிறதே! அதனால்தான் கவனக்கலை அவதான மாக இங்கே அவதரித்துள்ளது.

அன்றியும், அவதானத்தில் சிறந்தவராக முதலில் நமக்கு அறிமுகமாகும் 'அட்டாவதானியார்' என்ற புலவரிலிருந்து, அவ தானம் செய்த பலர் வடமொழியை நன்கு கற்றுணர்ந்த அந்தணர்களாகவே உள்ளனர். என்னதான் தமிழில் ஆசுகவிகள் பாடினாலும் அவர்களுக்குத் தம் வீட்டு மொழியிலேயே விருப்பம் அதிகம் இருக்கும். அதனாலும் இக்கலை வடசொல்லாலேயே அழைக்கப்பட்டது என்றும் கருத இடமுண்டு. அந்தணர் அல்லாத அவதானிகளும் கூட வடமொழிவாணர்களாக விளங்கியிருப் பதையும் அறிகிறோம்.

அழகிய மணவாளதாசர் எனப்பவரால் பாடப்பெற்ற 'அஷ்டப் பிரபந்தம்' ஒரு தமிழ் நூலே. ஆனால் வடமொழி மோகம் மிக்கிருந்த காலத்தில் தோன்றியதால் இந்நூலின் பெயரும் வடமொழியாகவே அமைந்து விட்டது. இதே உண்மை அவதானத்திற்கும் பொருந்தும்.

## கலைக்களஞ்சியம் கூறும் கருத்து

ஒரே சமயத்தில் பல செயல்களைச் செய்து காட்டும் சாதனை யினையே அவதானத்தில் காண்கிறோம். கைவிரல்கள் லாடச் சங்கிலியைக் கழற்ற, காதுகள் பிறர் கூறும் கேள்விகளைக் கூர்ந்து நோக்கமுதுகில் எறியப்படும் நெல்லையோ கல்லையோகவனித்துக் கணக்கெடுக்க இப்படிப் பல செயல்கள் ஒரே நேரத்தில் செய்து காட்டப்படும். பொதுவாக இதனை நோக்குமிடத்து, அவதானம் செய்பவர்களுக்கு ஒரே நேரத்தில் பல பொறிகளாலும் அறிவைப் பெறும் ஆற்றல் உண்டோ என்று தான் எண்ணத் தோன்றும். ஆனால் அப்படியல்ல என்று நம் ஐயத்தைத் தீர்த்து வைக்கிறது கலைக்களஞ்சியம்.

"ஆன்மா மனத்துடனும், மனம் இந்திரியத்துடனும் இந்திரியம் புலனுடனும் சேர்ந்தால் வெளிப்பிரத்தியட்சமும் ஏற்படுகிறது. ஒரே சமயத்தில் இரண்டு இந்திரியங்களுடன் சேராதபடியால் ஒரே சமயம் இரண்டு இந்திரியங்களால் அறிவு கிடையாது.அஷ்டாவதானம், சதாவதானம் என்பன வெல்லாம் மிக விரைவாக வெவ்வேறு இந்திரியங்களால் ஞானமேற்படுவதை ஒரே சமயத்தில் ஏற்படுவதுபோல் சொல்கிறோம்" என்று குறிப்பிடுகிறது.

இதனை நோக்கும்போது வேறு ஓர் உண்மையும் நமக்குப் புலப்படுகிறது. அவதானம் செய்வதற்கு நினைவாற்றலும், கவனமும் இருந்தால் மட்டுமே போதாது; மிக விரைவாக வெவ் வேறு பொறிகளின் மூலம் அறிவைப் பெறக்கூடிய ஆற்றலும் கைவரப்பெறுதல் வேண்டும். அத்தகைய பயிற்சியில் போதிய தேர்ச்சியைப்பெறவில்லையென்றால்வெறும் நினைவாற்றலாலும் கவனிக்கும் திறத்தாலும் அவதானியாகி விடமுடியாது என்பதும் உணரத்தக்கது.

## உளவியலார் கருத்து

அவதானக்கலைக்கு அடிப்படைத் தேவையாகக் கருதப் படுவது கவனமே. அக் கவனம், நாம் அறிவுபெறுவதற்கு எப்படித் துணைசெய்கிறது என்பதையும், அக்கவனத்திற்கும் மனத்திற்கும் உள்ள தொடர்பு என்ன என்பதனையும் உளவியல் அறிஞர். டாக்டர். எஸ்.பி. ஆதிநாராயண் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்:

"அறிவுக் கதையில் சம்பந்தப்பட்ட அகவயக் காரணங்களில் ஒன்றுதான் கவனம் என்பது. நம்மைச் சுற்றியுள்ள பல நிகழ்ச்சிகளிலிருந்து சில பகுதிகளை நமது கவனப்பொருள்களாகப் பொறுக்கித் தேர்ந்தெடுப்பது நமது சக்திக்குட்பட்டது. 'கவனம்' என்பது ஒரே காலத்தில் நிகழும் பலபொருள்களிலிருந்து அல்லது சிந்தனைத் தொடர்களிலிருந்து ஒன்றைத்தெளிவான உயிர்ப்புள்ள வடிவில் மனத்தால் எடுத்துக்கொள்வதாகும்.

புலனுணர்ச்சிகளைக் கவனிக்காவிட்டால், அவை நமக்கு உண்மையாக மாட்டா. இவ்விதம் அறிவைச் சேகரிக்கும் செயலில் கவனம் அச்சாணி அன்னதோர் நிலையை வகிக்கிறது. கொள்கை ஆய்வுகளைத் தவிர, அது ஏராளமான நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். வகுப்பறையில் மாணவர்களின் கவனத்தை நிலைக்கச் செய்வது என்றபிரச்சினையில் கல்வியறிஞர் எல்லோருமே அக்கறை கொண்டுள்ளனர்" என்று விளக்கிச் செல்கிறார் அந்த அறிஞர்.

ஒரே காலத்தில் நிகழும் பல பொருள்கள் அல்லது சிந்தனைத் தொடர்களிலிருந்து ஒன்றைத் தெளிவான உயிர்ப்புள்ள வடிவில் எடுத்துக்கொள்வதுதானே அவதானிகள்செயலாகும்! அதனையே 'கவனம்' என்று குறிப்பிடும் அறிஞர், அப்படி எடுக்கத் துணை செய்வது மனமே என்றும் குறிப்பிடுவதிலிருந்து அவதானக் கலைக்கும் மனத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பு நன்கு விளங்கும்.

# அவதானத்தின் அருமை

## கவிராயர் பாடல்

அவதானத்தின் இயல்பினையும் அருமையினையும் விளக்கும் விதத்தில் ஓர் இனிய பாடலையே வடித்துள்ளார் சரவணப் பெருமாள் கவிராயர். 'நூறு அவதானங்கள் செய்யும் நுட்பம் அவருக்குத் தெரிந்திருந்தமையால் அவரது அனுபவமே பாடலாக அமைந்துள்ளதையுணர்கிறோம். அதிக அவதானங்கள் செய்வதில் மட்டுமே தாம் வல்லவரல்லர்; அரிய பாடல்கள் பாடுவதிலும் வல்லவர் என்பதைக் காட்டிய அக்கவிராயரின் இருபத்தெட்டுச் சீர்க் கழிநெடிலடியால் அமைந்த ஆசிரிய விருத்தத்தின் ஒரு பகுதியே இங்குக் காட்டப்படுகிறது.

"மாறாமல் வாய்வேலு மயிலுமென வேசொல்ல
வாசகங் கைகள் எழுத
வருகணக் கொருபுறம் தீரமற் றொருபுறம்
வரைந்திடும் இலக்க மாற
வளைதிரைக் குட்சிறிது கல்லணி வகுக்கின்ற
வன்கணக் கினிது பகர
மருவுசொக் கட்டானும் விளையாட மறைவாக
வைத்தசது ரங்க மாடக்
கூறாக வெட்டெழுத் தாணியெழு தும்படிக்
குங்கவிதை பகர வதிலோர்
கூரெழுத் தாணிசது ரங்கமுது குப்புறம்
குதிரையடி வெண்பா வாகக்
கூறுபுல வோர்சபையில் அட்டாவ தானமுல
கோர்புகழ வேநடத்த........"

மேற்கண்ட பாடலில் அட்டாவதானம் எவையென்று கூறியிருப்பதுடன் அவைகளைச் செய்வதில் உள்ள சிரமங்களையும் சுவைபடக் கூறியுள்ளதை யுணர்கிறோம். புலவர்கள் செய்த அவதானங்களின் எண்ணிக்கைகளுக்கேற்ப அந்தந்த அவதானி களாக அவர்கள் அழைக்கப்பட்டிருப்பினும், எண்ணிக்கையில் உள்ள ஒற்றுமை அவர்கள் செய்த அவதானங்களிலும் இருந்த தாகத் தெரியவில்லை.ஏனெனில், அட்டாவதானமாக எவைகளை இங்கு சரவணப்பெருமாள் கவிராயர் குறிப்பிடுகின்றாரோ அது வேறு புலவர் செய்த அட்டாவதானத்துடன் வேறுப்பட்டிருப் பதையும் அறிகிறோம். ஒரு சில அவதானங்கள் எல்லாப்

புலவர்களாலுமே செய்யப்பெற்றுள்ளன. குறிப்பாக முருகனின் திருநாமத்தை மாறாமல் சொல்லும்அவதானத்தை எல்லோருமே பின்பற்றியுள்ளனர். வேற்று மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே விதிவிலக்காக இருக்கக்கூடும்.

எது எப்படியிருப்பினும், அவதானங்களைச் செய்வது அரிய செயலேயாகும். வேறு ஒன்றைப் பார்த்துவிட்டாலே ஏற்கெனவே செய்த செயலை மறந்துவிடும் தன்மை நம்மில் பலருக்கு இயல்பாக அமைந்ததுபோல் காணப்படுகிறது. ஆனால் 'வேலும் மயிலும்' என்ற சொல்லை மாறாமல் வாய்கூறிக் கொண்டேயிருக்க, கைகள் பிறர் கூறும் வாசகங்களை எழுதுவதுடன் கணக்குகள் போட்டு விடைகளும் காட்ட, அத்துடன் சொக்கட்டான், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளும் ஆட, இவையனைத்திற்கு மேலாக இலக்கணக் கட்டுப்பாடுடைய வெண்பாப் போன்ற பாடல்களும் பாடும் ஆற்றலை அவதானிகள் பெற்றிருந்ததை எண்ணுந்தோறும் வியப்பே மேலிடுகிறது.

அவதானிகளாக ஆக விரும்புபவர்கள் மனத்தின் மாண்பினால் பெறக்கூடிய கவனம், நினைவாற்றல் ஆகிய ஆற்றல்களுடன் சொக்கட்டான், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளிலும் கூடத் தேர்ச்சிபெற்றிருப்பது அவசியம் என்று தெரிகிறது.

## எல்லோரும் கவிஞர்களே

அவதானிகளில் பலர் விளையாட்டு வீரர்களாகத் திகழ்ந்துள்ளது போலவே அருந்தமிழ்க் கவிஞர்களாகவும் சிறந்துள்ளார்கள். சதுரங்கம் போன்ற விளையாட்டுகளை அவதானத்தில் செய்யாதவர்களும் கூடச் சிலர் உண்டு. ஆனால் ஆசுகவி பாடாத அவதானிகள் எவருமே இருந்ததாகத் தெரியவில்லை. எனவே அவதானிகள் எல்லோருமே கவிஞர்களாகவே காட்சியளிக்கின்றனர்.

இரண்டு வரிகளைக்கூட எதுகை மோனையுடன் பாடமுடியாது தோல்வியைத் தழுவியதன் விளைவுதான், எந்த முறையுமின்றி மனம்போன போக்கில் இன்று சிலர் எழுதிவரும் வசன கவிதைகள். ஆனால் அவதானிகளில் பலர் இருபத்தெட்டுச் சீர், ஐம்பத்தாறு சீர் அமைந்த விருத்தங்களையெல்லாம் பாடியுள்ள பாங்கையும், எதுகையும் மோனையும் தட்டுப்பாடின்றி அவர்தம் பாடல்களில் அமைந்துள்ள அழகையும் எண்ணி

வியக்காதார் எவருமிருக்க முடியாது. அந்த அளவு தமிழ்தோய்ந்த நெஞ்சினராக அவர்கள் இருந்தமையால்தான் சொல்வளம் பெற்றுப் பொருள்நலம் சிறக்க அவர்களால் பாடமுடிந்தது.

'வெண்பாப் புலிகள்' என்ற பட்டப்பெயர்கள் அவதானிகளுக்கே முற்றிலும் பொருந்தும். ஈற்றடி கொடுத்துப் பாடுமாறு கேட்பினும், முதற்சொல்லும் இறுதிச்சொல்லும் கொடுத்துப் பாடச் சொல்லினும், ஏதேனும் கருத்தை விளக்குமாறு பாட வேண்டினும் உடனே பாடிக்காட்டிப் பாராட்டைப் பெற்றுள்ள பெருமை அவதானிகளையே சாரும்.

எட்டெழுத்தாணிச்செய்யுள் என்பதும் அவதானங்களில் ஒன்றாகும். "பதியின் பெயரும் தெய்வத்தின் பெயரும் முதலெழுத்துக் கூறினால், கூறியபடி அமைத்து, வெண்பா, கலித்துறை, கலிவிருத்தம் என்னும் இம் மூன்று பாக்களுள் ஆறுபேர்களுக்கும், அவ்வாறே கொம்பில்லா வண்ணம் ஒருவர்க்கும், சதுரங்க மனையில் எந்த மனையை முதலாக நடத்தும்படி கேட்கினும் குதிரை பாயும் முறைப்படி மனையொன்றுக்கு எழுத்தொன்று வீதம் அறுபத்தி நான்கு மனைகளிலும் அறுபத்துநான்கு எழுத்துக்களை,எழுத்தும் குதிரையுமாக நடக்கச்செய்து குதிரையடி வெண்பா ஒருவர்க்கும் ஆகக் கூடுதல் எட்டுப் பேர்களுக்கும் எட்டுச்செய்யுள் எழுத்தெழுத்தாகச் சொல்லுதல் எட்டெழுத்தாணிச் செய்யுள் எனப்படும்" என்று 'தமிழ்ப் புலவர் அகரவரிசை' மூன்றாம் பகுதியில் கூறப்பட்டுள்ளது. இத்தகைய செய்யுள் பாடுவதில் சிறந்து நின்றவராக அட்டாவதானம் பொ.மீ. இராமலிங்கக் கவிராயர் என்பவர் அந்நூலில் குறிப்பிடப்படுகிறார்.

## சோதனையும் சாதனையும்

அவதானங்களைச் செய்வது எவ்வளவு அரிய செயல் என்பதை இதுவரையில் கண்டோம். ஆனால் அத்தகைய அவதானங்களை ஒழுங்காகச் செய்யும்போதும்கூட, செய்பவர்களைக் குறைகூறுபவர்களும் இருந்திருக்கத்தான் செய்கின்றார்கள். அவதானிகளின் ஆற்றல்களைச் சோதிப்பதற்காக வேண்டிச் சிலர் சில சோதனைகளைச் செய்ததுண்டு. அவதானிகள் மீதிருந்த அழுக்காற்றினாலோ அன்றிப் பிற காரணங்களாலோ வேண்டுமென்றே அவர்களை வேதனைப் படுத்தியவர்களும் உண்டு.

சின்ன இபுறாகீம் மொகியதீன் என்பவர் ஈழ நாட்டைச் சேர்ந்த ஓர் அட்டாவதானி. ஒரு நாள் இவர் அட்டாவதானம் செய்யும்பொழுது பாடிய பாடலொன்றினை முகம்மது காசிம் என்பவர் வேண்டுமெனவே பிழையாக எழுதிக்கொடுத்து அதில் குற்றம் உள்ளது என்றும் சாதித்தார். அதைத் தாங்கமுடியாத அட்டாவதானியார், 'ஆவென்னு மட்சரத் தாதியென் றறியாது'' எனத் தொடங்கும் பாடலைப் பாடி அவரைக் கண்டித்தார் என்று, ஈழநாட்டின் 'தமிழ்ச்சுடர் மணிகள்' என்ற நூல் பகர்கிறது. சோதனைகளையும் சாதனைகளாக மாற்றும் திறமை அவர்களுக் கிருந்தமையால்தான் சென்ற இடமெல்லாம் வென்று திரும்பினார்கள்.

## 'ஐ' எனத் தொடங்கி 'ஐ' என முடிதல்

பொதுவாக வெண்பாப் பாடுவதென்பதே அரிய செயல்; அதிலும் நிபந்தனையோடு உடனுக்குடன் பாடுவதென்றால் கேட்கவா வேண்டும்? உமறுப்புலவரின் பேரர் அப்துல்காதர் ஓர் அட்டாவதானி. ஒரு முறை அவர் அட்டாவதானம் செய்து கொண்டிருக்கும்போது அன்பர் ஒருவர் ஒரு வேண்டுகோள் விடுத் தார். 'ஐ' எனத் தொடங்கி, 'ஐ' என முடியுமாறும், இடையில் ஆனைமுகன் பெயர்வருமாறும் வெண்பாப் பாடவேண்டும் என்பதே அவரின் வேண்டுதல். அடுத்த நிமிடமே புலவர் திருவாயிலிருந்து ஓர் அரிய வெண்பா மலர்ந்தது.

> ''ஐயா விரிசடையோன் அண்ணலுக்கு முன்னுதித்த
> மெய்யாங் குணதீப வித்தகனாம்— வையமெல்லாம்
> போதமுறும் வேழமுகப் புண்ணியனைப் போற்றுதற்குச்
> சாதனைசெய் பால்சாதத் தை''

என்பதே அப்பாடல். வேழமுகப் புண்ணியனின் திருநாமம் அமையுமாறும், பால் சாதத்தைச் சாதனை செய்யுமாறும் முகம்மதியப் புலவரான அவர் மத வேறுபாடு நோக்காது பாடியிருப்பது பாராட்டற்குரிய அரிய பண்பாகும்.

## உண்ணக் கொடுத்து எண்ணக் கூறுதல்

நமக்கு அன்போடு ஒருவர் பலாப்பழம் கொண்டுவந்து தந்தால் அதை எப்போது உண்ணலாம் என்றோ, அப்பழம் எப்படி இனிக்கும் என்றோ தான் பொதுவாக எண்ணத் தோன்றும். ஆனால் அவதானிகளுக்கு அப்பழத்தை ஒருவர் கொடுத்தால் அவர் கள் அப்படி எண்ணமுடியாது. அவர்கள் எண்ண வேண்டிய வேலை

வேறு. மேற்கண்ட அட்டாவதானிக்கும் இதே நிலை நேர்ந்தது. அன்பர் ஒருவர் பலாப்பழத்தைக் கொடுத்து எத்தனை சுளைகள் உள்ளன அதில் என்பதைப் பாடலாக வடிக்குமாறும் வேண்டினார். இதோ, அவதானியார் பாடல்!

"மாணிக்கம் பிள்ளை மகனாம் பெருமாள்தம்
காணிக்கை யாயிங் களித்த - பாணிக்கைத்
தின்னத் தெவிட்டாத தேனார் பலாப்பழத்தில்
தொண்ணூற்றி யாறு சுளை"

## மொட்டைத்தலையும் முழங்காலும்

பொருந்தாத ஒன்றைப் பற்றிப் பேசும்போது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாகக் கூறுவோம் ஆனால் மொட்டைத்தலையை முதற்சொல்லாகவும் முழங்காலை ஈற்றுச்சொல்லாகவும் அமைத்து ஓர் வெண்பாப் பாடுமாறு தசாவதானி ஆறுமுகம் பிள்ளையை ஒருவர் வேண்டினார். பொருந்தாது என்று மறுக்காமல் பொருத்தமாக ஓர் வெண்பாவைப் பாடி மற்றவர் வியப்படையச் செய்தார் அவதானி.

"மொட்டைத் தலையன், முழுநீறன், முந்துமணிக்
கட்டை அணிந்த கழுத்தழகன் - எட்டியிடச்
சேணு நடக்குத் திருப்பழநி வேலவனைக்
காண நடக்குமுழங் கால்" என்பதே அப்பாடல்!

மேற்கண்ட நிகழ்ச்சிகளிலிருந்து அவதானக்கலையின் அருமையை நாம் நன்குணரலாம்.

# அவதானத்தின் வகைகள்

அவதானம் பல வகைப்படும். கிடைத்துள்ள குறிப்புகளின் படி பார்த்தால் காலத்தால் முந்தியதும், பல அவதானிகள் செய்து சிறப்படைந்ததும் அட்டாவதானமே. அம்முயற்சியே படிப்படியாக வளர்ந்து தசாவதானமாகவும், சோடசாவதான மாகவும் வளர்ந்துள்ளதை அறிகிறோம். எனினும் அம்முயற்சி யில் ஈடுபட்டு வெற்றிபெற்றவர்களாகச் சிலரைத் தான் நாம் காணமுடிகிறது. அதே நேரத்தில் அட்டாவதானத்திலிருந்து குறைந்தநிலையில் சட்டாவதானத்தையும் காண்கிறோம்.

திருக்குறளில் அவதானம் செய்த சிலரையும், இருநூறு அவதானம் செய்த ஒருவரையும், அட்சராவதானம் செய்த ஒருவரையும், தமிழுடன் கன்னட மொழியிலும் அவதானம் செய்த ஒருவரையும் நாம் இந்நூலின்கண் காணப்போகிறோம்.

### சட்டாவதானம்

இது ஆறு வகையான அவதானங்கள் செய்வதைக் குறிக்கும். 'சட்' என்ற வடசொல் தமிழில் ஆறு என்ற எண்ணைக்குறிக்கும். சட்முகன் என்பதே சண்முகன் என்று திரிந்து முருகனைக் குறிக்கும் சொல்லாக வழங்கப்படுகிறது. இவ்வகை அவதானங் கள் செய்தவர்கள் மிகச் சிலராகத்தான் இருக்க வேண்டும். கிடைத்துள்ள குறிப்புகளின்படி இரு அவதானிகளே சட்டாவ தானிகளாக உள்ளனர்.

அட்டாவதானம் செய்ய வேண்டுமென்று எண்ணி முயன்ற சிலர் அம்முயற்சியில் சிறிது தோல்வியைக் கண்டிருக்கக் கூடும். இருப்பினும், அவதானம் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் அவர்களுக்கிருந்தமையால் இயன்ற வரை முயன்று ஆறு அவ தானங்களையாவது சிறப்பாகச்செய்திருப்பார்கள். அப்போதிருந்த எந்த அவதானத்திலும் அது அடங்காமையால் அதையே ஒரு தனி அவதானமாக அவர்கள் வகைப்படுத்தியிருப்பார்கள். அப்படித்தான் சட்டாவதானம் தோன்றியிருக்க வேண்டும். சட்டாவதானிகளாகக் காணப்படுகின்ற இருவருமே இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்களே. முந்திய நூற்றாண்டுகளில் இருந்த அவதானம் செய்யும் ஆர்வம் பின்னர்க் குறைந்து விட்டது என்பதற்கு சட்டாவதானமும் தக்க சான்றாகும். காலப்போக்கில் நான்கு அவதானம், இரண்டு அவதானங்களும் கூடத் தோன்றினாலும் வியப்பதற்கில்லை.

## அட்டாவதானம்

எட்டு வகையான அவதானங்கள் செய்வதை அட்டாவ தானம் என்று கூறுகிறோம். 'அஷ்டம்' என்ற வடசொல் தமிழில் எட்டு என்ற எண்ணைக் குறிக்கும். அஷ்டாவதானம் என்பது தமிழ் ஒலிப்பில் அட்டாவதானமாக மாறியது. அவதான வரலாற்றில் முதலிடம் பெறுவது அட்டாவதானமே. காலத் தால் முந்திய தோடன்றிப் பெரும்பாலோர் செய்ததும் இவ்வவ தானமே.

அவதானம் செய்யத் தொடங்கியவர்கள் எட்டு என்ற எண்ணை ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்பது சிந்தனைக்குரியது. கணித வகைப்படி நினைவில் வைத்துக் கொள்வதற்கு இந்த இரட்டைப்படை எண் உதவியாக இருக்கும் என்று எண்ணித் தேர்ந்தெடுத்திருப்பார்களோ என்றும் நினைக்க இடமுண்டு. ஏனெனில், எல்லா அவதானங்களுமே இரட்டைப் படை எண் களாக [6, 8, 10, 16, 100] அமைந்திருப்பது இக் கருத்தை உறுதிப் படுத்துகிறது. வேறு ஓர் உண்மையினையும் இது தொடர்பாக நினைத்துப் பார்க்கவேண்டிய நிலையில் உள்ளோம். அவதானிகள் அனைவரும் இறையுணர்வில் மேலோங்கி நின்றவர்கள். அதனால் தான் தமது வழிபடு தெய்வத்தின் திருநாமத்தைத் தொடர்ந்து உச்சரிப்பதையும் ஒரு அவதானமாக அவர்கள் செய்து வந்துள்ளார்கள். இதை நினைவிற்கொண்டு நோக்குங்கால் அவதானக்கலை தமிழகத்தில் தோன்றிய கி.பி. 17 ஆம் நூற்றாண் டில் பக்தியுணர்வும் மேலோங்கியிருந்தமையால் எட்டு என்ற எண் இறைவனோடு தொடர்புடையதாக இருந்திருக்குமோ என்ற ஐயமும் எழுகிறது.

திருமாலின் திரு நாமம் 'அஷ்டாட்சரம்' எனப்படும். அவர் புகழைப் பேசும் நூல் 'அஷ்டப் பிரபந்தம்' என்று அழைக்கப் படுகிறது. எனவே, காத்தற்கடவுளின் திருநாமத்தை நினைத்தே எட்டு என்ற எண்ணைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். முதல் அவ தானியாகக் கருதப்படும் அட்டாவதானியாரும் கூட திருமால் பக்தரான ஐயங்கார் பிரிவைச் சேர்ந்தவரே!

> "காரங்க மேனிக் கடவுள் இருக்குமந்தச்
> சீரங்கத் தேபிறந்தேன் ... " என்று தன்னைப் பற்றி

அவர் பாடும் பாடலிலும் திருமாலைக் குறிப்பிடுகிறார். அவர் பிறந்த ஊர் சீரங்கம் என்பதும் குறிப்பிடத் தக்கது.

**தசாவதானம்**

ஒரே நேரத்தில் பத்து வகையான அவதானங்கள் செய்வது தசாவதானம் எனப்படும். 'தசம்' என்ற வடசொல் தமிழில் பத்து என்ற எண்ணைக் குறிக்கும். தமிழ் உச்சரிப்பு முறைக்குப் பொருந்துமாறு அச் சொல் அமைந்துள்ளதால் 'தசாவதானம்' என்றே வழங்கப் படுகிறது. அட்டாவதானம் செய்து கொண்டிருந்த சிலர் அத்துடன் அமைந்து விடாமல் அதற்கு மேலும் சில அவதானங்களைச் செய்ய முற்பட்டிருக்கின்றனர். அம் முயற்சியில் கிடைத்த முதல் வெற்றியே தசாவதானம். இருப்பினும் அம் முயற்சியில் ஈடுபட்டவர்கள் மிகச் சிலராகவே காணப்படுகிறார்கள். ஆறு தசாவதானிகளையே இது வரையில் காண முடிகிறது. 'தசம்' என்ற எண்ணும் கூடத் திருமாலுடன் தொடர்புடையதே! அவர் எடுத்த அவதாரங்களைத் 'தசாவ 'தாரம்' என்றே குறிப்பிடுகிறார்கள், அதை மனத்திற் கொண்டே தசாவதானம்' உருவாக்கப் பட்டிருக்கலாம்.

**சோடசாவதானம்:**

ஒரே நேரத்தில், பதினாறுபேர் கேட்கின்ற கேள்விகளுக் கெல்லாம் பதில் கூறுகின்ற விதத்தில் பதினாறு அவதானங்களைச் செய்து காட்டுவது சோடசாவதானம் எனப்படும். சோடசம் என்ற வடசொல் பதினாறு என்ற தமிழ் எண்ணைக் குறிக்கும். அதனால் சோடசாவதானம் என்று இது பெயர் பெற்றது. அவதான முயற்சியில் இது ஒரு சிறந்த வெற்றியையே குறிக்கும்.

அவதானங்கள் அனைத்தும் இரட்டைப் படை எண்களாகவே அமைந்துள்ளன என்பதை முன்னர்க் குறிப்பிட்டோம், அட்டாவதானம் செய்த ஒருவர் ஒரு இரட்டை அவதானங்களை அதிகம் செய்ததால் தசாவதானம் தோன்றியது. அது ஒரு வகை முயற்சி. அட்டாவதானம் செய்த வேறொரு புலவர், அட்டாவதானத்திற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் போல இருமடங்கு எடுத்துக் கொண்டால் என்ன என்று தீவிரமாக முயற்சித்ததன் பயனாகச் சோட சாவதானம தோன்றியது. இரண்டு எட்டுக்கள் பதினாறு ஆவது போல, இரண்டு அட்டாவதானங்கள் சோடசாவதானமாக மாறியது. பத்திற்குப் பிறகு பன்னிரண்டு, பதினான்கு என்றெல்லாம் அவதானங்கள் ஏற்படாமல் பதினாறாக ஏற்பட்டதற்கு அதுவே ஏற்ற காரணமாக இருக்க முடியும். இவ்வகை அவதானமும் செய்வதற்குச் சிரமமானது என்பது கருதியோ என்னவோ சிலரே இதைச் செய்துள்ளனர். சோடசாவதானிகளாக நான்கு கவிராயர்களையே நாம் அறிய முடிகிறது.

## சதாவதானம்

ஒரே சமயத்தில் நூறு பேர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூறும் விதத்தில் நூறு வகையான அவதானங்களைச் செய்வதே சதாவதானம் எனப்படும். 'சதம்' என்ற வட சொல் நூறு என்று தமிழில் பொருள்படும். எனவே, நூறு அவதானங்களைச் செய்வது சதாவதானம் என்று அழைக்கப்படுகிறது. அவதான வரலாற்றில் இது ஓர் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

எட்டு, பத்து, பதினாறு என்று நெருங்கிய எண்களிடையே மட்டும் முன்னேற்றம் காட்டி வந்த நிலையிலிருந்து திடீர் முன்னேற்றமாக ஒரே சமயத்தில் நூறு அவதானங்களைச் செய்து காட்டியது வியக்கத்தக்கதாகும். இடையில் நாற்பது ஐம்பது என்ற எண்களையெல்லாம் கடந்து நேராக நூறுக்குச் சென்றிருப்பது ஏன் என்ற ஐயம் எழக் கூடும். பத்தைப் பத்தால் பெருக்கினால் நூறு ஏற்படும். அது போல, தசாவதானம் செய்ய முற்பட்ட அப் புலவர்கள் அதைப் போல் பத்து மடங்கு முயற்சி எடுத்துக் கொண்டதன் விளைவாகச் சதாவதானம் தோன்றியிருக்க வேண்டும். அவதானம் செய்பவர்கள் கவனம் வைத்துக் கொள்வதற்கு மேற்கண்ட எண்களின் அமைப்பு நிச்சயம் துணை செய்திருக்க வேண்டும். இல்லையென்றால் பதினாறிலிருந்து நூறு செல்லும் துணிவு பிறந்திருக்காது. சதாவதானிகள் அனைவருமே காலத்தால் பிந்தியவர்களாகவே காணப்படுகிறார்கள். கி. பி. 19, 20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்களே அவர்கள். எனவே, ஏனைய அவதானங்கள் தோன்றி அதில் பலர் பெயர் பெற்று விட்டதால் அவர்களினின்றும் வேறுபட்டுச் சிறப்படைய வேண்டும் என்ற சிலரின் விருப்பமே சதாவதானம் தோன்றக் காரணமாயிற்று. இந்த அரிய அவதானத்தையும் கூட பத்துப் பேர் செய்து சிறப்படைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## பிற அவதானங்கள்

நூறு அவதானங்களை ஒரே சமயத்தில் செய்வதே எவ்வளவு அரிய செயல் என்பதை முன்னர்க் கண்டோம். ஆனால் ஒரே சமயத்தில் இரு நூறு அவதானங்களைச் செய்த ஒருவரும் கி.பி. 19 ம் நூற்றாண்டில் இந்நாட்டில் வாழ்ந்திருந்ததை அறிகிறோம் அவர் ஒருவரே அவ்வகை அவதானத்தில் சிறப்படைந்துள்ளார். அவருக்குப் பிறகு அதை யாரும் தொடர்ந்ததாகத் தெரியவில்லை. அதனால், அந்த அவதானத்திற்கும் ஒரு வடசொல் தோன்ற வாய்ப்பில்லாமற் போய் விட்டது.

எண்களின் அடிப்படையில் பொதுவாக அவதானம் செய்தவர்களையே இது வரையில் கண்டோம். ஆனால் திருக்குறள் ஒன்றையே களமாக அமைத்துக் கொண்டு அவதானம் செய்த திருக்குறள் அவதானிகளும் சிலர் இங்கு வாழ்ந்திருந்தார்கள். அவர்களும் அட்டாவதானம் செய்தாலும் அவதானத்திற்குரிய கேள்விகள் அனைத்தும் திருக்குறளிலிருந்தே கேட்கப்பட வேண்டும். இன்றும் கூடத் திருக்குறள் அவதானியாகச் சிறப்புப் பெற்று வருகின்ற 'நினைவுக்கலை யேந்தல்' திரு. இராமையா அவர்கள் பத்து அவதானங்களை ஒரே சமயத்தில் நிகழ்த்திக் காட்டும் ஆற்றல் பெற்றவராவார். இப்போது அவர் பதினெட்டு அவதானங்களைச் செய்யும் நிலைக்கும் உயர்ந்து வருகின்றார்.

திருக்குறள் அவதானிகளைப்போல 'அட்சராவதானி' என்று ஒருவரும் வாழ்ந்துள்ளார். ஆயிரம் அட்சரங்களை எவ்வாறு மாற்றியமைப்பினும் முறையாக அமைத்துப் படிக்கும் பாங்கில் அவர் சிறப்படைந்துள்ளார்.

தமிழோடன்றிக் கன்னட மொழியிலும் அவதானங்கள் நடத்திச் சிறப்புப் பெற்ற ஒருவரையும் காண்கிறோம். அட்டாவதானிகள் வரிசையில் அவரும் அடங்குவார்.

## அவதானங்கள் எவை?

அவதானங்களின் வகைகள் யாவை என்பதை இது வரையில் கண்டோம். எண்ணிக்கைகளுக் கேற்ப வகைகளில் அவைகள் வேறுபடும் விதத்தினையும் அறிந்தோம். இனி, அவதானிகள் அவதானங்களைச் செய்து காட்டிய போது எந்தெந்த அவதானங்களைச் செய்து காட்டினார்கள் என்பது பற்றி இங்குக் காண்போம்.

அவதானிகளில் பலர் தங்கள் பெயர்களுக்கு முன்னாலேயே அட்டாவதானி, தசாவதானி, சதாவதானி என்ற பட்டத்தையும் பெற்றிருப்பதால் அதைக் கொண்டே அவர்களை எளிதில் வகைப்படுத்திவிட முடிகிறது. ஆனால் அவர்கள் செய்த அவதானங்கள் எவை என்பதை அறிவதற்குப் போதிய சான்றுகள் இல்லை. மேலும் அட்டாவதானத்திற்கு இன்ன அவதானங்கள், தசாவதானத்திற்கு இவைகள் என்ற தெளிவான வரையறையும் இருந்ததாகத் தெரியவில்லை. ஒரு அட்டாவதானி செய்த அவதானங்களையே அடுத்த அட்டாவதானியும் செய்ய முற்படவில்லை. அவரவர் விருப்பத்திற்கு ஏற்பவே அவதானங்களைச்

செய்துள்ளார்கள். ஆனால் எண்ணிக்கையில் மட்டும் ஒன்று பட்டுள்ளார்கள். எனவே, பொதுவாக எவையெல்லாம் அவதானங்களாகச் செய்யப்பட்டன என்பதையே நாம் இங்குக் காட்ட முடியும்.

## ஆறுமுகம்பிள்ளை செய்த அவதானங்கள்

தசாவதானி ஆறுமுகம் பிள்ளை என்பவர் ஒரே நேரத்தில் பத்து அவதானங்களைச் சிறப்பாகச்செய்து பலரது பாராட்டுதல் களையும் பெற்றவர். அவரது வரலாற்றில் அவர் செய்த அவதானங்கள் எவை என்றும் கூறப்பட்டுள்ளன. ஆனால் தசாவதானியான அவர் செய்த அவதானங்களில் எட்டின் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. எஞ்சிய இரண்டும் எவையென்று தெரியவில்லை.

1. கவிபாடுதல் 2. கண்டப் பத்திரிகை
3. கண்டத் தொகை 4. காலக் கணிதம்
5. கிழமை கூறுதல் 6. கல்லெறி எண்ணுதல்
7. இலாடச் சங்கிலி கழற்றல் 8. முருகன் புகழ் மொழிதல்

என்பனவே குறிப்பிடப்பட்ட அவதானங்களாகும். இதில் ஆசுகவி பாடுதல், கண்டத் தொகை, கண்டப் பத்திரிகை ஆகிய மூன்றும் மிகக் கடினமான அவதானங்கள் என்று கூறப் பட்டுள்ளது.

ஆசுகவி என்பது பாடலின் ஈற்றடியையோ அன்றி முதற் சொல், இறுதிச் சொற்களையோ கொடுத்து உடனேயே பாடச் சொல்வதாகும்.

கிழமை கூறுதல் என்பது ஏதேனும் ஒரு வருடத்தில் குறிப்பிட்ட தேதியைக் கூறி அன்று என்ன கிழமை என்று கேட்டால் பதில் கூறுதல். 11. 11. 1958, 5. 5. 1906, 30- 7- 1909 ஆகிய தேதிகளைக் கூறி என்ன கிழமைகள் என்று கேட்ட போது முறையே திங்கள், சனி, வெள்ளி என்று அவர் கூறியது சரியே என்பதறிந்து அனைவரும் மகிழ்ந்தனர். கண்டப் பத்திரிகை யென்பது, ஒரு குறிப்பிட்ட வாக்கியத்தை மனதில் வைத்துக் கொண்டு அதன் எழுத்துக்களை மாற்றிக் கொடுத்துக் குழப்ப மேற்படச் செய்து இறுதியில் அவ்வாக்கியம் எதுவென்று கேட்கும் போது கூறுதல். ‘ஆறுமுகம் பிள்ளை’ என்பது குறிப்பிட்ட வாக்கிய மென்று எடுத்துக் கொண்டால், நான்காம் எழுத்து க, இரண்டாம் எழுத்து று ஆறாம் எழுத்து பி என்றெல் லாம் மாற்றிக் கொடுத்து முடிவில் அப்பெயரை வினவுதல்.

கண்டத்தொகை யென்பது, கேள்வியாளர் கூறும் தொகையை பதினாறு கட்டங்கள் கொண்ட சதுரத்தில் எப்பக்கம் கூட்டினாலும் அதே தொகை வரும்படி, ஒரு கட்டத்தில் அமைந்த எண் மறுபக்கம் வராத வண்ணம் அமைத்துக் காட்டுவதாகும். எழுதுகோலின் துணையின்றியே இதனைச் செய்ய வேண்டுமென்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட அரிய அவதானங்களைச் செய்து அவர் புகழ் பெற்றுள்ளார் என்பதை அறிகிறோம், ஆனால் எல்லாத் தசாவதானிகளுமே இந்த அவதானங்களைச் செய்துள்ளார்கள் என்று ஏற்க முடியாது. ஒரு சில அவதானங்கள் வேண்டுமானுல் எல்லோருக்கும் பொதுவாக அமைந்திருக்கலாம்.

## இராமலிங்கக் கவிராயர் அவதானங்கள்

இக்கவிராயர் எட்டு வகையான அவதானங்களைச் செய்து புகழ்பெற்றவராவர். அட்டாவதானியான இவர், பன்னிரண்டு வகையான அவதானங்களை அறிந்திருந்ததாக இவர் வரலாற்றிலிருந்து அறிகிறோம். பன்னிரண்டு அவதானங்களை இவர் அறிந்திருந்தாலும் ஒரே சமயத்தில் ஏதேனும் எட்டு அவதானங்களை மட்டுமே இவர் செய்து வந்தமையால்தான் அட்டாவதானி எனப்படுகிருர்.

## பன்னிரண்டு அவதானங்கள்

1. அவதானம் தொடங்கி முடியும் வரை 'சண்முக நாதன்' என்று அடிக்கடி கூறுதல்.
2. அவதானம் காண வருபவர்களை மறவாமல் வாருங்கள் என்று அழைத்தல்.
3. இலாட சங்கிலி கழற்றியும் பூட்டியும் காண்பித்தல்.
4. முதுகில் முறைப்படி எறியப்படும் சிறுகல், நெல் இவைகளை மொத்தம் சேர்த்துத் தனித்தனியாகச் சொல்லுதல்.
5. இடையில் ஒருவர் கூறிய தமிழ்ச் சொல்லைப் பின்பு அவர் கேட்கும் போது தவறாது கூறுதல்.
6. கணக்குகளை ஒற்றை யொழுக்குத் தொகை, இரட்டை யொழுக்குத் தொகை படியடித் தொகை இவைகளைத் தனித் தனி ஆயிரத்திற்குள் கேட்டால் மொத்தம் சேர்த்து மொழிதல்.
7. ஒற்றை வினாக்கணக்குத் தீர்ந்து விடை பகர்தல்
8. சதுரங்கம் விளையாடுதல்

9. இருபது எழுத்துக்குள் அடங்கக்கூடிய ஒரு தமிழ்ச் சொல்லை அல்லது செய்யுளை எழுதிக்கொண்டு எழுத்துக்களை மாற்றிச் சொன்னால் சரியாகச் சொல்லுதல்.
10. பதினாறு மனையில் தொகையடைதல்: ஒருவர் சொல்லிய தொகை எதுவோ அதனை மனைக்குமனை மாறுபாடாக வந்த தொகை வராதபடி எழுதச்செய்து எவ்வரிசையில் நான்கு நான்கு மனையாய்ப் பார்கினும் சொல்லிய தொகை வரும்படியடைத்தல்
11. செய்யுள்களில் பாடமுள்ள பாடல்களைச் சொல்லிப் பொருளுணர்த்தல்
12. எட்டெழுத்தாணிச் செய்யுள்: பதியின் பெயரும் தெய்வத்தின் பெயரும் முதலெழுத்துக் கூறினால் கூறியபடி அமைத்து, வெண்பா, கலித்துறை, கலிவிருத்தம் என்னும் இம்மூன்று பாக்களுள் ஆறுபேர்களுக்கும், கொம்பில்லா வெண்பா ஒருவருக்கும் குதிரையடி வெண்பா ஒருவருக்கு மாக எட்டுப்பேர்களுக்கும் எட்டுச் செய்யுள் எழுத்தாகச் சொல்லுதல்.

இவர் செய்துள்ள அவதானங்களில் பல முன்னர்க் கூறப்பட்ட ஆறுமுகம் பிள்ளை செய்த அவதானங்களிலிருந்து வேறுபட்டிருப்பதை அறிகிறோம். முருகன் புகழ் மொழிதல், இலாடச் சங்கிலி கழற்றல், கல்லெறி எண்ணுதல் ஆகிய மூன்று அவதானங்களே ஒத்திருப்பதை உணர்கிறோம். கவிபாடும் அவதானத்தில் கூட இரு அவதானிகளுக்குமிடையே வேறுபாடு இருப்பதையுணரலாம்.

இரு அவதானிகளும் செய்துள்ள மொத்தம் (12+8=20) இருபது அவதானங்களில் நான்கு அவதானங்கள் பொதுவாக இருப்பனவாகக் கொண்டாலும் எஞ்சிய பதினாறு அவதானங்களைப்பற்றி நாம் இங்கே அறிய முடிகிறது.

சரவணப் பெருமாள் கவிராயர் எட்டு அவதானங்களைப் பாட்டாக வடித்திருப்பதை முன்னர்க்கண்டோம். அந்த எட்டு அவதானங்களும் மேற்கண்ட பதினாறினுள் அடங்கக் கூடியதே! இப்பதினாறு அவதானங்களை மையமாகக் கொண்டே மற்ற அவதானங்களையும் ஏனைய அவதானிகள் செய்திருக்கக்கூடும். ஆனால் நூறு அவதானங்கள் எவை என்ற குறிப்பை அறிய முடியவில்லை.

'செந்தமிழ்ச் செல்வி' 43 ஆம் சிலம்பில் அவதானங்கள் பற்றி சு.அ. இராமசாமிப் புலவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் மேற்கண்ட அவதானங்களுடன் வேறு இரண்டு அவதானங்களை யும் குறிப்பிட்டுள்ளார். (1) பத்திரிகையில், குறிபிட்ட ஒரு செய்தியை முதலில் படித்துக் காட்டிச் சென்று பின்பு அப்படியே கூறச் சொல்லுதல் (2) எட்டுவகைக் கலன்களை அவதானியின் கண்படாது மறைத்து வைத்து ஒவ்வொன்றின் ஓசையையும் எழுப்பிக் காட்டி அதன் நிறையையும் முதலில் கூறிப் பின் ஓர் கலனை ஓசையெழுப்பி அதன் வகை, நிறை கூறச் சொல்லுதல் என்பனவே அவை.

# அவதானம்- அன்றும் இன்றும்.

## வளர்ந்த வேகம்

செய்தற்கு அரியதும் சிரமங்கள் பல உள்ளதுமே அவதானக் கலையெனினும் அது தமிழ் நாட்டில் அறிமுகமாகிய காலந் தொட்டு அடுத்தடுத்து விரைவாகவே வளர்ந்து வந்துள்ளது. இரண்டு வகைகளில் அதன் வளர்ச்சியைக் காண்கிறோம். அவதானத்தில் ஈடுபாடு கொண்டு அதைச் செய்து வளர்த்தவர்களின் எண்ணிக்கை பெருகியது. அத்துடன் அக்கலையின் நிலையும் வகையும் கூட வளர்ச்சி பெற்றது. அட்டாவதானமாக இருந்ததிலிருந்து தசாவதானம், சோடசாவதானம், சதாவதானம் என்று மென்மேலும் அவதானங்கள் வளர்ந்தன. முன்னவரைக் காட்டிலும் ஏதேனும் புதுமைகளைச் செய்யவேண்டுமென்ற துடிப்புணர்ச்சி பின்னர் வந்த அவதானிகட்கு இருந்ததும் அக்கலையின் வளர்ச்சிக்குக் காரணமாகும். இன்று அந்த வளர்ச்சியைக் காணமுடியாமைக்குக் காரணங்கள் எவை என்பதும் சிந்தித்தற்குரியது.

## ஆதரவு

எந்த ஒரு கலையும் பிறரது ஆதரவு இருக்கும் போதுதான் வளர முடியும். ஆதரவு என்பது பயிரின் வளர்ச்சிக்குப் பாய்ச்சப்படும் நீர் போன்றது நீரின்றி எவ்வளவு காலம் பயிர் உயிர் வாழ முடியும்? ஆதரவு கிடைக்காத போது மனநிறைவிற்காகவென்றே எந்தக் கலைஞனும் தனது கலையைப் போற்றிப் பாதுகாத்துக் கொண்டிருக்க மாட்டான். எதைச் செய்தால் அடுத்து ஆதரவைப் பெற முடியும் என்று தான் அவனுக்கு நினைக்கத் தோன்றும். ஏனெனில் அவனும் உலகில் உயிர்வாழ வேண்டியுள்ளதே!

பொது மக்களின் ஆதரவைக் காட்டிலும் புரவலர்களின் ஆதரவே கலைகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் வேண்டப் படுவதாகும். அன்று அவதானக் கலை வளர்ச்சி பெற்றதற்குக் காரணம் செல்வர்களும், சிற்றரசர்களும் அக்கலையில் ஆர்வம் கொண்டு அவதானிகளை வரவேற்றுத் தம் திறமைகளைக் காட்டுவதற்கு வாய்ப்பளித்துப் பரிசுகளை நல்கிப் பாராட்டினார்கள். மேலும் அவதானிகள் அனைவருமே கவிவாணர்களாகவும் இருந்ததால் வள்ளல்களைப் புகழ்ந்து அவர்கள்

பாடிய பாடல்களுக்கு மகிழ்ந்து கொடுத்த செல்வங்களாலும் அவர்கள் மனக்கவலையின்றிக் கலையை வளர்க்க முடிந்தது. அன்றியும் அவதானிகளில் பலர் தலபுராணங்கள் பாடியும் ஊர் மக்களை மகிழ்வித்து அதனால் கிடைத்த செல்வத்தைக் கொண்டும் சிரமமின்றி வாழ்ந்தனர். மொத்தத்தில் அக்கலை வளர்வதற்கான சூழ்நிலை அன்று அமைந்திருந்தது.

இன்றைய நிலை வேறு. சிற்றரசர்கள் என்று எவரும் இன்று தமிழ் நாட்டில் இல்லை. செல்வர்கள் இருக்கின்றார்கள். ஆனால் அவதானக் கலையை ஆதரித்துக் காக்கும் சிறந்த மனப் பாங்கு அவர்களுக்கில்லை. நாடாளும் அரசுக்கும் இக்கலை யில் நாட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. பொது மக்கள் என்ற நிலையில் சிலரிடம் ஆர்வம் இருக்கலாம். மழையால் வளரவேண்டிய பயிர், பனித்துளிகளாலா வளர்ந்து பயன் தந்து விடும்? எனவே, தமிழ் நலம் நாடும் சான்றோர்களும் கல்விக் கூடங்களில் பயிலும் மாணவர்களுமே இன்று இக் கலையை ஓரளவு வளர்த்து வருகிறார்கள் என்று கூறலாம். தந்திரக் காட்சிகளைச் செய்து காட்டிப் பிறரது கைத்தட்டலுக் காகக் காத்திருந்து அவர்கள் தரும் காசுகளைப் பெற்றுச் செல் பவர்கள் நிலை போல அருந்தமிழ் வல்ல அவதானிகள் நிலையும் ஆகிவருவதை நினைந்து வருந்தாத தமிழ் நெஞ்சங்கள் இருக்க முடியாது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். தமிழர்கள் பெருமை கூறும் அரிய கலையாகிய அவதானக் கலைக்கு உரிய மதிப்புத் தந்தாக வேண்டும். அவதானிகளும் அறிஞர் களே என்றுணர்ந்து அரசும் பொது மக்களும் அவர்களை மதித்துப் போற்றும் மனப்பக்குவத்தைப் பெற வேண்டும். அப்போது தான் அக்கலை வளர முடியாவிட்டாலும் வாழவாவது முடியும்.

## அவதானிகளின் ஆர்வம்

அரசும் பொது மக்களும் தரும் ஆதரவு ஒரு பக்கம் இருந் தாலும் இயல்பாகவே ஆர்வமுடைய அவதானிகள் இருக்கும் போது தான் அக்கலை வளர முடியும். இன்றைய சூழ்நிலை யில் கவிபாடும் ஆற்றல் மிக்கவர்கள் சமுதாயத்தைப் பற்றிப் பாடவே விரும்புகின்றார்கள். தல புராணங்கள் பாடவோ, வள்ளல்களைப் புகழ்ந்து பாடவோ இன்று வாய்ப்பில்லை. வாழ்க்கைப் பிரச்சினைகள், சிக்கல்கள் பலவற்றைத் தோற்று விப்பதால் அப்போராட்டத்தில் வெற்றி பெறுவதே அவதானங் களாகச் சிலருக்கு அமைந்து விடுகிறது. மேலும் எதையும்

பொறுமையோடு ஆழ்ந்துக் கற்றுத் தெரிந்து கொள்ளும் மன நிலையும் பலருக்கு இன்று இல்லாதவாறு உலகம் அவசரமாகச் சென்று கொண்டிருப்பதால் கவனத்தை அடிப்படையாகக் கொண்ட அவதானக் கலையைக் கற்கும் ஆர்வமும் பலருக் கில்லை. மேற்கண்ட நிலைகளுக்கெல்லாம் விதிவிலக்காக உள்ள சிலர் மட்டுமே இன்றும் அதில் நாட்டம் செலுத்திக் கற்று நாட்டினில் அக்கலையை நிலை பெறச் செய்து வருகின் றார்கள்.

## பயிற்சியா? பரம்பறையா?

நாட்டு மருத்துவர்கள் சிலரும், மந்திரவாதிகளில் சிலரும் தாங்கள் அறிந்த உண்மைகளைத் தங்கள் வீட்டில் உள்ளவர் களுக்கு மட்டுமே சொல்லிச் சென்ற வழக்கமுண்டு. எவவே அவ் வுண்மைகள் பரம்பறைச் சொத்தாகவே பாவிக்கப்பட்டதும் உண்டு. அவதானத்தைப் பொருத்த வரையில் இரு நிலைகளை யும் காண்கிறோம்; பரம்பறையாகவும் அக்கலை வளர்க்கப் பட்டுள்ளது. அட்டாவதானம் இராமலிங்கக் கவிராயரின் தந்தை மீனாட்சி சுந்தரக்கவிராயரும் ஓர் அவதானி. அவரின் தந்தை பொன்னுங்கூட அவதானி என்பவரும் ஓர் அவதானியே.

சதாவதானி சரவணப் பெருமாள் கவிராயரின் பேரரான சரவணப் பெருமாளும் அவதானியாகியுள்ளார். திருக்குறள் அவதானி சுப்பிரமணியதாசு என்பவரின் மகன் இராமதாசும் அவதானியாகியுள்ளார். இப்படிப் பலரைச் சான்று காட்ட முடியும். ஆனால் முன்னோர் எவரும் அவதானியாக இல்லாத போதும் முயன்று பிறரிடம் கற்றுத் தேர்ந்து அவதானம் செய் துள்ள பலரையும் காண்கின்றோம். எனவே, பரம்பறையாகக் கற்றவர்க்கும் பயிற்சியால் புதிதாகக் கற்றவர்க்கும் வேறுபாடு இருந்ததாகத் தெரியவில்லை.

## முயன்றால் முடியும்!

முயன்றால் முடியாதது எதுவுமே இல்லை. மன உறுதி யும் இடை விடா முயற்சியும் இருந்தால் எதையுமே சாதிக்க முடியும். அவதானம் ஓர் அரிய கலையே எனினும் அதைச் செய்வதற்கு வேண்டிய கவனம் நினைவாற்றல், கவிபாடும் திறம் போன்ற தகுதிகளை வளர்த்துக் கொண்டால் எவரும் அவதானியாகி விடலாம். பழைய பாணியினின்றும் வேறு பட்டுக் காலத்திற்கேற்ற புதிய அவதானங்களைச் செய்தும் புகழ் பெறலாம். எண்ணிக்கையில் வளர்ந்த அவதானங்கள் எண்ணத்தாலும் வளர்வது சிறப்பிற்குரியதே!

# காப்போம் அவதானக்கலையை!

## அருங்கலை மறையலாமா?

அவதானம் ஓர் அரிய கலை; தமிழர்களின் தன்னிகரற்ற ஆற்றலைத் தரணிக்கே எடுத்துக் காட்டும் கலை. ஒரு சமயத்தில் ஒரு செயலை ஒழுங்காகச் செய்வதற்கே இயலாது இடர்ப்படு வோரை உலகில் காண்கிறோம் ஆனால் ஒரு சமயத்தில் பதின்மர் பதினாறுபேர் மட்டுமன்றி நூறுபேர் கேட்கும் வினாக்களுக்கும் ஏற்ற விடைகளை உடனுக்குடன் கூறும் ஆற்றலைப் பெற்றகலை அவதானக்கலை. நூறுபேர்கட்கும் ஏதோ ஓர்பதில் கூறுவது அல்ல! அப்பதில்களும் அவதானிகளின் நுண்மான் நுழை புலத்திற்கு விடப்பட்ட சவால்களாகவே அமையும். அவற்றை மகிழ்வோடு ஏற்றுத்தம் ஆற்றல் புலப்படுமாறு அவதானிகள் விடையிறுப்பர். என்னே அவதானக் கலையின் பெருமை!

மனத்தின் பேராற்றலால் அரியதவங்களைச் செய்து அடை தற்கரிய பெருமைகளையடைந்த முனிவர்களைப் போன்று மனத்தை ஒருமுகப்படுத்துவதன் மூலம் செயற்கருஞ் செயல் களைச் செய்து காட்டமுடியும் என்பதை நிருபித்துக் காட்டியவர் கள் அவதானிகள். மற்றவர்களின் பொறி புலன்களுக்கும், அவதானிகளின் பொறிபுலன்களுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. மற்றவர்கள் பன்முறை பார்த்தும், கேட்டும் உணர்ந்தபின்னர் தான் தாம் பார்த்ததை, கேட்டதை என்னவென்று கூறுவர். ஆனால் அவதானிகளோ, பலபொருட்களை ஒரு முறை பார்த் தாலே மாறுபடாமல் கூறிவிடுவர். பல கலன்களின் ஒலிகளையும் ஒரு முறை கேட்ட அளவிலேயே பின்னர் எந்தஒலி எந்தக் கலனுக் குரியது என்பதைக் கூறிவிடும் ஆற்றல் அவர்களுக்கே உண்டு. புறக்கண்கள்இலாது போனாலும் மனக்கண்ணின் ஆற்றலாலேயே உள்ளது உணர்ந்து விடைகூறும் திறனும் அவதானிகட்கு உண்டு.

அத்தகைய பெருமைக்குரிய அவதானக்கலை பேணுவாரின்றி யும் பேரார்வத்துடன் கற்பாரின்றியும் நாளுக்குநாள் மறைந்து வருவதைக் காண்கின்றோம். நூற்றுக்கணக்கான அவதானி கள் வாழ்ந்த இந்நாட்டில் இன்று விரல் விட்டு எண்ணுமளவிற்கு ஒரு சிலரே காட்சிதருகிறார்கள். அவர்களுக்குப்பின்னால் இக் கலையின் நிலை என்ன? இப்படியொரு வினாவை எழுப்புவதே வேதனையாகத்தான் உள்ளது: ஏனென்றால் அவ்வினாவினால்

பெறப்போகும் விடை தமிழ்ச்சமுதாயத்திற்கு ஏற்படப்போகும் இழப்பைக்குறிப்பனவாகவல்லவா அமையும்! அடுத்த நூற்றாண்டில் அவதானிகள் என்ற சிறப்புடன் எவரும் இருப்பார்களா என்று ஐயுறும் நிலையில்தான் இன்று நாடு உள்ளது. அறிவியலால் வியத்தகு சாதனைகளைச் செய்வதற்கு ஒரு புறம் நாம் முயன்று கொண்டிருப்பது பாராட்டற்குரியதே எனினும், உளவியல் சாதனைகளில் ஒன்றாக நாம் பெற்று வளர்த்த அவதானக் கலையை மறைய விடுவது வருந்தற்குரியது அல்லவா!

எனவே, இந்த அரியகலையை மேலும் வளர்ப்பதற்கான வழிவகைகள் என்ன என்பதைப்பற்றி நாம் உடனே சிந்தித்தாக வேண்டும். ஒருசில அவதானிகள் தற்போது உயிர்வாழும் காலத்திலேயேமேலும்பல அவதானிகள் உருவாக்கப்பட்டாகவேண்டும். என்றும் அழியாத, அமரத்துவம் பெற்ற கலையாக அவதானக் கலை நின்று நிலவ வேண்டும்.

### வளராமைக்குக் காரணங்கள்

இன்றைய புதிய யுகத்தில் எங்கும் எதிலும் பரபரப்பு. மனத்தை ஒரு முகப்படுத்தும் அளவிற்குப் பொறுமையும் முயற்சியும் பலரிடம் காண்பது அரிதாகிவிட்டது. ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றலும் கூர்த்து நோக்கியறியும் நுட்பமும் சிலருக்கு மட்டுமே தனியுடைமை ஆகிவிட்டது. எதையாவது செய்து, எதையாவது அடையவேண்டும். என்று முயல்பவர்களே பெரும் பான்மையினராகிவிட்டனர். அன்றியும் மனிதர்களின் கவனத்தைச் கிதைப்பதற்குப் பல புது வழிகளை நாகரிகம் என்ற பெயரில் இன்று நாம் பெற்றுள்ளோம். போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து வரும் திரையுலகமும் பத்திரிகையுலகமும் நம் கவனத்தைப் பல வழிகளிலும் திசை திருப்பி நம்மை அலைக் கழிப்பதைக் காண்கிறோம். இவைகளேயன்றி மக்கள் வாழ்க்கை முறைகளும் மன நிறைவையளிக்கும் வகையில் இன்று அமையவில்லை. எங்கு நோக்கினாலும் ஆர்ப்பாட்டங்களையும், போர்ப்பாட்டுக்களையும், சாதி, இனக்கலவரங்களையுமே அன்றாடம் கண்டு வருகிறோம். இந்நிலையில் மனத்தை ஒருமுகப்படுத்தி அதன் மூலம் அவதானங்களைக் கற்றுச் சிறப்படைதல் அவ்வளவு எளிதான செயல் அல்ல.

படிப்பதும், பட்டம் பெறுவதும் ஏதேனும் ஒரு வேலையைத் தேடி அதன் மூலம் வாழ்க்கையை நடத்துவதற்கே என்ற நிலையில் தான் நம்மில் பலர் உள்ளனர். இத்தகைய சூழ்நிலையில்

எதைப்படித்தால் உடன் அலுவல் கிடைக்கும் என்று தான் பலர் சிந்திப்பர். அவர்கள் அவதானத்தைப்பற்றி அறிந்தாலும் அதில் தேர்ச்சி பெற்றுச் சிறப்படைய விரும்புவர் என்று எதிர் பார்க்க முடியாதே! ஏனென்றால் அவதானத்தில் எத்துணைத் தேர்ச்சி களை ஒருவர் ஆர்வத்தின் காரணமாகப் பெற்றிருந்தாலும், அத் தேர்ச்சியும் திறமையும் அவர் வாழ்விற்குத்துணை செய்யும் என்ற உறுதியான சூழ்நிலை இன்று இல்லையே! இருக்கின்ற ஒரு சில அவதானிகளும் வறுமையோடல்லவா உறவாடிக் கொண்டிருக் கிறார்கள்! அவர்கள் நிலையைப் பார்க்கும் போது பிறருக்கு அச்சம் தான் பிறருக்குமன்றி அக்கலையைக்கற்கும் ஆர்வம் எப் படிப்பிறக்க முடியும்?

செல்வர்களும் சிற்றரசர்களும் அவதானக் கலையின் அருமையை உணர்ந்து, அதை வளர்க்க விரும்பியதால் அவதானி கள் அன்று சிறப்பிக்கப்பட்டார்கள் அதனால் அக்கலைக்கு நாட்டில் நன் மதிப்பிருந்தது. பலரும் அவதானிகளாக விரும்பிப் பயிற்சி பெற்றுச் சிறப்படைந்தார்கள். தந்தை, தன்மகனுக்கு மட்டுமன்றிப் பேரனுக்கும்கூட அக்கலையைப் பயிற்றுவிக்க விரும்பினார். அதனால் வாழையடி வாழையாக அக்கலை இம் மண்ணில் வளர்ந்து செழித்தது. ஆனால் இன்றுள்ள அவதானி யொருவர், இக்கலையை அரிதின் முயன்று தாம் கற்றுத் தேர்ந் தாலும் தமது மகன் நிரந்த வருவாய் உள்ள ஒரு அலுவல் பார்க்க வேண்டுமென்றுதான் விரும்புவாரே தவிர தாம் அறிந்த கலையில் தமது மகனும் தேர்ச்சி பெற வேண்டும் என்று நிச்சயம் அவர் நினைக்கமாட்டார். இன்றைய சூழ்நிலைஅப்படி அமைந்துள்ளது. பின்பு எப்படி இக்கலை வளரமுடியும்? இக்குறைகளையெல்லாம் களையக் கூடிய நிலை உருவாகுமென்றால் அவதானக்கலையும் நிலை பெற்று வாழமுடியும்.

### வளர்ப்பதற்கான வழிமுறைகள்

ஆயிரம் இடர்பாடுகள் தோன்றினாலும் அவைகளை யெல்லாம் எதிர்த்து எதிர் நீச்சல் போடுபவர்களால்தான் வெற்றி என்ற கரையை அடையமுடியும். அத்தகைய எதிர் நீச்சல்களைப் போட மறந்ததால் நமக்கு ஏற்பட்ட இழப்பு களைக் காட்டிக் கடந்தகால வரலாறு இன்னும் எச்சரித்துக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். அன்றையத் தமிழர் வளர்த்த பல அழகுக்கலைகளை இன்று நம்மால் கண்டு வியக்க முடிகிறதே தவிர அது போலச் செய்யும் ஆற்றல் இன்று இல்லையே! தொடர்ந்து பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற

உறுதிப்பாடு இல்லாமற் போனதனால் நமக்கு ஏற்பட்ட இழப்புகள் எத்துணை! எத்துணை!! அவதானக்கலைக்கும் அந்த ஆபத்து ஏற்படுமுன்னமேயே அதை வளர்த்துக் காப்பதற்கான சில வழிமுறைகளை இங்குக் காண்போம்.

## ஆர்வமும் முயற்சியும்

'வருமானத்திற்குத்துணை செய்யுமா? வாழ்க்கைப்பயணத்திற்குப் பயன்படுமா?' என்று எண்ணிப் பார்த்தே இன்று எக்கலையினையும் கற்கத் தொடங்குகின்றனர். இது மாந்தர்களின் பொதுவான மனநிலை. ஆனால் அரியகலைகளைக் கற்றுத் தேர்ச்சி பெற விரும்புபவர்கள் இந்நிலைக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும். தன்னல மற்றவர்களாகவும் இன்னல்கள் பல வரினும் அஞ்சாது கற்ற கலையின் பெருமையை நாட்டவல்லவர்களாகவும் அவர்கள் இருத்தல் வேண்டும். நாட்டிற்கு, மொழிக்குத் தொண்டாற்றுபவர்களைப் போன்று அருங்கலைகளைப் பேணிப் பாதுகாக்கும் தொண்டை ஆற்றும் துணிவு அவர்கட்கிருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களால் மட்டுமே அவதானக்கலையைப் பேணிப் பாதுகாக்க முடியும். அக்கலையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு ஆர்வமுடன் அதைக் கற்றுத் தேறும் ஒருவர் தனது வாழ்வே அக்கலையென்று எண்ணி அதை வளர்ப்பாரேயன்றி அதனால் வரும் இலாப நட்டங்களைக் கணக்கிட்டுக் கொண்டிருக்க மாட்டார். அத்தகைய 'தமக்கெனப் முயலாப் பிறர்க்குறியாளர்'கள் பலர் இம்மண்ணில் தோன்ற வேண்டும். அப்போது அவதானக் கலையும் செழித்து வளரும்

அவதானிகள் தோன்றுதல் என்பது அரிய தவத்தால் ஏற்படக் கூடியதல்ல. எவரும் அவதானியாக ஆகிவிட முடியும். ஆரவமும் முயற்சியுமே அதற்கு அடிப்படைத் தேவைகள். மூன்று, நான்கு வகுப்புப் படிப்போடு கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்த பலர் சிறந்த அவதானிகளாகத் திகழ்ந்துள்ளார்கள். அவதானம் செய்யத் தொடங்கிய பின்பு கவி எழுதத் தொடங்கியவர்களும் உண்டு. 'நம்மால் முடியும்' என்ற நம்பிக்கையே இக்கலையில் தேர்ச்சி பெறத் துணைசெய்யும் அருமருந்தாகும்.

அவதானக்கலைஞராவதற்கு வேண்டிய பயிற்சிகள் இந்நூலின் முற்பகுதியிலேயே கூறப்பெற்றுள்ளது. கவனக் கலையான இதற்கு மனத்தை ஒரு முகப்படுத்தும் திறன் பெரிதும் வேண்டப்படுவதாகும்.

'மனத்தை ஒரே பொருளில் அல்லது ஒரே கருத்தில் நாட்டுதலே கவனம்' என்பது உளவியலார் கருத்து. எதையும் முழுவதும் அறிவதற்கான மனமுயற்சியே கவனம்' என்று கூறுகிறார் ஸ்கவுட் என்ற அறிஞர். 'கவனம் என்பதை முயற்சி என்றே கூறிவிடாலம்' என்கிறார் மக்டூகல் என்ற அறிஞர். இத்தகைய முயற்சியில் வல்லவராக விளங்குபவர் சிறந்த அவதானியாகவும் நிச்சயம் விளங்குவார்.

## அரசின் கடமை

ஒரு நாட்டின் முன்னேற்றம் அதை ஆளுகின்ற அரசைப் பொறுத்தே அமைகிறது. அந்நாடு இயற்கை வளங்களை எத்துணைதான் மிகுந்த அளவு பெற்றிருந்தாலும் நாட்டு மக்கள் வளமோடு வாழ்வது அரசின் தன்மையைப் பொறுத்தே உள்ளது. அதேபோன்று அங்கு பல்வேறு வகைப்பட்ட கலைகள் வளர்ந்து சிறப்பதும் அரசின் ஆர்வத்தைப் பொறுத்தே அமைகிறது. அரசின் அரவணைப்பின்றி எந்த அரிய கலையும் அதிக நாட்கள் நிலைத்து நின்று விடமுடியாது. இது வரலாறு நமக்குணர்த்தும் பாடம்,

பண்டைத் தமிழகத்தில் பல்வேறு கலைகளும் பாங்குடன் வளர்ந்தோங்கியதற்குக் காரணம் அன்று நாடாண்ட நல்லோர்களின் கலைப்பற்றே. எந்த நாடும் பல்வேறு கலைகளையும் பேணிக் காக்கும் போதுதான் அதற்குப் பெருமையும் புகழும் ஏற்படும். கலைகள் வளர்கிற தென்றாலே அங்கு நிலையான நல்லாட்சி நடக்கின்றது என்று பொருள்.

நம்முடைய அரசும் இவ்வுண்மையை உணர்ந்து மறையும் நிலையிலுள்ள அவதானக்கலையை வளர்க்கும் முயற்சியில் தீவிர மாக ஈடுபடவேண்டும். கலைஞர்களை, கவிஞர்களை அரசு தத்து எடுத்துக் கொண்டு அவர்கள் திறமையை வெளிக்காட்டிச் செய்வது போல அவதானக் கலைஞர்களையும் செய்ய வேண்டும். இக்கலையைப் பயிலுவோர்க்கு, உதவித் தொகை வழங்கி ஊக்குவிப்பதுடன் மக்கள் மத்தியில் செல்வாக்கு ஏற்படுமாறு செய்ய வேண்டும், பிற அலுவல்களுக்கு முயலும் போது இக் கலையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இதுபோன்ற பல ஆக்கப்பணிகளை அரசு செய்ய முற்படுமென்றால் அவதானக்கலையினைப் பலர் ஊக்கமுடன் கற்க முற்படுவர்.

## பொதுமக்களின் பொறுப்பு

தனிமனிதரின் ஆர்வமும் முயற்சியும் எத்துணைதான் இருந்தாலும், அரசாங்கமும் கூட இக்கலையை வளர்ப்பதைக் கடமையாகக் கொண்டு செயல்பட்டாலும் உண்மையிலேயே இதன் வளர்ச்சி நாட்டு மக்களின் மனநிலையைப் பொறுத்தே யுள்ளது. சட்டங்களால்மட்டுமே அரசாங்கம் எதனை, எவ்வளவு காலத்திற்குச் சாதித்து விடமுடியும்? அவதானக்கலை தோன்றி வளர்ந்த காலத்தில் நாட்டு மக்கள் அதனிடம் காட்டிய நல்லார்வமே போட்டி போட்டுக் கொண்டு பல அவதானிகள் உருவாகும் நிலையினைத் தோற்றுவித்தது.

இன்றும் கூட ஆங்காங்கு பல அரங்குகளையும் கழகங் களையும அமைத்துக் கொண்டு இசை, நடனம், நாடகம் போன்ற கலைகளைப் பொதுமக்கள் வளர்த்து வரக்காண் கிறோம். இந்த நிலை அவதானக்கலைக்கும் ஏற்படவேண்டும். முத்தமிழ் விழாக்கள் நடக்குமிடங்களிலெல்லாம் அவதானக் கலைக்கும் வாய்ப்பளிக்க வேண்டும். நாடெங்கும், ஊரெங்கும் பட்டி தொட்டிகளிலெல்லாம் இக்கலை பரவும் வகை செய்தல் வேண்டும். பொழுது போக்காகத் திகழ்வதோடன்றி அறிவுக்கும் விருந்தாகப் பயன்படும் அவதானக்கலையின் வளர்ச்சியால் மக்களின் மனநிலையும் நிச்சயம் வளரும்.

இனி, ஒவ்வொரு அவதானத்தையும் செய்து சிறப் படைந்தோர் பற்றிய செய்திகளைத் தனித்தனியாகக் காண்போம்.

# சட்டாவதானம்

அவதானங்கள் வரிசையில் அவ்வளவாகப் பெருமையைப் பெறாத அவதானம் இதுவே; எனவே, இந்த அவதானத்தைச் செய்தவர்களும் பெருமை பெற்றதாகத் தெரியவில்லை. அட்டாவதானம் செய்ய முற்பட்டவர்களின் முயற்சியில் ஏற்பட்ட சிறு தோல்வியே இந்த அவதானத்தின் தோற்றமாக இருக்குமென்பதை முன்னரும் குறிப்பிட்டுள்ளோம். சட்டாவதானிகள் என்ற நிலையில் கீழ்க்கண்ட இருவரை மட்டுமே அறிய முடிகிறது.

## தே.சி. கங்காதர பால தேசிகர்

கி. பி. இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவர் சென்னை மாநகரிலேயே வாழ்ந்தவர். சென்னையிலும் வேறு பிற இடங்களிலும் இருந்த பசனை மடங்களுக்கு இவர் ஆசிரியராகத் திகழ்ந்தவர், அம்மடங்களில் பக்தி இலக்கியங்களைப் போதித்து இறையுணர்வை யூட்டும் திருப்பணியைத் தொடர்ந்து செய்தவர். அத்துடன் ஆறு அவதானங்களையும் அறிஞர்கள் பலர் முன்பு செய்து காட்டிப் பாராட்டுப் பெற்றவர். இவர் சிறந்த கவிஞராகவும் விளங்கியுள்ளார், சண்முகக் கடவுள் துதிப் பத்து' என்பது இவரால் பாடப் பெற்ற நூலாகும். அந்நூலில் ஒரு பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

**'சண்முகக் கடவுள் துதிப்பத்து'**

"பனிமா மலைக்கொடியின் முலைப்பா லருந்திவால்
பருகுவ டெழுந்த முருகா
பாரோர்க ளிக்கசிவன் தோளேறி விளையாடு
பவளச்செம் மேனியுடை யாய்,
தனியாக முனிநார தன்வேள்வி தனிலுற்ற
தகரேறு கொண்ட குமாரா
தகைவேல நினதுமலர்க் கண்ணோக்கி இதுவேளை
தமியனுக் கருள்புரிகு வாய்!
அனியாய மாய்க்கெட்டு மும்மாய பவக்கடலில்
ஆழாமல் நாளும் உன்றன்
அம்போ ருகத்தாளை மறவா திருக்கநின்
அன்புகொண் டாண்டருளு வாய்!
கனிவாய் மணங்கமழும் வள்ளிதெய் வானையுடன்

கனசினக ரத்து மேவும்
கருதரிய சரவணப வாநந்த சமரபுரிக்
கருணைப் பிரவாக மணியே!

## வைரங்கண் வேலாயுதப் புலவர்

இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்பு சென்னையிலுள்ள காசிமேடு என்னும் பகுதியில் பிறந்த புலவர் இவர் தந்தையார் அழகப்ப வேங்கடாசல பண்டிதர். தாயார் பெயர் வள்ளியம்மாள். முறையாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களைத் கற்றுத்தேறிப் புலவராக விளங்கிய இவர் தஞ்சையில் தமிழாசிரியராகப் பணியாற்றியுள்ளார். ஆறு வகை அவதானங்களைச் செய்தும் இவர் புகழ் பெற்றார். அந்நாளில் சென்னை வேப்பேரியைச் சேர்ந்த மதுரைப் பிள்ளை என்பவர் ரங்கூன் சென்று வணிகம் செய்து பெருஞ் செல்வராக விளங்கினார். ஒரு முறை அவர் சென்னை வந்திருந்த போது அவரைக் காண விரும்பிய இப்புலவர் ஒரு சீட்டுக்கவியை அனுப்பினார். தாம் பாடியுள்ள 'திருக்குறிப்புத் தொண்ட நாயனார் சரித்திரக் கீர்த்தனை'யை அச்செல்வர் முன் அரங்கேற்ற விரும்பினார். செல்வர் இணங்கியதால் தாம் நினைத்தபடியே செய்து பெரும் பொருளைப் பரிசாகப் பெற்று வந்தார்.

செல்வருடன் புலவரும் ரங்கூன் செல்ல விரும்பினார். ரங்கூன் சென்றதும் புலவரை வரவழைப்பதாகச் சொல்லிச் சென்ற செல்வர் ஏதும் செய்யாமையால் தலைவி, தோழிக்குத் தன் நிலையை உரைத்துத் தூது அனுப்புதல் போல மதுரைப். பிள்ளைக்குத் தூது நூல் ஒன்று எழுதி அனுப்பினார். பின்பு அவரது உதவியோடு ரங்கூன் சென்று பெரும் பொருளீட்டித் திரும்பினார். இவர், மதுரை மாலை, புதுவை மணக்குள விநாயகர் பஞ்ச ரத்தினம், மதுரை வீரன் விலாசம், வடிவுடையம்மன் பிள்ளைத் தமிழ் முதலிய பல நூல்களை எழுதியுள்ளார். மதுரைப் பிள்ளைக்கு இவர் அனுப்பிய சீட்டுக்கவி:

"பூமேவு அயனாதி தேவரொடு நாகரும்
போற்றிப் பராவு கர்த்தன்
புகர்முகமு மதவார ணக்கடவுள் அடியிணைப்
போதுபூத் தொளிர்அ கத்தன்;
ஆமேவு சட்டாவ தானம்வை ரக்கண்வே
லாயுதக வீரசுரன் வரைந்
தனுப்பினும் சனது: சென்னை வேப்பேரி எனுமூரன்

அண்ணல் மார்க் கண்ட மாரன்
மா மேவு சுதன்மதுரைப் பிள்ளைபெரு மான்மனமு
வந்தெதிர்ந் தினிது காண்க
மாட்சிமைத் திருக்குறிப்புத் தொண்டர் புரானமதை
வளநாட கத்தமிழினால்
நாமேவு வாணியருள் கொடுபாடி அச்சிட்டு
நன்கரங் கேற்றினேன், நீ
நாகரீ கப்பிரபு வாகையால் நீயுமிதை
நாடிக்கேட் டிடல்வேண்டுமே!

# அட்டவாதானம்

அவதான வரலாற்றில் தனி இடம் பெற்றுச் சிறப்படைந் தது அட்டாவதானமே. கிடைத்துள்ள அவதானங்களில் காலத் தால் முந்தியதும் மிகப் பலர் செய்ததும் இந்த அவதானமே. ஏறத்தாழ ஐம்பத்தி ஐந்து அட்டாவதானிகளைப் பற்றிய செய்திகள் கிடைத்துள்ளன. அவர்களில் சிலர் புகழ் பெற்ற கவிவாணர்களாகவும், பலரும் வியந்து போற்றிப் பரிசுகளை நல்கிய அவதானிகளாகவும் விளங்கியுள்ளார்கள்.

### அட்டாவதானியார்

தாம் செய்து சிறப்புப் பெற்ற அட்டாவதானத்தின் பெயரையே தமது பெயராகக் கொண்டுவிட்ட இவரது இயற் பெயர் என்னவென்று தெரியவில்லை. இவரது பெயர் சுப்பிரதீபக்கவிராயர் என்பவர்களும் உண்டு. அது பொருந்தாது என்று முன்னரேயே மறுக்கப்பட்டுள்ளது. இவரது காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். 18 ஆம் நூற்றாண்டு என்பவர்களும் உண்டு. இவரது காலத்திற்கு முந்தி அவதானிகள் எவரும் வாழ்ந்ததாகத் தெரிய வில்லை. எனவே, இவரே அவதானிகளில் காலத்தால் முந்திய வராக இருக்க வேண்டும்.

சோழ நாட்டில், திருச்சிக்கு அண்மையில் உள்ள சீரங்கத் தில் அந்தணர் குலத்தில் தோன்றிய இவர், இளமையிலேயே இலக்கண இலக்கியங்களையும் மறை நூல்களையும் நன்கு கற்றுத் தேறினார். வாசுதேவ ஐயங்கார் என்பவரின் மகள் பூங்காவனம் என்ற அம்மையாரை மணந்து இல்வாழ்வு நடத்திய இவர் தீ நெறிப் படர்ந்து செல்வத்தையெல்லாம் இழந்தார். மதுரையில் வாழ்ந்த மதனாபிடேகம் என்ற கணிகையுடன் உறவு கொண்டிருந்தார். அவ்வம்மையார் இவரிடமிருந்த செல்வம் அனைத்தையும் கவர்ந்து தெருவில் நிற்க வைத்தாள்.

தவற்றுக்கு வருந்தி மனம் திருந்திய அவதானியார் தமது சோக அனுபவங்களையே 'விறலி விடு தூது' என்ற நூலாக எழுதி அதைக் கூளப்ப நாயக்கன் என்ற வள்ளலிடம் காட்டி அவனது பாராட்டுதலையும் செல்வத்தையும் பெற்றார். மீண்டும் தம்மனைவியுடன்கூடி இல்லறம் நடத்தினார். அட்டாவ தானங்கள் செய்து சிறப்புப் பெற்ற இவர் தமது வரலாற்றைக் கீழ்க்கண்ட பாடலில் வடித்துக் காட்டுகிறார்.

"காரங்க மேனிக் கடவுள் இருக்குமந்தச்
சீரங்கத் தேபிறந்தேன் செல்வத்தில்;- ஈரைந்தோ
டாறு வயதினுக்குள் ஆரியமும் வேதமுநா
ஏறித் தமிழ்நூல் இலக்கணத்தில் — மீறினேன்
....... ....... ...... ... ...
திருப்பதியி லேவாசு தேவன் மகளைக்
கருப்புருவ இன்பக் கனியை - விருப்பமுள்ள
பூங்கா வனத்தை பொருத்த முடன்வேட்டுப்
பாங்கான வாழ்விற் பயிலுநாள் ...
....... ...... ....... ......
வால சரஸ்வதியென் வாக்கிற்ப்ர சன்னமதால்
நாலு கவித்திறமும் நானறிந்து — வேலு
மயிலுமெனச் சொன்னவுரை மாறாமற் சொல்லக்
கயிலாடச் சிங்கி கழற்ற - அயலொருவன்
சொன்னவினாச் சொல்லவெதிர் சூதாட- பின்முதுகு
தன்னி லெறிந்தகல்லுத் தானெண்ண பன்னுசது
ரங்கவிளை யாட்டுக் கடிப்பார்க்கச் சொற்புலவோர்
தங்கள் கவியைஅவ தானிக்கச் - சங்கத்தில்
எட்டெட் டெழுத்தாணிக் கேற்ற கவிதைசொல்லும்
அட்டாவ தானியென்ப தாயினேன் —''

என்று தொடர்கிறது அப்பாடல்.

தமது பதினாறாம் வயதிற்குள் ஆரியத்தையும் அருந்தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்றுத் தேறிய இப்புலவர் தாம் செய்த எட்டு அவதானங்கள் எவை என்பதையும் பாடலிற் குறிப்பிட்டுள்ளார்.

1. வேலுமயிலுமென மாறாமற் கூறுதல்
2. இலாடச் சங்கிலி கழற்றல்
3. ஒருவர் கேட்டதற்குப் பதில் கூறுதல்
4. சூதாடுதல்
5. முதுகில் எறியப்பட்ட கற்களை எண்ணுதல்
6. சதுரங்கம் விளையாடுதல்
7. புலவர்களின் கவிதையை அவதானித்தல்
8. எட்டெழுத் தாணிச் செய்யுள் பாடுதல்

என்பனவே அவை. இவர் வைணவராயிருந்துங்கூட வேலு மயிலுமெனக் கூறுவதையும் ஒரு அவதானமாகச் செய்துள்ளதை நோக்கும் போது அது ஒரு மரபாய் இருந்திருக்க வேண்டும் என்பது புலப்படும்.

## பூவை கலியாணசுந்தர முதலியார்

அட்டாவதானிகள் வரலாற்றில் அடிக்கடி இடம் பெறும் பெயர்களில் இதுவும் ஒன்று. சிறந்த கவிஞராகவும், புராணங்கள் பலவற்றுக்கு வசனம் எழுதிய வித்தகராகவும், புகழ் பெற்ற அட்டாவதானியாகவும் விளங்கிய இவர் தொண்டை நாட்டில் புத்திவேடு என்னும் ஊரில் கி. பி. 1854 ஆம் ஆண்டு பிறந்தவர். தந்தையார் பெயர் அண்ணா சாமி முதலியார்.

இவர் திருவான்மியூர்ப்புராணம், திருப்பாசூர்ப் புராண வசனம், திருவேற்காட்டுப் புராண வசனம், திருவொற்றியூர்ப் புராண வசனம், சீகாளத்திப் புராண வசனம், சேக்கிழார் சுவாமி வரலாறு, ஏகாம்பரேசர் பதிகம், சுந்தர விநாயகர் பதிகம், கற்பகவிநாயகர் பதிகம், திருமுல்லைவாயில் மாசிலா மணியீசர் பதிகம் போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார். பலர் இயற்றிய நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் பாடிய பெருமையும் இவருக்குண்டு.

திரிசிரபுரம் அப்பாவுப் பிள்ளை என்பவர், கோயிலூர் முத்துராமலிங்க ஞானதேசிகர் மீது 'நெஞ்சறிவுறுத்தல்' என்னும் நூலொன்றை இயற்றினார். அந்நூலுக்கு இக்கவிஞர் பாடிய சிறப்புப்பாயிரத்தின் இறுதிப்பகுதி கீழே தரப்பட்டுள்ளது

''சிவராம லிங்க தேசிகன் தன்பால்
தவறு அனுபவத் தரிசனம் கண்டான்:
திரிபுரஞ் செற்ற செல்வன் மலைநீள்
திரிசிர புரத்தில் சேர்ந்து வாழ்வான்:
கல்விக்குண ஞானங் கருணை யுடையவன்:
நல்லவர் நாடும் நண்பு மிக்கான்;
தெய்வ உபாசனை தேறித் தெளிந்தான்:
சைவந் தழைக்கத் தான்பிர சங்கம்
எங்கும் நடாத்தும் எழிலும் வாய்ந்தான்:
அங்கி லேய அரச பாடையும்
பாணினி தன்னால் பரவச் செய்த
வாணிய வடமொழி யாவையுங் கற்றோன்:
செப்புபா வலர்கள் திலக னாகும்
அப்பாவுப் புலவன் அறிஞர் ஏறே,''

என்பது அப்பாடல். கவிதை, உரைநடை என்ற இரு துறையிலும் இணையற்று விளங்கிய இப்புலவர் எட்டு வகையான

அவதானங்கள் செய்வதிலும் இணையற்றவராகவே விளங்கினார். இவர் செய்த அவதானங்கள் எவை என்ற குறிப்புக் கிடைக்காவிட்டாலும் புகழ்பெற்ற அட்டாவதானியாக விளங்கியுள்ளார் என்பது பல நூல்களாலும் அறியக் கிடக்கிறது.

## புரசை, அட்டாவதானம் சபாபதி முதலியார்

புகழ்பெற்ற அவதானிகளில் ஒருவராகத் திகழ்ந்த இவர் சென்னையிலுள்ள புரசைவாக்கத்தில் கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் பிறந்தவர். தந்தையின் பெயர் வெண்ணெய்க்கார இரிசப்ப முதலியார். தாயார், முனியத்தையம்மாள். புதுவை அச்சுத உபாத்தியாயர் என்பவரிடம் முதலில் தெருப் பள்ளியிலேயே இவர் தம் படிப்பைத் தொடங்கினார். பின்பு அரசினர் பள்ளியில் சேர்ந்து தமிழும் ஆங்கிலமும் கற்றுத் தேறினார். வித்துவான் தாண்டவராய முதலியார் என்பவரிடம் முறையோடு தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் இவர் கற்றுத் தேரினார். பின்னர், காஞ்சிபுரம் சபாபதி முதலியார் என்பவரிடமும் தமிழ் நூல் பாடம் கேட்டுப் புலமையை வளர்த்துக் கொண்டார்.

படிக்கும் போதே அலுவலும் புரிந்து ஊதியம் ஈட்டினார். சென்னை அரசாங்கக் காரியாலயத்திலும், தங்க சாலையில் உள்ள ஓர் அலுவலகத்திலும் இவர் பணியாற்றியுள்ளார். அப்போது இவர் பெற்ற மாத வருமானம் ரூ116-

தமக்கு இளமையில் கல்வி போதித்த புதுவை அச்சுத உபாத்தியாயர் என்பவரிடம் இவர் அட்டாவதானங்களைக் கற்றுள்ளார். இவர் செய்த அட்டாவதானங்கள் எவையென்று தெரியாவிட்டாலும் நாடெங்கும் சென்று அவதானங்களை நடத்தி நற்பேர் பெற்றுள்ளார் என்பது தெரிகிறது.

இவர் பலரது நூல்களுக்கும் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். திருமலைவாயில் அப்பாவுப் பிள்ளை என்பவர் பாடிய 'அரிச்சந்திர நாடக'த்திற்கும், தொண்டைநாடு, திருத்தொட்டிக் கலை, கேசவ முதலியார் பாடிய 'அறுபத்தி நான்கு திருவிளையாடற் சற்குரு மாலை' என்ற நூலுக்கும் மேலும் பல நூல்களுக்கும் இவர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். சென்னையைச் சேர்ந்த மயிலையில் வாழ்ந்த அண்ணாசாமிக் கவிராயர் இவர் காலத்தவரேயாவர். இவரது மாணவரான பள்ளி

கொண்டான் பிள்ளை பல நூல்களை எழுதியுள்ளார். 'மணவாள மாமுனிகள் நான் மணிமாலை,' 'நம்மாழ்வார் நான்மணிமாலை' என்பன அவைகளில் குறிப்பிடத்தக்கன.

### வீராசாமி செட்டியார்

அட்டாவதானிகளுள் குறிப்பிடத்தக்கவர்களில் இவரும் ஒருவர். இவர் சென்னை மாநகரில் வாழ்ந்தவர். இலக்கண இலக்கியப் புலமையுடன் அட்டாவதானம் செய்வதிலும் புகழ் பெற்று விளங்கியவர் வைணவசமயத்தைச் சேர்ந்த இவர் அச்சமயக்கருத்துகளைப் பரப்புவதிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

இவர் சென்னை துரைத்தன வித்தியாசாலையில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் சென்னை, பிரசிடென்சிக் கல்லூரியிலும் தமிழ்ப்பணியாற்றினார். பைபிள் தமிழ்மொழி பெயர்ப்பைத் திருத்தும் பணி இவருக்குத் தரப்பட்டது. அதைச் செம்மையாகச் செய்து பாராட்டுப் பெற்றார். உவின்ஸ்லோ அகராதி தொகுக்கும் பணியைச் செய்தும் சிறப்புப் பெற்ற இவர், பாரத, இராமாயணச் சொற்பொழிவுகளை ஆங்காங்கு நடத்தியும் புகழ்பெற்றார். 'விநோதரச மஞ்சரி' என்னும் உரைநடை நூலையும் 1888இல் இவர் வெளியிட்டார்.

கலியாண ஏசல், நாகத்தம் பிரான் பதிகம், போன்ற நூல்களையும் இயற்றியுள்ள இவர், புதுச் சேரியில் வாழ்ந்த ஆரோக்கிய நாயகர் இயற்றிய தேம்பாவணிக் கீர்த்தனையைப் பாராட்டிச் சிறப்புப் பாயிரமும் பாடியுள்ளார்.

ஆங்காங்கு சொற்பொழிகள் நடத்திப் புகழ் பெற்றது போலவே அறிஞர்கள் பலர் கூடியுள்ள அவைகளில் அட்டாவதானங்களைச் செய்தும் இவர் பெரும் புகழ் பெற்றார்.

### அரங்கநாதக் கவிராயர்

அட்டாவதானம் செய்து புகழ்பெற்றவர்களில் இவரும் ஒருவர். தொண்டை மண்டலத்தில் வேளாளர் மரபில் தோன்றிய இவர், சேக்கிழார் மரபைச் சேர்ந்தவர். இவரது பாட்டனார் சொக்க நாதப் புலவரும் ஓர் அட்டாவதானியாவார். தம் பாட்டனாரிடமே கல்வியையும் அட்டாவதானத்தையும் இவர் கற்றுத் தேர்ந்தார்.

தொண்டை மண்டலத்திலிருந்து துறையூரை அடைந்து அட்டாவதானங்களைச் செய்து புகழ் பெற்றார். கோட்டூர்ச் சிற்றரசன் திருமலைரெட்டி என்பவன் இவரது திறமையை அறிந்து ஆதரவு கொடுத்தான். வில்லிபுத்தூரார் பாடிய பாரதத்தை நிறைவு செய்து தருமாறு அம்மன்னன் இப்புலவரை வேண்டினான். அவ் வேண்டுகோளை ஏற்று இவர் பாரதத்தின் பிற்பகுதியைப் பாடிக் கொடுத்தார். சாலிவாகன சகாப்தம் 1675இல் பெரும்புலவர்கள் பலர் கூடியிருந்த அவையில் இவர் பாடிய பகுதி அரங்கேற்றப் பட்டது. புலவர்கள் அனைவரும் இவரது புலமையை வியந்து போற்றினர்; அது கண்டு மகிழ்ந்த அரசன் இவருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பி வைத்தான். அந்நிகழ்ச்சியை வேறு ஓர் புலவர் அரிய கவிதையாக வடித்துத் தந்துள்ளார்

மாற்றலர்கள் பணிபாதன் திரு மலைவேள்
வரைமீது வைத்த தீபம்
தோற்றிய போல் நம்மிருவர் பேர்விளங்கப்
பாரதத்தைச் சொல்க வென்ன
நாற்றிசையும் புகழ்குன்றைச் சேக்கிழார்
குலச்சொக்க நாதன் பேரன்
சாற்றியிடும் அட்டாவ தானரங்க
நாதகவி தான்சொன் னானே!

ஏறிய சகாத்தம் ஆயிரத் தறு நூற்
றெழுபதி னைந்தின்மேல் ஞானம்
தேறிய திடுவா வடுதுறை மேவும்
சிவப்பிர காச தேசிகப்பேர்
கூறிய தவத்து முனிவரன் மகிழ்ச்சி
கூர்தரச் சபையெலாம் புகழ
வீறிய தெய்வக் கதையரங் கேற்று
வித்தனன் அவன் எவன் என்னில்

சிற்பரற் கன்புபுரி திருமலைக்கோர்
சிறப்புடைத் துணைவன்: நீள்பனுவல்
சொற்பயில் சிதாத்த கோத்திரன் சென்னூர்த்
துலங்கிய நாயகன் புதல்வன்
பொற்புய சயிலப் போலபூ பாலன்
புகழையே பொருளென நினைந்து
கற்பகா லமுந்தன் பெயர்நிலை நிற்கக்
காவியம் தனதெனக் கொண்டான்!

பாடிய புலவற்கு அம்பொனும் மணியும்
பணிகளும் பாய்பரி மாவும்

தேடிய மணிப்பொற் சிவிகையும் தூசும்
　　சிந்தைகூர் தரும்படி கொடுத்தான்!
நாடிய அவனும் துணைவரும் சுதரும்
　　நலந்திகழ் கிளைஞரும் ஓங்கி
நீடிய செல்வக் களிப்பினில் உறைந்து
　　நெடிதுநாள் இனிது வாழியவே!

என்பதுவே அக்கவிதை

## சொக்கலிங்கப் புலவர்

கி. பி. 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் ஒருவரான இவர் ஒரு சிறந்த அட்டாவதானியாவார். இவரது சொந்த ஊர் சேலம். வேளாளர் குலத்தில் பிறந்த இக்கவிவாணர் அருந்தமிழ்ப்புலமை வாய்க்கப் பெற்றவர். அத்துடன் வடமொழியிலும் நன்கு புலமை பெற்றிருந்தார். வடமொழியிலிருந்த சேலம் பாவ நாசத்தல புராணம் என்ற நூலை இவர் தமிழில் மொழிபெயர்த்தார். அந்நூல் பன்னிரண்டு படலங்களையும், அறுநூற்றி எழுபத்திரண்டு செய்யுட்களையும் உடையது. சொற்சுவையும், பொருட்சுவையுமுடைய அந்நூலைப் பலரும் பாராட்டிப் போற்றியுள்ளனர்.

இவரது வேறு நூலான சேலம் தல புராணமும் சிறந்த ஓர் நூலாகும். அந்நூலுக்கு சே. அ துரை சாமிப் பிள்ளை என்பவர் உரையெழுதியுள்ளார். 'திருவள்ளுவர் புராணம், என்ற ஓர் அரிய நூலையும் இப்புலவர் இயற்றியுள்ளார். திருக்குறட் கருத்துக்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட அந்நூலும் கற்போர் உள்ளம் களிக்கச் செய்யும் தன்மையுடையதேயாகும்.

"புண்ணியம் செய்யில் சித்தம் புனிதமாய் ஞானம் எய்தும்:
உண்ணிறை ஞானத்தாலே உலகத்துப் பற்று நீங்கும்:
எண்ணுறு பற்று நீங்க இரண்டற ஒன்றாம் முத்தி
திண்ணமே; பாவம் தேயப் புண்ணியஞ்செய்வர் மாதோ!"

என்பது திருவள்ளுவர் புராணத்திலுள்ள ஓர் பாடலாகும். புண்ணியம் செய்தால் திண்ணமாக முக்தியடையலாம் என்பதை இப்பாடல் நன்கு விளக்குகிறது. சேலம் நகரில் பல இடங்களிலும் தமிழகத்தின் முக்கிய நகரங்களிலும் இவர்தமது அட்டாவதானங்களைச் செய்து காட்டிப் பரிசும் பாராட்டும் பெற்றுள்ளார்.

## சரவணப் பெருமாள் கவிராயர்

குறிப்பிடத்தக்க அட்டாவதானிகளில் இவரும் ஒருவர். பாண்டி மண்டலத்தைச் சேர்ந்த சேது நாட்டில் முதுகுளத்தூர்

என்னும் ஊரில் பிறந்தவர். வேளாளர் குலத்தில் தோன்றிய இப்பாவாணர் இளமையிலேயே தமிழில் புலமையும் கவிபாடும் வன்மையும் பெற்றுத் திகழ்ந்தார். அந்நாளில் இராமநாதபுரத்தில் சோம சுந்தரம் பிள்ளை என்ற தமிழறிஞர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவஞான முனிவரிடம் பாடம் கேட்டுச் சிறப்புப் பெற்றவர். அத்தகைய சோம சுந்தரம் பிள்ளையிடம் கல்வியறிவையும், கவிபாடும் ஆற்றலையும் இவர் பெற்றுப் பெருமையடைந்தார்.

இவரது தமிழறிவையும், கவிபாடும் சிறப்பையும் அட்டாவதானம் செய்யும் ஆற்றலையும் கேள்விப்பட்ட இராமநாதபுரம் அரசர் முத்து இராமலிங்க சேதுபதி இவரைத் தம் அவைக்களப் புலவர்களில் ஒருவராக நியமித்தார். ஆயினும் அந்த அவைக் குள்ளேயே இவர் அடங்கிக் கிடக்காது தமிழ் நாடு முழுவதும் சென்று தம் அட்டாவதான மேன்மையைக் காட்டிப் பரிசுகள் பல பெற்றார். பரிசு தருவார் என்பதற்காக எந்த அரசரையும் இவர் மிகைப்படுத்தியோ, தேவையின்றிப் புகழ்ந்தோ பாடி அறியாதவர். தமது திறமையிலும் புலமையிலும் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த இவர் எவரையும் பொருட்படுத்தாமல் பாடும் இயல்புடையவர். சிவகங்கை அரசரிடம் சென்று இவர் பாடிய பாடலே இவர் தன்மைக்குத் தக்க சான்றாகும்.

''அரியலூர் வீரன் மேல் பாடியவன் ஒருவீட்டை
ஆயிரம்வீ டாக்கி வைத்தோம்
அம்மை நாதன் பேரில் வண்ணம் படித்தவனை
அரசுநிலை யிட்டு வைத்தோம்
ஆப்பனூர்க் குறவஞ்சி பாடியே கோடையுடன்
ஆடையும் விளைய வைத்தோம்;
ஆனந்த நாதனுக்குப் புதுச் சேரிதனில்
அழியாச்செல் வங்கொ டுத்தோம்
கருதியச ரதுநபா புவையெதிர் வரச்சொல்லிக்
காகிதம் அனுப்பி வைத்தோம்
கடலாடி முத்துக் கருப்பணன் வணந்தனைக்
கற்றோர்க் கமுதம் ஆக்கினோம்
காரை நகர் லட்சுமண முதலிபுகழ் பெறநங்
கடைக்கணால் பார்த்து விட்டோம்
கவித்தலம் தன்னின்முத் தயமூப் பனைக்கற்ப
காலமும் இருக்க வைத்தோம்
வரிசைபெறு பஞ்சமால் பண்டாரம் உத்யோகம்

மாறா திருக்க வைத்தோம்;
மற்றுமவ னுக்கிளைய பிச்சாண்டி செட்டிக்கு
வத்ரதே சங்கொடுத்தோம்;
வாடும் பயிர்க்குத் திருக்கூட லூரிலே
மழை பெய்ய நாம் பாடினோம்
மகமது தம்பிக்கு நீடூழி சாகா
வரத்தைக் கொடுத்து விட்டோம்
திருவையாற் றுச்சுப்ர மண்யபிள் ளைக்குச்
சிரஞ்சீவி :தனையளித்தோம்
சேதுபதி வாசல்அவ தானியாம் நம்மகிமை
தெரியாத பேருமுண்டோ?
தெள்ளமுது போலஎம் உளமீது பாடிவரு
செந்தமிழ் நிறுத்த லாமா?
சிவகங்கை அரசுபுரி கவுரிவல் லவராச
செகமண்ட லாதி பதியே!

என்பது அப்பாடல்

## இராமசாமியா பிள்ளை

பாண்டிய நாட்டில் கழுகுமலை என்னும் ஊரில் கி. பி. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியவர் இவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் ஆழ்ந்த புலமையுடைய இவர் வட மொழியையும் ஆழ்ந்து கற்றுத் தேர்ச்சி பெற்றார். சேதுபதி மன்னர் அரசவையிலும் மற்றும் நாடெங்கிலும் உள்ள செல்வர் கள் சிற்றரசர்கள் முன்பும் தமது அவதானக்கலையின் சிறப்பைக் காட்டிப் பரிசுகளையும் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்.

கடிகை நமசிவாயப்புலவர், இராசவல்லிபுரம் முத்து சாமியா பிள்ளை, புதூர்வள்ளி நாயகம் பிள்ளை, அழகிய சொக்கநாதப்பிள்ளை, கவிராசநெல்லையப்ப பிள்ளை, கடிகை பரமசிவப்புலவர், பாளை, சண்முகநாதன் கவிராசர் ஆகியோர் இவரது சமகாலப்புலவர்களில் சிறந்தவர்களாவார்கள்.

இவர் பலரது நூலுக்கும் சிறப்புப் பாயிரம் பாடிய பெருமைக்குரியவர். கடிகை நமசிவாயப் புலவர் இயற்றிய 'வல்லீபரதம்' என்ற நூலுக்கு இவர் பாடிய சிறப்புப் பாயிரத் தில் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

"மகராச ராச பூசிதராச மகராச
மகராச ராச ஸ்ரீ

மாமண்ட லாதிபதி சோமசே கரசரண
வரசக்ர தரபூபதி
மலர்மங்கை நடனமிடு தளவாய் புயாசலன்
வாணர்கலி கோப னீல
மயில்வா கனத்துலவு கைலாய சற்குருவை
வடிவேல் எடுத்த கரசே
வலர்கார்த்தி கேயருட பத்தாம ரைத்துணை
மலர்ந்தமகு டாதி பத்யன்
மன்னுபுகழ் தென்னிளசை அரசுபுரி நலசில்ல
வார்கோத்ர சிந்தாமணி
மநுநீதி தவறாத சக்ரவர்த் தினியவர்கள்
வரிசைபல பெற்ற சுமுகன்
வம்சமணி தீபிகை எனும் பெருநன்னூல் கொடுதம்
மரபினை விளக்கும் வரதன்
செகராசர் பரவச்சி வந்தபொற் கமலபத
திடவுக்ர சௌரிய விசயன்
செகவீர ராமக்கு மாரஎட் டேந்த்ரமுகில்
திருவுளக் கனிவு கூர்ந்து
தென்கழுகு மலைவாசர் சரவணோற் பவரன்பர்
சிந்தைகுடி கொண்ட நேசர்
தேவசே னாபதி நான்மறைக் கெட்டாத
திவ்யசர ணார விந்தச்
தேவசே னைக்குரிய ராகியுங் கான்வேட
சேரியிற் சிறுமி தந்த
செந்தினைப் பிடியுண்டானந்த பரவசத்
தினராய் மணந்த கதையை...''

என்று நீண்டு செல்கிறது அப்பாடல்

## சந்திரசேகர உபாத்தியாயர்

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மாயூரம் என்ற ஊரில் பிறந்த இவர் கி.பி. 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் ஆழ்ந்த புலமையுடையவர்,அத்துடன் எட்டு அவதானங்களைச் செய்வதிலும் நிகரற்று விளங்கியவர். இவர்.பள்ளிக் கூடம் ஒன்றை நிறுவி ஆசிரியப் பணியையும் புரிந்தவர்.எனவேதான் சந்திரசேகர உபாத்தியாயர் என்றே அழைக்கப் படுகிறார்.

இவர் சிறந்த கவிஞராகவும் திகழ்ந்தார்.'கந்த புராணசதகம்' என்பது இவர் இயற்றிய நூல்களில் குறிப்பிடத்தக்கது. கந்த

புராணத்தின் சிறப்பைப் பற்றிக்கூறும் அந்நூல் புலவர் பலராலும் போற்றிய பெருமைக்குரியது. பிறர் இயற்றிய நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் பாடிப் பெருமை பெற்ற இவர் முத்துசாமி பாரதியார் என்பவரால் பாடப் பெற்ற 'விசுலப்பிரம புராணம் என்ற நூலைப் பாராட்டியும் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார் அந்நூல் நாற்பத்தைந்து அத்தியாயங்களையும், ஆயிரத்து நூற்றி இருபத்தோறு செய்யுட்களையும் கொண்டது.

இவர் தாம் நிறுவிய பள்ளியில் பயின்ற மாணவர்களுக்குக் கல்வியைப் போதித்ததுடன் அட்டாவதானத்தைப்பற்றியும் போதித்துள்ளார். ஆனால் இவரிடம் அட்டாவதானம் பயின்ற அவதானிகள் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு வேளை மாணவர்கட்கு ஆர்வமின்மையால் தொடர்ந்து பயிற்சி பெறாமல் போயிருக்கலாம். 'கந்த புராணசதகம்' அசுர காண்டத்தில் ஒரு பாடல்:

ஆறுமுகம் ஈராறு தோளருட்கண்கள் கொண்டு
அருளவே திருவுளஞ் செய்து
ஆறுபிறை சூடிஉமை வேறுவே றாப்புரி
அருந்தவத் துறுதி கண்டாங்கு
ஊறுசர வணவாவி மேவுநின துற்பத்தி
உரையாட வல்ல ருளரோ;
ஓதுமுன் காசிபன் அளித்தவ வுணர்க் கிறைவ
உதவுசுர சைப் பெயரினாள்
கூறுபுக ரிடைமாயை விஞ்சைகற் றவனால்
கொடுத்த மாயைப் பெயர் கொடே
குலவிருத் தியையெண்ணி வெள்ளிமுயல்வாணிதிக்
குன்றின்வட பால்வி யக்க
வீறுதவ வடிவான காசிப னிருக்கை புக
வினைமயில் கொளத் தெரிந்தாய்
மேதகைய ரோதுமிரு மாதிரிரு பாலமர
வேதபுரி வாழ்கும ரனே!

## நா. கதிரை வேற் பிள்ளை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புலோலியூர் என்னும் ஊரில் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்த இவர் அந் நாட்டில் அவதானக்கலையின் மேன்மையை அறியவைத்த சான்றோராவார். வேளாளர்மரபில் தோன்றிய இவரது தந்தை யார் பெயர் நாகப்பபிள்ளை. இளமையிலேயே அவதானம் செய்வ

தில் ஈடுபாடு கொண்டிருந்த இவர் அட்டாவதானம் செய்யத் தொடங்கிப் பின்பு தசாவதானம் செய்யும் நிலைக்கும் உயர்ந்தார். எனினும் பெரும்பாலும் இவர் அட்டாவதானங்களே செய்து வந்தமையால் அட்டாவதானி என்றே பலரும் இவரைப் போற்றலாயினர்.

அருந்தமிழ் மொழியைத் திருந்தக்கற்ற இவர் வடமொழியையும் கற்று அதிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார். அவதானங்கள் செய்வதில் சிறந்து விளங்கியதைப் போலவே கேட்டார்ப் பிணிக்கும் வண்ணம் சொற்பொழிவாற்றுவதிலும் இவர் சிறந்து விளங்கினார். பெரும்பாலும் இவர் சைவசமயத்தின் மாண்பினைக் காட்டும் சமயச் சொற்பொழிவுகளையே நடத்தியுள்ளார்.

1897 ஆம் ஆண்டு சென்னை வேப்பேரியிலுள்ள ஓர் உயர்நிலைப்பள்ளியிலும் 1898 ஆம் ஆண்டு சாந்தோம் உயர் பள்ளியிலும் தமிழாசிரியராக இவர் பணியாற்றியுள்ளார். திருவருட்பாவை மருட்பாவே என்றும் போராடிய இவர் தம் 33ஆம் வயதில் குன்னூரில் இயற்கை எய்தினார்.

கூர்ம புராண விரிவுரை, பழநிலத் தலபுராண உரை, சைவ சந்திரிகை, சைவசித்தாந்தச் சுருக்கம், சிவாலயமகோற்சவ விளக்கம், சுப்ரமணிய பராக்கிரமம் என்பன இவர் இயற்றிய நூல்கள். யாழ்ப்பாண அகராதியைத் தொகுத்தெழுதிய பெருமையும் இவரையே சாரும். பல்துறையிலும் தொண்டாற்றிய அவதானிகளில் இவர் குறிப்பிடத்தக்கவர்.

## நா. ஏகாம்பரம்

யாழ்ப்பாணம் தந்த அறிஞர்கள் இவரும் குறிப்பிடத்தக்கவர். வெல்லுவெட்டித்துறை என்னும் ஊரில் கி.பி. 1844 ஆம் ஆண்டில் தோன்றிய இவரே இலங்கையில் முதன் முதல் அட்டாவதானம் செய்த பெருமைக்குரியவர். இவரிடமிருந்தே பிறர் பின்பு கற்றிருக்க வேண்டும்.

தமது ஊர்ப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பயின்ற இவர் பின்னர் யாழ்ப்பாணம் கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலக் கல்வியும் கற்றுத் தேறினார். பின்னர் இந்தியாவிற்கு வந்து பி.யூ.சி. படித்துத் தேறினார்: இந்தியாவிற்கு வந்த காரணத்தாலோ என்னவோ ஆங்கிலக் கல்வியில் அவருக்கிருந்த ஆர்வம் மறைந்து

தமிழ்மீது அதிக ஆர்வம் அரும்பியது.எனவே ஆங்கிலப்படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுத்தமிழை ஊன்றிக்கற்க விரும்பினார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, இராசகோபாலப் பிள்ளை. இராமலிங்கம் பிள்ளைபோன்ற தமிழறிஞர்கள் இவரது தமிழ்ப்பசிக்குத் தக்க உணவிட்டுச்சிறக்கவைத்தனர். அதன் விளைவாகத் தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு படிக்கும் வாய்ப்பும் இவருக்குக்கிட்டியது. தமிழ்வல்ல சான்றோராக விளங்கிய இவர்எவரிடத்தில் அட்டாவதானத்தைக்கற்றார் என்பது தெரியவில்லை.தமிழைக்கற்கவிரும்பியதன்விளைவாகவே அவதானத்தையும் இவர்கற்க முற்பட்டிருக்க வேண்டும். தமிழ் நாட்டில் இவர் தங்கியிருந்த காலத்தில்தான் அட்டாவதானத்தையும் கற்றிருக்க வேண்டும்.

## அரங்கசாமி ஐயங்கார்

கி.பி இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அட்டாவதானிகளில் இவரும் ஒருவர். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வடுவூர் என்ற ஊரில் பிறந்த இவர் இளமையிலேயே தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். எட்டு அவதானங்களையும் செய்வதில் தேர்ச்சி பெற்ற இவரை ஆதரித்துச் செல்வங்களை ஈந்தவர் அரித்துவாமங்கலம் கோபாலசாமி ரகுநாத ராசாளியார் என்ற வள்ளலாவார். மேலும் பல செல்வர்களும் இவரது அட்டாவதானக் கலைத் தேர்ச்சியைப் பாராட்டிப் பரிசில்களை வழங்கினர்.

தம்மை ஆதரித்த வள்ளலாகிய கோபாலசாமி ரகுநாத ராசாளியார் என்பவர் மீது இவர் பாடிய பாடலில் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

"திருவளர் சகாத்தமொ ராயிரத் தெழுநூறு
சேர்ந்ததொண் ணூற்றி ரண்டு
திகழ்கலியி னாலா யிரத்துத் தொளாயிரம்
செப்புமெழு பத்தொன்றினில்
திசைபுகழ்பி ரமோதூத வாண்டுவிர்ச் சிகமதி
யினில் தேதி பதினே ழினில்
திதிநவமி நாழிகையொர் முப்பத்தொண் முக்கால்
சிறந்தமுற் பக்க மோது
பருவில் குருவாரநாள் பன்னுபூ ரட்டாதி

பகிருபத் தொன்பதரை மேற்
பயிலுத்தி ரட்டாதி யறுபத்தி மூன்றுபரி
நாம மிருபத் தேழரை
பாலவா கரணமோ ரெட்டரையி னிரவினில்
பங்கிலிரு பத்தேழின் மேல்
பரவமிர்த கடிகையுத யாதியைம் பத்தைந்து
பரசு நாலரையின் வீசம்

கருவதில் விருச்சிகத் தோரையில் கேட்டைநாள்
கருதொன்றினிற் சூரியன்
கனவுத்தி ரட்டாதி யோரிரண் டிற்றிங்கள்
காண்பூர நாலிற்குசன்
கம்பமதின் மூலமொன் றிற்புதன் காரியுங்
காசிலா மிருக சீரிடங்
கணித மூன் றிற்குருவும் அனுடநா ளிற்பிருகு
கணியுமா திரைநாளினில்

அருகுட லிராகுபூ ராடம திரண்டினில்
ஆனதொரு கேது சேரும்
அலகில்புகழ் சுபயோக சுபகரண நாளினில்
அரித் வார மங்கலத் திற்கு
அரசு சீ தரயோகி ராமாநுச தாச
னானபெயர் மேவு தூய்மை
அமையுமுயர் கோபால சாமிரகு நாதரா
சாளியவ தார நாளே!

**அப்துல் காதர்:**

பாரெல்லாம் போற்றும் சீறாப் புராணத்தைப் படைத்துப் புகழ்பெற்ற உமறுப் புலவரின் மகன்வயிற்றுப்பேரன் இவர். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த எட்டையபுரத்தில் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் பிறந்த இவர் வாழ்க்கை வரலாறு வியப்பிற்குரியது.

அறிஞர் பலர் பிறந்த மரபில் பிறந்தும் கூடக் கல்வியில் நாட்டமின்றி மூடராகவே இவர் இளமையிற் காணப்பட்டார். கல்வி கற்பதற்குரிய பருவத்தில் ஊர் சுற்றுவதையே கடமை யாகக் கொண்டு திரிந்த இவர் பயனற்றவராக ஆகிவிடுவாரோ என்று தான் எல்லோரும் அஞ்சினர். இவரது மைத்துனர் நயினார் முகமது என்பவரும் ஒரு புலவர். இவரது நிலை கண்டு வருந்திய நயினார் முகமது, முப்பது வயது நிரம்பிய மூடரான அப்துல் காதரைக் கல்வி கற்குமாறு தூண்டினார். அவர்

தூண்டுதல் வீணாகி விடவில்லை. எப்படியும் கற்றே தீருவது என்ற உறுதி அப்போது அப்துல் காதருக்கு ஏற்பட்டது. அதன் பிறகு கற்கத் தொடங்கிய இவர் பத்தே ஆண்டுகளில் நன்கு கற்றுத் தேறி பெரும் புலவராகவும் ஆகிவிட்டார். மூடரென்று முன்பு இகழப்பட்ட இவர் இப்போது மேதை யென்று போற்று மாறு கலையறிவும் தெய்வீகத் தன்மையும் பெற்று விளங் கினார்.

அந்நிலையில் தான் அவதானக்கலையைக் கற்கும் வாய்ப்பும் அவருக்குக்கிட்டியது. அக்கலையிலும் சிறந்து விளங்கி அட்டா வதானியென்று போற்றும் நிலையினையும் அடைந்தார். நாட்டில் பல இடங்களுக்கும் சென்று அவதானம் செய்து பரிசு களையும் பாராட்டுதல்களையும் பெற்றுத் திரும்பினார். இவரது மேன்மையைக் கண்டு மகிழ்ந்த மைத்துனர் நயினார் முகமதுப் புலவர் தனது தூண்டுதல் தந்த பயனைக்கண்டு மாட்டிலா மகிழ்வெய்தினார். மதுரை மீனாட்சி சுந்தரம் பிள்ளை போன்ற புலவர்களும் இவரைப் போற்றிப் புகழ்ந்தனர்.

சிறந்த கவிஞராகவும் திகழ்ந்த இவர் பல தனிப்பாடல் களையும் பாடியுள்ளார். இவர் இயற்றிய மதீனத்து அந்தாதி என்ற நூல் புலவர்கள் வியந்து போற்றும் வண்ணம் பொருட் சுவை சொற்சுவை பெற்றுச் சிறப்படைந்தது.

முயன்றால் எதனையும் சாதித்துக் காட்ட முடியும் என்பதற்குச் சிறந்த சான்றாக விளங்கிய இவர் சென்ற இடமெல்லாம் செந்தமிழின் சிறப்பினையும் அட்டாவதானத் தின் அருமையினையும் பிறர் உணரச் செய்து புகழ் பெற்றார்

## முத்துச் சாமிக் கோனார்

கி.பி.19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அட்டாவதானிகளில் இவரும் குறிப்பிடத்தக்கவராவார். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செங்கோடு என்னும் ஊரில் ஆயர் குலத்தில் கி.பி. 1858 ஆம் ஆண்டு ஆனித் திங்களில் இவர் தோன்றினார்.

திருச்செங்கோட்டிலிருந்த ஒரு திண்ணைப் பள்ளியிலேயே இவர் ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். முதலில் தாய் மொழியாகிய தமிழை நன்கு கற்றுத் தேறினார். இலக்கிய இலக்கணங்களில் புலமையும் பெற்றுச் சிறப்புற்றார். பின்னர் தெலுங்கு வட மொழி ஆகிய இரண்டு மொழிகளையும் கற்று அம்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றார்.

கவிபாடும் ஆற்றலையும் பெற்ற இந்த அட்டாவதானியார் இசையோடு பாடல்களைப் பாடிக் காட்டும் திறமையையும் பெற்றிருந்தார். பேச்சாற்றலிலும் வல்லவரான இவர் தனக்கென ஒரு தனிப்பாணியையும் அமைத்திருந்தார். எவ்வளவு நுட்ப மான கருத்தினையும் கேட்பார் மனங் கொள்ளுமாறு நகைச் சுவையுடன் பேசுவதே இவரது பாணியாகும். புராணங் கள் பலவற்றையும் ஆழ்ந்து கற்ற இவர் அப்புராணங்களில் உள்ள செய்திகளைச் சொற்பொழிவின் மூலம் மக்களுக்கு எடுத்துக் காட்டினார்.

சித்தூரார் பெருநிலக் கிழார் ஒருவரின் உதவியால் 'விவேக திவாகரன்' என்ற பதிப்பகம் ஒன்றினையும் இவர் தோற்று வித்துச் செயல்பட்டார். யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளையிடம் பாடம் கேட்டே இவர் அட்டாவதானத்தைக் கற்றுணர்ந்தார்.

## இராமநாதன் செட்டியார்

கி. பி. 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அட்டாவதானி களில் இவரும் ஒருவர். தஞ்சைக்கு மூன்றுகல் தொலைவில் உள்ள அம்மன் பேட்டை என்பது இவர் பிறந்த ஊர். இவர் இளமையிலேயே தமிழ் இலக்கிய இலக்கணங்களை ஆழ்ந்து கற்று அறிஞராகத் திகழ்ந்தார். சங்க இலக்கியங்களில் பெரிதும் விருப்புடைய இவர் வேதாந்த சித்தாந்தங்களிலும் ஈடுபாடு கொண்டு அவற்றையும் முறையோடு கற்றுத் தெளிந்தார். மேலும் ஜோதிடக் கலையிலும் இவர் வல்லவராகவே விளங்கி யுள்ளார்.

இவர் ஒரு ஆசிரியராக இல்லாவிட்டாலும் ஆசிரியரைப் போலவே தமக்குத் தெரிந்த அருங்கலைகள் அனைத்தையும் பிறருக்கும் கற்பித்துப் பெருமை பெற்றுள்ளார். இவரிடம் சங்க இலக்கியங்களையும் வேதாந்த சித்தாந்தங்களையும் சோதிடத்தையும் கற்றுப் பயன் பெற்றவர்கள் பலர். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கந்திருவக் கோட்டைக்கருகிலுள்ள மோகனூர் என்னும் ஊரில் பிறந்த எ.வி. வேங்கடராம பிள்ளை என்பவர் இவரிடம் மேற்கண்ட கலைகளையெல் லாம் பாடம் கேட்டுப் பெருமை பெற்றவர்களில் ஒருவராவார்.

அட்டாவதானம் செய்வதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர் தஞ்சையிலும் இன்னும் பிற இடங்களிலும் அவதானங் களைச் செய்து காட்டி வள்ளல் பலரது பாராட்டுதல்களையும்

பரிசுகளையும் பெற்றுள்ளார். தமக்குத் தெரிந்த பிறகலைகளை மற்றவர்க்குப் போதித்தது போல அவதானத்தையும் போதித்தாரா என்பது தெரியவில்லை.

## சின்ன இபுறாகீம் மொகியதீன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அவதானிகளில் இவரும் ஒருவர் கி. பி. 19 ஆம் நூற்றாண்டில் மன்னார்ப் பகுதியில் தோன்றிய இவர் அட்டாவதானம் செய்வதில் தன்னிகரற்றவராக விளங்கினார். இலங்கையில் முதன் முதலாக அட்டாவதானத்தை அறிமுகம் செய்த நா. ஏகாம்பரம் என்பவரிடமிருந்தே இவர் அக்கலையைக் கற்றறிந்தார். கவிபாடும் திறமையும் தமிழ் இலக்கண இலக்கியங்களில் சிறந்த புலமையும் பெற்றவராகவே இவர் விளங்கியுள்ளார்.

அவதானம் செய்பவர்களுக்கு ஆங்காங்கு சோதனைகளும் கசப்பான அனுபவங்களும் ஏற்படுவது இயல்பு. அவதானிகளின் திறமையைச் சோதிப்பதற்காக அப்படிச் செய்பவர்கள் உண்டு. சில போது அவர்கள் மீது கொண்ட அழுக்காற்றினால் அடாது செய்பவர்களும் உண்டு. அப்படிப்பட்ட தடைகளையெல்லாம் தாண்டித்தான் அவர்கள் புகழ் பெற்று விளங்கியுள்ளார்கள்.

ஒரு முறை இவர் அட்டாவதானம் செய்யும் பொழுது பாடிய பாடலை முகம்மது காசீம் என்பவர் வேண்டுமென்றே தவறாக எழுதிக் கொடுத்து அப்பாடல் குற்றம் உடையது என்று அவையோர் முன் வாதிடத் தொடங்கினார். தாம் பாடிய பாடல் குற்றமற்றது என்பதை இவர் நன்கு அறிவாராதலால் அந்த வீண்பழியை இவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் உள்ளம் கொதித்தது. "ஆவென்னு மட்சரத் தாதியென் றறியாத" எனத்தொடங்கும் வெண்பாவை உடனே பாடி பழி கூறியவர் வெட்கித் தலைகுனியச் செய்தார்.

## சுப்பிரமணியதாசு

திருவிதாங்கூரைச் சேர்ந்த நாஞ்சில் நாட்டில் உள்ளதும் திருமால் திருப்பதிகள் நூற்று எட்டுள் முதன்மை பெற்றதுமாகிய திருப்பதிசாரம் என்னும் ஊரில் கி. பி. 1878 ஆம் ஆண்டு தைத்திங்களில் பிறந்தவர் இவர். தந்தையார் பெயர் பசுங்கிளித் தேவர். தாயார் ஆச்சியம்மாள்.

அரிய கலையாகிய அவதானத்தைக் கற்றுப் புகழ் பெறுவதற்கு முன்பு பல்வேறு தொழில்களைக் கற்று அனுபவங்கள்

பலவற்றைப் பெற்றவர் இவர். நான்காம் வகுப்பு வரை திண்ணைப் பள்ளியில் படித்த இவர் அதற்கு மேலும் படிப்பதற்கு ஆர்வமின்மையால் படிப்பை அத்துடன் நிறுத்திவிட்டு மற்போர் செய்வதற்குரிய பயிற்சியைப் பெறத் தொடங்கினார். அத்துடன் அவர் அமைதியடையவில்லை. நாடகங்கள் எங்கே நடந்தாலும் சென்று அதைப் பார்த்து வரும் பழக்கமே அவரது தொழிலாகச் சில காலம் இருந்தது. அதன் விளைவாகத் தானும் நடிக்க வேண்டும் என்ற வேட்கையும் அவருக் கெழுந்தது. சில நாடகங்களில் நடிக்கவும் செய்தார்.

பகுதி நேரத் தொழில்களாகவே இவையெல்லாம் அமைந்து விட்டதால் நிரந்தரத் தொழில் ஒன்றையும் அவர் செய்தாக வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு வீட்டில் உருவாகியது. குடும்பத்தினர் செய்து வந்த உழவுத் தொழிலையே சிலகாலம் இவரும் செய்து வந்தார். அப்போது அவருக்கு வயது முப்பது. அதுவரை அவர் பெற்ற வாழ்க்கை அனுபவங்களின் விளைவாகவோ என்னவோ அதற்கு மேல் கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. நான்காம் வகுப்போடு நிறுத்தப்பட்டிருந்த அவரது கல்விப் பயணம் மீண்டும் தொடர்ந்தது.

வடசேரி இராம சுப்பு ஆசாரி என்பவரிடம் வேதாந்தங்களையும் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் முறையோடு கற்கத் தொடங்கினார். முன்பு அவருக்குக் கல்வியில் இல்லாத ஆர்வம் இப்போது ஏற்பட்டதால் கற்கத் தொடங்கிய அனைத்தையுமே கசடறக் கற்றுத் தேறினார். திருக்குறள் மீது அவருக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டதால் நாகர் கோயிலைச் சேர்ந்த மார்க்கண்டேயர் என்பவரிடம் திருக்குறளைப் பாடங் கேட்டார், பின்பு கோட்டாறு சதாவதானி செய்குத்தம்பிப் பாவலரிடமும் திருக்குறளைப் பாடம் கேட்டு மிகுந்த புலமையை அதில் பெற்றார்.

சதாவதானியிடம் பாடம் கேட்டு, அவரிடம் பழகியதன் விளைவாகத் தாமும் அவரைப் போல அவதானம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இவருக்கெழுந்தது. அம் முயற்சியைச் சதாவதானியும் ஊக்குவித்த தோடன்றி திருக்குறளை மையமாகக் கொண்டே அட்டாவதானம் செய்யுமாறு அலோசனையும் கூறினார். எப்படியெல்லாம் திருக்குறளைப் படிக்க வேண்டும் என்றும் அவர் வழிகாட்டினார். அவ்வழியில் சரியாகச் சென்றதால் அவதானம் செய்ய முடியும் என்ற நம்பிக்கையும் இவருக்குப் பிறந்தது.

திருக்குறளின் பாட்டிலக்கம், உரை, அதிகாரம், தொடர் எண் முதலியவைகளில் முக்கிய கவனம் செலுத்தினார். போதிய தகுதியைப் பெற்ற பின்பு முதன் முதலில் கி. பி. 1920 இல் சென்னை மாநகரில் இவரது அட்டாவதானம் அரங்கேற்றப் பட்டது. விபுலானந்த அடிகள், டாக்டர். நடேச முதலியார் ஆகியோர் முன்னிலையில் அந்நிகழ்ச்சி நடைபெற்றது.

பின்னர் 1633இல் உ. வே. சாமி நாதையர், டி. கே. சிதம்பர நாத முதலியார், திரு. வி. கலியாண சுந்தரனார் ஆகியோர் கூடிய அவையில் அட்டாவதானம் நடத்திக் காட்டப்பட்டது. 1949இல் தந்தை ஈ. வெ. ரா. பெரியார் அவர்கள் தலைமையில் கூடிய திருக்குறள் மாநாட்டிலும், 1951இல் சென்னை கோகலே மண்டபத்தில் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தலைமையிலும் திருக்குறள் அட்டாவதானம் செய்து காட்டிச் சிறப்படைந்தார் இவர்.

இரண்டு திருமணங்களைச் செய்து கொண்டவர் இவர். இவரது அருமை மகன் இராமதாசும் திருக்குறள் அவதானி யாகத் திகழ்ந்தவர்.

## முத்துச்சாமி ஐயங்கார்

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அட்டாவதானிகளில் இவரும் ஒருவர். இவரது சொந்த ஊர் இராமனாதபுரம். தமிழறிஞர் ரா. இராகவ ஐயங்காருக்கு இவர் மாதுலர். இளமை யிலேயே தமிழ், வடமொழி, கன்னடம் ஆகிய மூன்று மொழிக ளிலும் மிகுந்த புலமை பெற்றுச் சிறப்புற்றார். இவர் குடும்பச் சூழ்நிலையே இவர் வித்தகராக விளங்குவதற்குத் துணை செய்தது.

தமிழில் புலமை பெற்றுச் சிறந்த இவர் தமிழாசிரியராகப் பணியாற்றிப் பல அரிய மாணவர்களை உருவாக்கினார். இவரிடம் தமிழ் பயின்ற மாணவர்களில் ஒருவர் பாண்டித் துரைத் தேவர். அப்பாண்டித்துரைத் தேவர் தான் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவர். அவருக்கு அப்படியோர் எண்ணம் மலர்வதற்கு இவர் ஊட்டிய தமிழுணர்வும் ஒரு காரணம் என்று கூறலாம்.

முதலில் தமிழ் மொழியிலேயே அட்டாவதானம் செய்து கொண்டிருந்த இவர் பின்பு கன்னட மொழியிலும் செய்யத்

தொடங்கினார். கன்னட அரசர் கிருட்டிணராச உடையார் முன்பு கன்னட மொழியில் ஒருமுறை இவர் அட்டாவதானம் நிகழ்த்தினார். அது கண்டு மகிழ்ந்த அரசர் இவருக்குப் பரிசு களைப் நல்கிப் பாராட்டினார்.

தாய்மொழியிலும் பிற மொழியிலும் அட்டாவதானம் செய்து புகழ்பெற்றவர்கள் இவரைத் தவிர வேறு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வகையில் இவர் குறிப் பிடத்தக்கவரே யாவார்.

## சுப்பிரமணிய ஐயர்

கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அவதானிகளில் குறிப்பிடத்தக்கவர் இவர். பாண்டிய நாட்டில் தேவகோட்டை யில் கி.பி. 1869 ஆம் ஆண்டில் இவர் பிறந்தார். சிறந்த கவிஞரென்று அவ்வூர் மக்களால் பாராட்டப் பெற்ற இவர் தமிழில் மிகுந்த புலமையும் பெற்றுத் திகழ்ந்தார்.

தேவகோட்டையில் வாழ்ந்த தனவணிகர்களின் விருப்பப் படி அவ்வூரிலுள்ள முருகன் மீது 'தேவைப் பிள்ளைத் தமிழ்' என்ற ஓர் அரிய நூலையும் இவர் இயற்றியுள்ளார். பிள்ளைத் தமிழ் நூல்களின் வரிசையில் வைத்துப் போற்றுமளவிற்கு அந் நூல் சிறப்புடையதாகும். அந்நூலின் சிறப்பையும் இவரது நுண்மான் நுழைபுலத்தையும் பாராட்டிப் பல புலவர்கள் பாடியுள்ளார்கள்.

அட்டாவதானங்கள் செய்வதிலும் மிகச் சிறந்தவராகவே இவர் விளங்கியுள்ளார். தேவகோட்டையிலும் இதர செட்டி நாட்டு ஊர்களிலும் வாழ்ந்த தனவணிகர்களில் பலர் இவரைப் பாராட்டிப் பரிசுகளை நல்கியுள்ளார்கள். இவரது தமிழறி வையும் அட்டாவதானத்தில் இவருக்கிருந்த ஆற்றலையும் பாராட்டி இயற்றமிழ் ஆசிரியர் திருத்தணிகை விசாகப் பெருமாளையர் பின்வருமாறு பாடியுள்ளார்.

> "தேவமா புரியுறை செவ்வேள் மீதினில்
> பிள்ளைக் கவியினைப் பெட்புறச் செய்தனன்
> கள்ளைக் குவளைக் கவிழ்குமந் நகரினன்
> வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பினன்
> நலம்பெறு முத்தமிழ் புலம்பெற உணர்ந்தோன்
> அவதானம் எட்டையும் அணிபெறச் செய்வோன்

சிவஞானச் செல்வச் சீர்மிக் குடையோன்
ஒப்பிலா ஒழுக்கமெய் யுணர்வுநன் குடையோன்
சுப்பிர மணிய சுகுனவே தியனே''

என்பது அப்பாடல். இவர் பாடிய 'தேவைப் பிள்ளைத் தமி'ழில் சிறுதேர்ப் பருவத்திலிருந்து ஒரு பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

அகலா தவம்பெருகு பருமணிச் சுடிகைகொளும்
ஆயிரந் துத்திப் பணத்
தரவின் சிரங்கள் கிடுகிடெனக் கலங்கியுளம்
ஆடத் தரங்க மோது
மகரால யங்களோர் ஏழையும் இடைக்கிசைய
வனைதனை யாக்கொண்டபேர்
வையந் தனைக் கருது மனவேக மாகவொரு
மாத்திரையில் வலம் வந்தவிண்
புகரா முடுக்களின் கணமுதிர்த் திருளினைப்
பொருபகல வன்திங்களைப்
புயல் மறைத் தாலென மறைக்கும் கலாபம் விரி
பொற்பரி நடத்தித் தினம்
திகழ்பாக தேவைநகர் உறைகந்த குமரகுக
சிறுதேர் உருட்டியருளே!
தினகரர்கள் ஒருகோடி உதயமென வொளிர் வேல
சிறுதேர் உருட்டியருளே!

## இராமசாமிக் கவிராயர்

சோழ நாட்டில் தஞ்சையில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் இவர். இவரது பெற்றோர்களைப் பற்றிய செய்திகள் தெரியவில்லை. தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மிகுந்த புலமையும் கவிபாடும் திறமையும் வாய்க்கப் பெற்றவர் இவர்.

சிறந்த அட்டாவதானியாகவும் விளங்கிய இக்கவிராயர் நாட்டின் பல பகுதிகட்கும் சென்று தம் ஆற்றலை வெளிப்படுத்திப் பரிசுகளையும் பாராட்டுதல்களையும் பெற்று வந்துள்ளார். இவர் வாழ்ந்த காலத்தில் பாண்டிய நாட்டைச் சேர்ந்த தொண்டியில் முகமது இபுராகீம் சாகிபு என்ற செல்வர் ஒருவர் வாழ்ந்துள்ளார். அவர் செல்வர் மட்டுமன்றிச் சிறந்த தமிழறிஞரும் கூட. அவரது மேன்மையைக் கேட்டறிந்த அட்டாவதானியார் அவரைத் தேடிவந்து தமது அவதானத்தின் சிறப்பை அறியவைத்தார். இவரது ஆற்றலைக் கண்டு மகிழ்ந்த

அச்செல்வர் தேவையான பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். அந்நன்றி மறவாத கவிராயர் அவரது கொடைச்சிறப்பைப் புகழ்ந்து சில பாடல்களும் பாடிச் சென்றார்

"சுற்றன் முகமதிபு ராகீம் சுகநளினம்
உற்றதடங் கையே உயர்ந்தகை—மற்றையர்கை
பொக்கை கரிக்கை பழுது விழுந்தமரச்
சக்கை உலக்கையது தான்"

என்பது அப்பாடல்களில் ஒன்று. செல்வரின் கையைக் சிறப்பித்துப் பாடும் கவிஞர் மற்றவர்களைப் பற்றிக் குறிப்பிடுவது சொல் நயமும் கருத்து நலமும் செறிந்தனவாம். ஒரு வேளை மற்றவர்களிடம் அவருக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் தான் இப்படிப் பாடக் காரணமாயிற்றோ, என்னவோ!

## இன்பகவிராயர்

கி.பி. 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். மணப்பாடு என்னும் ஊரைச் சேர்ந்த இப்புலவரின் இயற்பெயரே இதுதானா? அல்லது இனிய கவிபாடும் ஆற்றல் இவருக்கிருந்ததைக் கண்டு பிறர் சூட்டிய பெயரே சொந்தப் பெயர் போல் நின்று நிலைத்து விட்டதா என்பது தெரியவில்லை.

தக்கார் பால் பாடம் கேட்டுப் பெற்ற தமிழறிவும் ஆசுகவி பாடும் ஆற்றலும் இவருக்கிருந்ததால் பலரும் போற்றிப் பாராட்டும் நிலை பெற்றார். அது போலவே அட்டாவதானங்கள் செய்வதிலும் சிறந்த நிலை பெற்றார். இவரது ஆற்றலைக் கண்டு மகிழ்ந்த வள்ளல்கள் வழங்கிய செல்வத்தைக் கொண்டு இனிய வாழ்வு நடத்தியுள்ளார் இக்கவிராயர்.

ஒருமுறை இவரிடம் ஒரு புலவர் கட்செவிக்குக்காது உண்டா என்று கேட்டார். அக் கேள்விக்குப் பதிலை ஒரு பாடலாக அமைத்து விட்டார் கவிராயர்.

"மாதருவைப் பழித்த மம்மதுகா சீம்புகழை
மன்னர் மன்னர்
ஏதமறு முனிவர் சித்தர் கின்னரர்கிம் புருடர்களும்
இசைந்து பாடும்
ஆதரையில் இப்படியோர் புருடனிலை எனுஞ்சிரசின்
அசைப்பை நோக்கக்

காதரவுக் கில்லாமல் படைத்தனனே கடிகமழுங்
கமலத் தோனே''

என்பதுவே அப் பாடல். மேற் கண்ட பாடலில் கற்பகத்தருவின் கொடையையும் பழிக்குமாறு வாரி வழங்கிய வள்ளல் மம்மது காசீம் என்று அவர் குறிப்பிட்டிருப்பதால் அவ்வள்ளல் இவரை ஆதரித்தவராக இருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்று கிறது.

## குமாரசாமிக் கவிராயர்

கி. பி. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். தென் பாண்டி நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில், சீவை குண்டம் பிரிவில் உள்ள சின்ன நட்டாத்தி என்னும் ஊரில் பிறந்த புலவர் இவர்.

இளமையிலேயே கவிபாடும் மேன்மையைப் பெற்றிருந்த இவர் இலக்கண இலக்கியங்களிலும் மிகுந்த புலமையுடையோராய் விளங்கினார். இவரது தமிழறிவைக் கண்ட பலரும் இவரைப் 'பெரும் புலவர்' என்றே சிறப்புப் பெயர் கொடுத்து அழைக்கலாயினர். ஆசுகவி பாடுவதிலும் வல்லவரான இக் கவிராயர் அட்டாவதானம் செய்வதிலும் வல்லவராகவே விளங்கினார். பல்வேறு வள்ளல்களையும் சிற்றரசர்களையும் நாடிச் சென்று தமது அவதானத் திறமையைக் காட்டியும் அவர்கள் பெருமையைக் கவிதையாகத் தீட்டியும் பெரும் பொருள் பரிசாகப் பெற்று வாழ்ந்துள்ளார்.

இவரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பாடம் கேட்ட பலர் சிறந்த கவிராயர்களாகவும், தமிழ்ப் புலவர்களாக வும் விளங்கியுள்ளார்கள். இவரது மகன் கு. சாந்தப்பக்கவிராயர் என்பவரும் ஓர் சிறந்த தமிழறிஞராக விளங்கியவர். இவரே தம் மகனுக்கு ஆசானாகவும் இருந்து அருந்தமிழைப் போதித் துள்ளார். தனிப்பாடல்கள் பலவற்றைச் செல்வர்கள் மீது பாடியுள்ள இவர் தெய்வங்களின் மீதும் சில தோத்திரப் பாடல் களைப் பாடியுள்ளார் நூல் ஏதும் இயற்றியுள்ளாரா என்பதை அறிய முடியவில்லை.

## சாமிநாதையர்

கி. பி. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அவதானிகளில் இவரும் ஒருவர். மழவையூர் என்னும் ஊரில் பிறந்த இவர் தமிழையும், வட மொழியையும் நன்கு பயின்று புலமை பெற்றுள்

ளார். தமிழ் இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடுடைய இவர் தமிழில் பல்வேறு வகையான பாடல்களைப் பாடுவதிலும் வல்லுநராகக் கவிவாணராகத் திகழ்ந்துள்ளார். 'சிலேடை'யாகப் பாடல்களைப் பாடுவதில் தனிச்சிறப்புப் பெற்றவர் என்று இவர் பாராட்டப் பெற்றுள்ளார். ஓர் ஆசிரியரைப் போலப் பலருக்கும் கல்வி புகட்டும் பணியைச் செய்த இவர் அப்பணியைக் காரைக்குடியில் தங்கியிருந்தே நெடு நாள் செய்துள்ளார். அப்போது இவரிடம் பாடம் கேட்ட பலர் பின்னாளில் சிறந்த தமிழ் வித்தகர்களாக விளங்கியுள்ளார்கள்.

தனிப்பாடல்கள் பலவற்றைப் பாடிய இவர் சிறந்த நூல்களையும் இயற்றியுள்ளார். 'சிறுவாச்சியூர் மதுராம்பிகை பதிகம். 'ஆறுமுகன் பதிகம்' என்பன இவர் இயற்றிய சிறந்த கவிதை நூல்களாகும். இந் நூல்கள் கி. பி. 1916 இல் வெளியிடப்பட்டன. இவர் இயற்றிய வேறு ஓர் நூலான 'சீலோச் சீவன சன்மார்க்கப் பிரகடனம்' என்ற நூல் சன்மார்க்க நெறியைப்போதிக்கும் சிறந்த நூலாகும்.

இவர் காரைக்குடியில் தங்கிப் பலருக்கும் கல்வி புகட்டிக் கொண்டிருந்த போதே அட்டாவதானத்தையும் செய்து சிறப்புப் பெற்றுள்ளார். நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் சென்று தம் அவதானக்கலைத்திறமையைக் காட்டிப் பரிசுகளையும் பாராட்டுதல்களையும் பெற்று வந்த இவர் ஓர் பல்துறை வித்தகர் என்ற நிலையிலும் பாராட்டுதலுக் குரியவராவார்.

## சிறிய சரவணக் கவிராயர்

கி பி. இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அட்டாவதானிகளில் இவரும் ஒருவர். பாண்டி மண்டலத்தைச் சேர்ந்த சேது நாட்டில் பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் அருணாசலக் கவிராயர். இவரைப் போலவே அவரும் நாடறிந்த நற்கவிஞராகத் திகழ்ந்துள்ளார். ஆனால் அட்டாவதானம் செய்யும் ஆற்றல் அவருக்கிருந்ததாகத் தெரியவில்லை.

சிறந்த கவிராயரான இவர் சிலேடையாகப் பாடுவதிலும் அந்தாதிப் பாடல்கள் பாடுவதிலும் வல்லவர் என்று பாராட்டப் பெற்றுள்ளார். இவர் இயற்றிய நூல்களான 'குன்றைச் சிலேடை வெண்பா' 'திருச்சுழியலந்தாதி', 'மதுரையமக வந்தாதி' ஆகிய நூல்கள் இவர் தம் ஆழ்ந்த புலமையை அறிந்து கொள்ளத் தக்கசான்றாகும்.

தமது பாட்டனாரான சரவணக் கவிராயர் சிறந்த அட்டாவ தானியாக விளங்கியுள்ளதால், அவரைப் போலத் தாமும் ஆக வேண்டும் என்ற இவரது துடிப்பே இவரையும் ஓர் அட்டாவ தானியாக்கியது. பாட்டனாரிடமே அவதானத்தைக் கற்றாரா அல்லது வேறு எவரிடமும் கற்றாரா என்பது தெரியவில்லை. இவரது அவதானக்கலை யாற்றலைக் காணும் வாய்ப்பைப் பெற்ற இராம நாதபுரம் சேதுபதியரசர் பொன்னும் பொருளும் வாரி வழங்கியதுடன் பல்லக்கு முதலிய சீர்வரிசைகளையும் செய்து சிறப்பித்துள்ளார். நாடெங்கிலும் சென்று வேறு பல செல்வர்களிடமும் தம் திறமையைக் காட்டிப் பரிசுகளைப் பெற்று வந்த இவர் தம் பாட்டனாரை விஞ்சி நின்றுள்ளார் என்றே கூற வேண்டும்.

## சி. சுந்தரம் ஐயர்

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அட்டாவதானிகளில் இவரும் ஒருவர். பாண்டி நாட்டிலுள்ள இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கையைச் சேர்ந்த மழவராயனேந்தல் என்னும் ஊரில் பிறந்தவர் இவர். அந்தணர்குலத்தைச் சேர்ந்த இவரது தந்தை யார் பெயர் சின்னசாமி என்றும் சிதம்பர பாரதிகள் என்றும் கூறப்படுகிறது. இவரது தந்தையாரும் சிறந்த கவிஞராகத் திகழ்ந்தவரே!

தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையோடு கற்றுப் புலமை நலம் அமையப் பெற்ற இவர் விரைந்து கவிபாடும் ஆற்றலும் வாய்க்கப் பெற்றுள்ளார். தம் தந்தையாரிடமே கல்வி கற்றுத் தேறிய இவர் அவதானக்கலையை யாரிடம் கற்றார் என்பது தெரியவில்லை. எட்டு வகையான அவதானங்களையும் சிறப்பாகச் செய்யும் ஆற்றல் வாய்க்கப்பெற்றிருந்த இவர் சிவ கங்கை அரசரிடமும் ஏனைய செல்வர்களிடமும் தம் அவதானக் கலையாற்றலைக் காட்டிப் பரிசுகள் பெற்றுள்ளார். தனிப்பாடல் கள் சில இவர் பாடியுள்ளாரேயன்றி நூலேதும் எழுதியதாகத் தெரியவில்லை.

## சோமசுந்தரகுரு

சேது நாட்டைச் சேர்ந்த இராமநாதபுரத்தில் தோன்றிய இவர் கி.பி.18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அட்டாவதானிகளுள் குறிப்பிடத்தக்கவராவார். இவரது தந்தையார் பெயர் நெல்லை யப்பபிள்ளை. வேதாந்த சூடாமணியுரைக்குப் பாயிரம் செய்த சாமி நாதப் பிள்ளை என்பவர் இவர் உடன் பிறந்த சகோதர ராவார்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களில் ஆழ்ந்த புலமையுடைய இவர் விரைந்து கவிபாடும் ஆற்றலும் அமையப் பெற்றிருந்தார். அட்டாவதானம் செய்வதில் தன்னிகரின்றி விளங்கிய இவர் இராமனாதபுரம் சேதுபதியரசரிடமும் பிற இடங்களில் வாழ்ந்த சில செல்வர்களிடமும் தம் திறமையைக்காட்டிப் பரிசுகள் பெற்று வந்தார். இவரிடம் அட்டாவதானம் செய்யக் கற்ற சிலர் இவரைப் போலவே புகழ் பெற்றுள்ளார்கள். முதுகுளத்தூர் அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயரும் இவரிடம் அட்டாவதானம் கற்றுச் சிறப்படைந்தவரே!

## கிருட்டிண ஐயங்கார்

19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த புலவர்களுள் இவரும் குறிப்பிடத்தக்கவர். தமிழ், வட மொழி ஆகிய இரு மொழிகளிலும் சிறந்த புலமைபெற்றிருந்த இவர்தமிழ் இலக்கண இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இவரது தமிழ்ப்புலமையை அறிந்த இராமநாதபுரம் அரசர் முத்து ராம லிங்க சேதுபதி தமது அவைக்களப் புலவர்களில் ஒருவராக இவரையும் நியமித்தார்.

ஆசுகவி பாடும் ஆற்றல் மிக்க இப்புலவர் அட்டாவதானம் செய்வதிலும் ஆற்றல் மிக்கவராகவே விளங்கினார். அதனால் அனைவரும் இவரை 'அட்டாவதானம் கிருட்டிண ஐயங்கார்' என்றே அழைக்கலாயினர். சேதுபதிமன்னர் அவையில்மட்டுமன்றி வேறுபிற இடங்களிலும் கூட அட்டாவதானம் செய்துபொருளை யும் புகழையும் இப்புலவர் ஈட்டினார்.

சிறந்த நூலாசிரியராகவும் இப்புலவர்விளங்கியுள்ளார். நாலு மந்திரிகதை', 'பஞ்சதந்திரம்', 'வீரகுமார நாடகம்', 'விடநிக்கிரகசிந்தாமணி' என்பன இவர் இயற்றிய நூல்களாகும். சிறந்த அட்டாவதானியாக மட்டுமன்றிக்கவிஞராகவும், நாடக ஆசிரியராகவும் கதாசிரியராகவும் விளங்கியவர் இவர்.

## சேடாசலக்கவிராயர்

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களில் இருவரும் ஒருவர். இவரது சொந்த ஊர் காங்கேயம். விரைந்து கவிபாடும் ஆற்றல்மிக்க இவர் முத்தமிழையும் முறையோடு நல்லாசிரியர் பால் கற்றுவித்தகராக விளங்கினார். சிறந்த இசைப் பயிற்சியும் உடைய இக்கவிராயர் தாம் பாடும் இன்னிசைப் பாக்களாலும்

பிறரை எளிதில் கவரும் திறமை பெற்றிருந்தார். இவர் பாடிய தனிப்பாடல்கள் சில கிடைத்துள்ளனவேயன்றி நூலேதும் கிடைக்கவில்லை.

சிறந்த அட்டாவதானியாகவும் விளங்கிய இப்புலவர் அறிஞர்கள் பலர் கூடியுள்ள அவைகளில் தம் அவதானத்திறனை வெளிப்படுத்திப் பரிசும் பாராட்டும் பெற்றுள்ளார். சேலம் மாவட்டத்தில் உள்ள பெருமாள் பாளையம் என்ற ஊரில் வாழ்ந்திருந்த அ. வரதநஞ்சைய பிள்ளை என்ற பெரும் புலவர் இவர் காலத்தவரேயாவார்! சேலம்மாணிக்க முதலியார்இயற்றிய சங்கீத சந்திரிகை' என்ற நூலுக்கு இவர் பாடிய சாற்றுக்கவியில் ஒருபாடல்

சங்கீத சந்திரிகை என்றபெயர் புனைந்தொரு நூல்
தந்திட்டானால்
இங்கீதன் பெருமைதனை எவர்வியவார்? யாழ் முனியும்
இனியதும்பு
ருங்கீத சாரமுணர் விஞ்சையரும் இதன்சாரம்
நுகர இந்நூல்
எங்கீத ரந்தெரிவாம் என நிதமும் வேண்டுவரேல்
இயம்பல் யாதே!

### ரா. அரங்கையர்

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருந்த புலவர்களில் இவரும் ஒருவர். பாண்டிய நாட்டைச் சேர்ந்த தேவகோட்டை என்னும் ஊரில் கி.பி 1880 ஆம் ஆண்டில் இவர் பிறந்தார். தந்தையார் பெயர் இராமையங்கார்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுத் தேறிய இவர் ஆசுகவிபாடும் ஆற்றலும் பெற்றிருந்தார். அட்டாவதானங்கள் செய்வதிலும் ஆற்றல் மிக்கவராக விளங்கிய இவர் தேவகோட்டை, காரைக்குடி போன்ற தனவணிகர்கள் வாழும் ஊர்களில் தம் திறமையைக் காட்டிப் பரிசுகளையும் பாராட்டுதல்களையும் பெற்று வந்தார்.

தேவகோட்டைக்கு அருகில் உள்ள கண்டதேவி என்னும் ஊரிலுள்ள முருகன் மீது இவர் பாடிய 'வண்ணச் சந்தமாலை' என்னும் நூல் இவர் புலமைக்குத்தக்க சான்றாகும். அந்நூலிலிருந்து ஒரு பாடல்:

சேலென மிளிர்ந்துகட லாலமதை வென்று மிகு
தீவிரம் விளங்குநெடு விழியாலே
சேணுற நிவந்துவளர் மேருவரை என்றுரைசெய்
சீர்மணி வடங்குலவு முலையாலே
மாலதரி னின்றவர்கள் தோள்புணர நைந்துலக
மாலையில் அலைந்துநனி திரியாதே
மாணிலகு முன்றனருள் மேவியுயர் கின்றகவி
மாலைபுனை யுந்திறமை அருள்வாயே!
காலனை யுதைந்துகடை ஊரதனில் அன்பனெதிர்
காணவிடை வந்தசிவன் அருள்சேயே,
காவிரி அரங்கநகர் மேவியர வின்கண்வளர்
கார்முகில் உகந்த எழில் முருகோனே!
வாலன நடங்குலவு சீர்மையொடு செம்பொனொளி
மாரி பொழி கின்றநகர் உறைவோனே,
வாகைமயில் நின்றடியர் பாடுதுதி கொண்டுமத
வாரணமு கன்பின்வரு பெருமாளே!

## நயினார் பிள்ளை

19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த புலவர் இவர், பாண்டிய நாட்டைச் சேர்ந்த திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குறிச்சி என்னும் ஊரில் பிறந்தவர். தமிழ்இலக்கியங்களையும் இலக்கணங்களையும் முறையாகக் கற்ற இவர் சிறந்த கவிஞராகவும் விளங்கியுள்ளார்.

அட்டாவதானம் செய்வதிலும் சிறந்து விளங்கிய இவர் பல செல்வர்களையும் தேடிச் சென்று தம் திறமையைக்காட்டிப் பரிசுகள் பெற்று வந்துள்ளார்.இவர் பாடியதாகச்சில தனிப்பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. அப்பாடல்களும் சொற்சுவை பொருட்சுவை நிரம்பியதாகவே உள்ளன.

இவரதுமகன் கந்தசாமி உபாத்தியாயர் என்பவரும் இவரைப்போலவே சிறந்த கவிஞராகத் திகழ்ந்துள்ளார்.ஆசிரியப் பணியாற்றிய அவர் சிலதனிப்பாடல்களையும் பாடியிருப்பதோடு 'விட்டிலா புரத்தலபுராணம்' என்ற சிறந்த நூலையும் பாடி அவ்வூர் மக்களது பாரட்டுதல்களையும் பரிசுகளையும் பெற்றுள்ளார்.

## சுப்பையர்

19 ஆம் நூற்றாண்டைச்சேர்ந்தபுலவர் இவர். தஞ்சை மாவட்டத்தைச்சேர்ந்ததரங்கம்பாடி என்னும் ஊரில் பிறந்தவர்

இளமையிலேயே தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளையும் கசடறக்கற்றுப் புலமை பெற்றுவிளங்கினார். வேத சாஸ்திரங்களையும் நன்கு அறிந்தவர்.

சிறந்த தமிழ்க்கவிஞராகவும் விளங்கிய இவர் தனிப்பாடல்கள் பல பாடியுள்ளார். பல்வேறு வகையான சந்தங்களை அமைத்துப்பாடுவதில் இவர் வல்லவர் என்றும் கூறப்படுகிறது. அட்டாவதானம் செய்வதிலும் சிறந்து விளங்கிய இவர் தஞ்சையிலும் இன்னும் பிற நகரங்களிலும் பலமுறை அட்டாவதான நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டிப் பெரும்புகழ் பெற்றுள்ளார். அட்டாவதானம் கதிரைவேற்கவிராச பண்டிதர் இவர் காலத்தவரேயாவார்.

## ச. செகராவ் முதலியார்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். தொண்டை நாட்டிலுள்ள இராயபுரம் என்னும் ஊரில் பிறந்தவர். இளம் வயதிலேயே கவிபாடும் திறம் பெற்றிருந்த இப்புலவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் ஆழ்ந்த புலமை யுடையவர். பக்தி இலக்கியங்களில் பெரிதும் ஈடுபாடுடைய இவர் சைவசமயச் சொற்பொழிவுகளும் நடத்தி இறைப்பணி புரிந்துள்ளார்.

அட்டாவதானம் புரியும் ஆற்றலும் பெற்றிருந்த இப்புலவர் சென்னையிலும் இன்னும் பிற இடங்களிலும் அட்டாவதான நிகழ்ச்சிகளை நடத்திப் புகழ்பெற்றுள்ளார். தனிப்பாடல்கள் சிலவற்றைப் பாடியிருப்பதுடன் பிற புலவர்கள் பாடிய நூல்களைப் பாராட்டிச் சிறப்புப்பாயிரமும் இவர் பாடியுள்ளார். சென்னை, இராயபுரத்தில் இவர் காலத்தில் வாழ்ந்திருந்த பெரும்புலவரான கேசவசுப்பராயச் செட்டியார் என்பவர் இராமாயண, சதகம்' என்ற ஓர் அரிய நூலை இயற்றி யுள்ளார். அந்நூலைப் பாராட்டி இவர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். தலபுராணங்கள் சிலவும் இவர் பாடியதாகக் கூறப்படுகிறது. பக்திப் பாடல்களும் இவர் பாடியுள்ளார். தண்டையார்பேட்டை பொன்னுசாமி கிராமணி என்பவர்மீது 'பொன்னுசாமி உலா' என்ற நூலையும் இவர் பாடியுள்ளார். அந்நூலில் ஒரு பாடல்.

'வான்வழங்க மண்விளங்க மாசிலாத தேசவன்
மாண்பின் வந்த சான்றவர்தம் மரபினுக்கு மங்களம்.
தேன் வழங்க மாலைவேய்ந்த செப்பருங்கந் தப்பவேள்
சேயனான பொன்னுச்சாமி செம்மலுக்கு மங்களம்.
கோன்வழங்க அரசர் கற்புக் கோதிலாத கோதைமார்
குறைவிலாத மறைவலோர்கள் குழுவினுக்கு மங்களம்
கான்வழங்கப் பயிர்செழிக்கக் கருதறங்கள் ஓங்கவே
காசினியோர்மேலும் நாளும் கதித்து வாழ மங்களம்'

என்பது அப்பாடல்

பல நூல்களை அச்சிற் பதிப்பித்தும் இவர் தமிழ்த்தொண்டு புரிந்துள்ளார்.

## நாகலிங்கம் பிள்ளை

கி. பி. 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களில் இவரும் ஒருவர். மதுரை மாநகரில் வாழ்ந்த இப்புலவர் விரைந்து கவிபாடும் ஆற்றல் மிக்கவராக விளங்கியுள்ளார். தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் முறையோடு கற்றுச் சிறந்த இப்புலவர் பக்திப் பாசுரங்கள் பல பாடியுள்ளார்.

அட்டாவதானம் செய்வதிலும் வல்லவரான இப்புலவர் மதுரை மாநகரிலும் மற்றும் வேறு பிற இடங்களிலும் பன்முறை அட்டாவதான நிகழ்ச்சிகளை நடத்திப் பெருமை பெற்றுள்ளார். பிறர் இயற்றிய நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் பாடுவதிலும் சிறந்து விளங்கிய இப்புலவர் சோழநாட்டிலுள்ள திரிசிரபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருநயம் என்னும் ஊரில் வாழ்ந்திருந்த கிருட்டிணபாரதி என்பவர் இயற்றிய 'திருவிளையாடல்' நாடக நூலுக்கும் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக்கடவுள் செய்த திருவிளையாடல்களை விளக்கும் நாடகம் அது.

## இராமானுசக் கவிராயர்

கி. பி. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். சென்னைக்கு அருகில் உள்ள ஆழ்வார்திருநகரி என்பது இவர் பிறந்த ஊர். தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையாகக் கற்றுத் தேர்ச்சிபெற்ற இவர் வடமொழியிலும் புலமை பெற்றிருந்தார். வைணவ இலக்கியங்களில் பெரிதும் ஈடுபாடுடைய இக்கவிராயர் அவ்விலக்கியங்களில் உள்ள அரிய கருத்துகளையும் நுட்பங்களையும் பிறருக்கு எடுத்துரைத்து மகிழ்விப்பதில் வல்லவர்.

இளமையிலிருந்தே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்த இவர் பின்பு பல்வேறு வகையான பாடல்களையும் விரைந்து பாட வல்லவராகவும் விளங்கியுள்ளார். இவர் நூல் ஏதும் பாடியதாகத் தெரியவில்லை. தனிப்பாடல்களே அதிகம் பாடியுள்ளார். அட்டாவதானம் செய்வதிலும் தேர்ச்சி பெற்றிருந்த இக்கவிராயர் வாழ்ந்த காலத்தில் அவதானிகள் தமிழ்நாட்டில் சிலரே இருந்திருக்கக் கூடும். அதனால் பல இடங்களிலும் இவரை வரவழைத்து அவதான நிகழ்ச்சிகளை நடத்தச் செய்து பரிசுகளை வழங்கியுள்ளார்கள்.

பிறருக்குக் கல்வி போதிப்பதையும் கடமையாகக் கொண்டிருந்த இக்கவிராயரிடத்தில் படித்துப் பயன்பெற்றவர் பலர். யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்த அரசகேசரி என்பவரும் இக்கவிராயரிடம் கல்வி கற்றுச் சிறந்தவரே யாவார்.

## இரங்க நாதக் கவிராயர்

கி. பி. 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அவதானிகளில் இவரும் ஒருவர். இவர் எவ்வூரைச் சேர்ந்தவர் என்பன போன்ற குறிப்புகள் காணப்படவில்லை. தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றுச் சிறந்த கவிராயர் இவர். வடமொழி இலக்கியங்களிலும் வேதங்களிலும் வித்தகராக விளங்கியுள்ளார்.

விரைந்து கவிபாடும் ஆற்றல் மிக்க இக்கவிராயர் தனிப்பாடல்கள் பல பாடியுள்ளார். அதில் இறைவனைப் பற்றிப் படாப் பட்டனவே அதிகம். அட்டாவதானிகளிலும் ஒருவரான இவர் நாட்டின் பல இடங்களுக்கும் சென்று அவதான நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். மதுரையிலும் கூட இவர் அவதான நிகழ்ச்சி நடந்துள்ளது. அதுகொண்டே மதுரையை இவர் சொந்த ஊராகச் சொல்பவர்களும் உண்டு.

வடமொழியில் வித்தகரான இவர் வடமொழிச் செய்யுட்களிலிருந்து தழுவி சுருக்கமான அளவில் மகாபாரதம் ஒன்று தமிழில் பாடியுள்ளார். அத்துணைச் சிறப்புடைய நூலாக அது திகழாமையினால் பெயரளவோடு பதுங்கிவிட்டது போலும்.

## கலியாண சுந்தரம் பிள்ளை

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அட்டாவதானிகளில் இவரும் ஒருவர். பாண்டி நாட்டைச் சேர்ந்த முதுகுளத்தூர் இவரது சொந்த ஊர். சரவணக் கவிராயரிடம் அட்டாவதானம்

செய்யக் கற்றுச் சிறப்படைந்தவர் இவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் தேர்ச்சியும் விரைந்து கவிபாடும் ஆற்றலும் வாய்க்கப் பெற்றவர்.

அட்டாவதானம் செய்வதில் மிகவும் வல்லவராக இவர் விளங்கியமையால் அட்டாவதானம் கலியாணசுந்தரம் பிள்ளை என்றே அனைவரும் இவரைச் சிறப்பித்துக் கூறலாயினர். சேதுபதி மன்னர் முன்பும் மற்றும் பிற டங்களிலும் அவதான நிகழ்ச்சிகளைச் செய்துகாட்டிப் பரிசுகள் பெற்றுள்ளார்.

தனிப்பாடல்கள் பல பாடியுள்ள இந்த அவதானியார், ‘மெய்யரிச்சந்திர நாடகம்’ என்ற ஓர் அரிய நாடகத்தையும் கி. பி. 1905 இல் எழுதியுள்ளார். உண்மை பேசிச் சிறப்படைந்த அரிச்சந்திரனின் உயர்வைக் கூறும் நாடகம் அது.

### அ. ம. சி. முகமது மீரா ராவுத்தர்

கி. பி. இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அட்டாவதானி களில் இவரும் ஒருவர். பாண்டி நாட்டைச் சேர்ந்த நத்தம் என்னும் இறைசுமாநகர் இவர் பிறந்த ஊராகும். வணிகம் புரிவதையே தொழிலாகக் கொண்டிருந்த குடும்பத்தில் பிறந்த இவர் கவிபாடுவதையும் அட்டாவதானங்கள் செய்வதையும் தமது தொழில்களாகக் கொண்டு சிறப்படைந்துள்ளார். தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுத் தேர்ச்சியடைந்த இவர் முகமதிய மத போதனைகளையும் கற்று வல்லவராக விளங்கினார்.

நாட்டின் பல இடங்களுக்கும் சென்று அட்டாவதான நிகழ்ச்சிகளை நடத்திப் பரிசுகளைப் பெற்று வந்த இவர் பிற புலவர்கள் பாடிய நூல்கட்குச் சிறப்புப்பாயிரமும் பாடி யுள்ளார். பாண்டி நாட்டைச் சேர்ந்த மேலூர் தாலுகா சென்னகரம்பதி என்னும் ஊரில் வாழ்ந்த சொக்கனாண்டி தாஸ் என்ற புலவர் பாடிய ‘பழநியாண்டவர் மாலை’ என்ற நூலைப் பாராட்டியும் இவர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். முகமதியரான இவர்இந்துமதக்கடவுள் பற்றிய நூலுக்கு வேறுபாடு கருதாது பாயிரம் பாடியிருப்பது பாராட்டற்குரிய பண்பாகும்.

### வடபத்திர ஐயங்கார்

கி. பி. இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அட்டாவதானி களில் இவரும் ஒருவர். பாண்டி நாட்டைச் சேர்ந்த புலவர்களில்

ஒருவரான இவரது சொந்த ஊர் எதுவென்று தெரியவில்லை. தமிழிலும் வடமொழியிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர் வேதங்களையுணர்ந்த வித்தக ராகவும் விளங்கி யுள்ளார்.

பக்திப் பாடல்கள் பல பாடியுள்ள இவர், விரைந்து கவி பாடும் ஆற்றலும் பெற்றிருந்தார். மதுரை, இராமனாதபுரம், திருவில்லிப்புத்தூர் போன்ற ஊர்களில் அறிஞர்கள் கூடியுள்ள அவைகளிலும் ஆலயங்களிலும், அட்டாவதான நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். இவர் திருவில்லிப்புத்தூரைச் சேர்ந்தவராக இருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

பிற புலவர்கள் பாடிய நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் பாடுவதிலும் சிறந்திருந்த இவர், பாண்டி நாட்டைச் சேர்ந்த திருவில்லிப்புத்தூரில் வாழ்ந்திருந்த பொன்னம்பெருமாள் செட்டியார் என்பவர் இயற்றிய 'பொன்னுயிர் குருசாமிகள் திருப்பதிகம்' என்ற நூலுக்கும் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார்.

## சரவணப்பெருமாள் பிள்ளை

கி. பி. 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். இராமனாதபுரத்தில் 1882 ஆம் ஆண்டு பிறந்தவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையோடு கற்றுப் புலமை பெற்ற இவர் ஆராய்ச்சி நுட்பமும் வாய்ந்த அறிஞர். சிறந்த நாவன்மையும், விரைந்து கவிபாடும் ஆற்றலும் இளமை முதலே அமையப் பெற்றவர்.

அட்டாவதானம் செய்வதில் சிறப்புமிக்க இவர் இராமனாத புரம் சேதுபதி அரசர் முன்பும் வேறு பிற இடங்களிலும் அவதானம் செய்து புகழ்பெற்றவர். தனிப்பாடல்கள் பல அரசர்கள், செல்வர்கள் மீதும் பாடியுள்ள இவர் இறையுணர்வை யூட்டும் பக்திப் பாசுரங்களும் பாடியுள்ளார். திருச்செங்கோட்டில் எழுந்தருளியுள்ள பாதிமாதுடனாய பரமன்மீது இவர் பாடியுள்ள பதிகம் புலவர்கள் போற்றும் சிறப்பைப் பெற்றது. அப் பதிகத்தில் ஒருபாடல்.

உன்னையே கதியென்று நம்புமெளி யேன்கலிக்
குள்ளாய் வருந்த லாமோ!
உலகமுனை ஏசிடாதோ! உயிர்க் குயிராய்
உறைந்த நீ யன்றி யுலகில்
பின்னையே தொருதெய்வம்? இல்லை யென்றால் யான்
பெறுந்துய ரகற்றி டாயோ!

பெருமோடி யாயிருந் தனையேனும் உன்னிடம்
பிரியா திருக்கு மெங்கள்
அன்னையே யாயினும் சொன்னாலும் வாய்முத்தம்
அந்தோ உதிர்ந்து விடுமோ!
ஆதரவு வேருள்ள தோவாகை யாலென்னை
ஆளவிது சமயம் ஐயா!
மன்னையே றக்காலம் வைத்தமரர் முதலோரை
வாழ்வித்த தேவ தேவே,
மங்குலே மெய்க்கனைய சங்கபா ணிக்கிளைய
மங்கைபா திக்கடவுளே!

**வேலாயுதக் கவிராயர்.**

கி.பி.19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். இராமனாதபுரத்தில் பிறந்த இவர் தொடக்கத்தில் குடும்பத் தொழிலான உழவினையே செய்துவந்துள்ளார். கழனியில் அவர் உழுதுவந்தாலும் அவர் மனம் கன்னித் தமிழையே பெரிதும் விரும்பியது. எனவே அந்நிலையிலும் கூட சில தமிழாசிரியர்களை நாடி இலக்கண இலக்கியங்களைக் கேட்டறிவதும், ஐயங்களை அகற்றிக் கொள்ளுவதுமாக இருந்தார்

இளமையிலேயே கவிதைபாடும் பாங்கும் இவரிடம் காணப்பட்டது. தமிழ் இலக்கணத்தை முறையோடு கற்கும் வாய்ப்பு ஏற்பட்டபின் முறைப்படி கவிதைகளை எழுதத் தொடங்கினார். தமிழறிவை முயன்றுபெற்ற இவர் அவதானங்கள் செய்வதற்கும் அறியவிரும்பி அத்துறையிலும் வெற்றி பெற்றார். அட்டாவதானங்கள் செய்யும் ஆற்றல் பெற்ற இவர் இராமனாதபுரம் சேதுபதி அரசர் முன்பு தம் திறமையை வெளிப்படுத்திப் பரிசுகளைப் பெற்றார்.

பிறரது நூல்களுக்கு இவர்பாடியுள்ள சிறப்புப்பாயிரப் பாடல்கள் இவர் புலமைக்குத் தக்க சான்றுகள். திரிசிரபுரத்தைச் சேர்ந்த மு. சாமிநாதப்பிள்ளை என்பவர் பாடிய 'வேலாயுதக்கண்ணி' என்ற நூலைப் பாராட்டியும் இவர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார்.

**எம் எம். முகமது அப்துல் காதிறு சாகிபு**

கி.பி. 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அட்டாவதானிகளில் இவரும் ஒருவர். நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த கோட்டாறு இவரது சொந்த ஊர். இளமையில் முறையாகக் கல்விகற்க

வாய்ப்பில்லாது வேறு பிற தொழில்களில் ஈடுபட்டுக் குடும்பத்திற்குத் துணைசெய்து வந்த இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஈடுபாடுடையவராகக் காணப்பட்டார். அந்த ஆர்வமே பின்னாளில் இவரை ஓர் கவிஞராகவும் அட்டாவதானியாகவும் ஆக்கியது. இவர் வாழ்ந்த காலத்திலேயே இவரது ஊருக்கு அண்மையில் வாழ்ந்தவர்தான் சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர். அவரது நட்பும் கூட இவருக்குத் துணை செய்திருக்கக்கூடும்.

சிறந்த கவிஞராக விளங்கிய இவர் தனிப்பாடல்கள் பல பாடியுள்ளார். இவரது சொந்தஊரில் வாழ்ந்த செய்கு முகமது அப்துல்கலாம் சாகிபு என்பவர் 'மெய்ஞ்ஞான வினா விடை' என்ற நூலை எழுதியுள்ளார். முகமதிய மதம் தொடர்பான சிறந்த பல உண்மைகளைக் கேள்வி பதில் அமைப்பில் எழுதப்பட்ட அந்நூலைப் பாராட்டி, இவர் எழுதியுள்ள சிறப்புப்பாயிரம் இவர் சிறப்பைக்காட்டும் தன்மையது.

## இராமலிங்கக் கவிராயர்

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த கவிஞர்களில் இவரும் ஒருவர். பாண்டிநாட்டைச் சேர்ந்த சாலிச்சந்தை என்னும் ஊர் இவர் பிறந்த ஊராகும். ஆரம்பக் கல்வியைத் தம் சொந்த ஊரிலேயே முடித்திருந்த இவர் அதற்குமேல் கற்க வாய்ப்பின்றிப் பிற தொழில்களில் ஈடுபட்டு வந்தார்.

கவிஞராவதற்குரிய துடிப்புணர்ச்சியும் எழுச்சியும் இவரிடம் இளமையிலேயே காணப்பட்டது. அவ்வுணர்வு மென்மேலும் வளர்ந்து வந்ததால் பின்பு முறையோடு தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுக் கவிபாடத் தொடங்கினார். விரைவிலேயே பலர் வியந்து போற்றுமாறு பாடல்களைப் பாடிக் கவிராயர்' என்ற தகுதியையும் பெற்றார். இவரைப் புகழ்ந்து பாடியவர்களில் வே.க. பேரம்பல நாடார் என்ற புலவரும் ஒருவராவார்.

அட்டாவதானங்கள் செய்வதிலும் வல்லவராகத் திகழ்ந்த இக் கவிராயர் முதன்முதல் 1939 ஆம் ஆண்டில் மதுரை மாநகரில் அறிஞர்கள் பலர் கூடியுள்ள அவையில் தம் அவதானக் கலைத்தேர்ச்சியை வெளிப்படுத்தினார். பார்த்தோர் அனைவரும் பாராட்டிப் போற்றினர். பின்னர் நாட்டின் பல இடங்களுக்கும் சென்று தம் அவதானத் திறனைக் காட்டிப் பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்று வந்தார்.

## கதிர்வேல் கவிராச பண்டிதர்

கி.பி. 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். சோழ நாட்டைச் சேர்ந்த தரங்கம்பாடி இவர் பிறந்த ஊராகும். பல்வேறு வகையான சந்தப் பாடல்களையும் எழுதும் ஆற்றல்மிக்க இக்கவியரசர் இசையோடு பாடுவதிலும் வல்லவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மிகுந்த ஈடுபாடுடைய இவர் புராணங்களின் பெருமைகளை விளக்கிப் பேசும் நாவன்மையும் பெற்றிருந்தார்.

அட்டாவதானங்கள் செய்யும் ஆற்றலையும் பெற்றிருந்த இவர் தரங்கம்பாடி, திருவிடைமருதூர், தஞ்சை போன்ற இடங்களில் சான்றோர் கூடியுள்ள அவைகளில் தம் அவதானத் திறனை வெளிப்படுத்திப் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார். சைவ மடங்கள் சிலவும் கூட இவரைப் பாராட்டிப் பரிசுகளை நல்கியுள்ளது.

தனிப்பாடல்களாகப் பல பாடல்களைப் பாடியுள்ள இக் கவியரசர் சோழ நாட்டைச் சேர்ந்த திருவிடைமருதூரில் வாழ்ந்த மருதப்ப தேசிகர் என்பவர் மகன் சொக்கலிங்க தேசிகர் என்பவர் திருத்தணி முருகன் மீது பாடிய 'திருத்தணி காசல யமக வந்தாதி' நூலுக்குச் சிறப்புப்பாயிரமும் பாடியுள்ளார்.

## பெரிய திருவடிக் கவிராயர்

கி.பி. 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். இவர் சென்னையில் வாழ்ந்தவர் என்று கருதப்படுகிறது. தமிழ், வடமொழி ஆகிய இருமொழிப் புலமையும் அமையப்பெற்ற இவர் வைணவ இலக்கியங்களில் பெரிதும் ஈடுபாடுடையவர். கவிபாடும் ஆற்றலில் சிறந்துநின்ற இக் கவிராயர் வைணவ சமயச் சொற்பொழிவாற்றுவதில் வல்லவராக விளங்கியுள்ளார்.

எண் வகை அவதானங்களையும் செய்வதில் வல்லவரான இவர் சென்னையில் பல இடங்களில் அட்டாவதான நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டி அறிஞர் பலரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார். பிற புலவர்களது நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் பாடித்தந்த பெருமைக்குரிய இக் கவிராயர் ஆழ்வார் திருநகரியில் வாழ்ந்த முத்தம்மாள் என்னும் பெண்மணி இயற்றிய 'திருச்

செந்தில் மாலை' என்னும் நூலுக்கும் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். அப் பாயிரத்தில் இரு பாடல்கள் இங்கு தரப் பட்டுள்ளன.

"கோனாட்டு மன்னவரும் புகழ்ந்தேத்தும்
மதிப்புடைய கொள்கையோனா
மானாட்டு வீரவா ேகந்திரன் மன்
மனைவிமுத்தம் மாளென்றாதும
வானாட்டுச் சசிபுகழக் கலையுணர்ந்த
ஞானமுறு மகிமையுள்ளாள்
தேனாட்டுக் கதலிநிறை திருச்செந்திற்
றேவர்பிரான் சேவடிக்கே!"

கலைமகளும் மனமிளகக் கவிமாலை
புனைவித்தாள்; காதிற் கேட்டு
மலைகளினும் வலிவான பணியரசன்
உளமடங்கா மகிழ்ச்சியாலே
தலையையசைத் திடவுடனம் புவியாடத்
தடங்கயிலை தானும் ஆடி
நிலையுறா தசைந்திடவே திடுக்கிட்டே
உமைசிவனை நேர்ந்திட்டாளே!"

## மகாதேவ ஐயர்

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். பாண்டி நாட்டைச் சேர்ந்த திருச்செந்தூர் என்னும் திருத்தலத்தில் 1914 ஆம் ஆண்டு இவர் பிறந்தார். தமிழ், வடமொழிப் புலமையுடன் ஆங்கிலமும் கற்றவர். சிறந்த கல்வியறிவும் கவிபாடும் ஆற்றலும் இவருக்கு இளமையிலேயே அமைந்திருந்தது.

கல்வியிற் சிறந்து விளங்கியது போலவே அட்டாவதானங்கள் செய்வதிலும் இவர் சிறந்து விளங்கியுள்ளார். திருச்செந்தூர் முருகன் சந்நிதியில் முதன்முதல் இவர் தமது அவதானக்கலையை அரங்கேற்றினார். பின்னர் வேறு பிற இடங்களுக்கும் சென்று அட்டாவதானங்களைச் செய்து காட்டிப் புகழ் பெற்றுள்ளார்.

தனிப்பாடல்கள் சிலவும் இவர் பாடியுள்ளார். திருச்செந்தூர் முருகன் மீதும் பாடியுள்ளார். பா. நாராயணசாமி நாயுடு என்பவர் இயற்றிய 'நெட்டூர்ப்புராணம்' என்ற நூலுக்கும் இவர் சாற்றுக்கவி பாடியுள்ளார். அதில் ஒரு பாடல்;

"மிக்கபுகழ் மயனகரப் பாலுநா
யுடுதவத்தால் விளங்க வந்தோன்
தக்கவர்கள் உரைநாரா யணசாமி
சிந்துபூந் துறையான் சந்த
அக்கவிஞர் பேரன்பன் பிறர்க்குறுதி
உதவிபுரி அகத்தன் செந்தூர்
புக்கருமை அறுமுகவன் கோபுரத்தின்
துதிபுகன்றோன் புலமையாளன்!"

## இராமலிங்கக் கவிராயர்

இருபதாம் நூற்றாண்டில், சிறந்த புலவர்களில் ஒருவராகவும், அட்டாவதானிகளில் குறிப்பிடத்தக்கவருமான இவர், மதுரை மாவட்டம் திருமங்கலம் பிரிவைச் சேர்ந்த பேரையூர் என்னும் ஊரில் பிறந்தவர். தந்தையார் பெயர் மீனாட்சி சுந்தரக் கவிராயர். இவரைப்போலவே சிறந்த கவிஞராகவும் அட்டாவதானியாகவும் விளங்கியவர் இவரது தந்தை யார். தம் தந்தையிடமே முத்தமிழையும் முறையாகக் கற்றதோடன்றி அட்டாவதானங்களையும் அவரிடத்திலேயே கற்றுப் பெருமை பெற்றவர் இக் கவிராயர்.

எண்வகை அவதானங்களையே பொதுவாக இவர் நிகழ்ச்சிகளில் நடத்திக் காட்டிய போதும் பன்னிரண்டு வகையான அவதானங்களையும் கூடச் செய்யும் ஆற்றல் இவருக்கிருந்துள்ளது என்பது இவர் வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது. அப் பன்னிரண்டு அவதானங்களின் பெயர்களையும் கூட நாம் அறிய முடிகிறது. இந் நூலின் முற்பகுதியில் (அவதானங்கள் எவை?) அவைகள் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கிய இலக்கணங்களில் ஆழமான புலமை பெற்று விளங்கிய இக்கவிராயர் ஆசுகவி பாடுவதிலும் வல்லவர். வெண்பா, கலித்துறை, கலிவிருத்தம் போன்ற பாக்கள் மட்டுமன்றிக் கொம்பில்லா வெண்பா, குதிரையடி வெண்பா போன்ற பாடல்களைப் பாடுவதிலும் கூட இவர் வல்லவர். இலக்கியங்களில் மிகுந்த புலமை பெற்றிருந்ததால் எத்தகைய பாடல்களைப் பிறர் எடுத்துக்காட்டினாலும் பொருள்கூறி விளங்க வைக்கும் ஆற்றலும் இவருக்கிருந்தது. இவர் பாடியனவாகச் சில தனிப்பாடல்கள் உள்ளவேயன்றி அரிய ஆற்றலைப் பெற்ற இக்கவிராயர் தம் பெயர் கூறுமாறு நூலேதும் இயற்றவில்லை போலும்! இவர் பாடிய சில பாடல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மதுரை லட்சுமியம்மன் மீது இவர் பாடிய குதிரையடி வெண்பா:

"திங்களணி மேடை திகழ்மதுரை லட்சுமியின்
செங்கமலத் தாளைத் தினம்பணிந்தால் - நங்கையே
பூமாது வாழ்வு பொருந்து மிசைசேரு
மாமா தருள் பெருகு மால்."

மதுரை மீனாட்சியம்மன் மீது பாடிய கொம்பில்லா வெண்பா:

"உள்ளக் களியுற் றுயர்மதுரை மீனாட்சி
வள்ளக் கமல மலர்ப்பதத்தி - அள்ளுதமிழ்
உத்தமியுன் கீர்த்தி உவந்தகத்தில் நன்றாக
வைத்தனன்ம கிழ்ந்தருள வா."

### மீனாட்சிசுந்தரக் கவிராயர்

கி.பி. 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். மதுரை மாவட்டம் திருமங்கலம் பிரிவைச் சேர்ந்த பேரையூர் என்னும் ஊரில் பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் பொன்னுங்கூட அவதானியாகும். அவரும் ஓர் அட்டாவதானியாக விளங்கியவரே. தம் தந்தையாரையே ஆசிரியராகக் கொண்டு அட்டாவதானங்களையும் இவர் அறிந்துள்ளார்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மிகுந்த புலமை பெற்று விளங்கிய இக்கவிராயர் பல தனிப்பாடல்களைப் பாடியுள்ளார். பிற புலவர்களது நூல்களுக்குச் சிறப்புப்பாயிரமும் பாடியுள்ளார். ஆசுகவி பாடும் ஆற்றலுடன் தமது மைந்தனைப் போலவே பல்வேறு வகையான பாடல்களைப் பாடுவதிலும் இவர் வல்லவராக விளங்கியுள்ளார்.

இவரும் ஓர் அட்டாவதானியென்று அறிய முடிகிறதேயன்றி இவர் செய்த அவதானங்கள் எவையென்று குறிக்கப்படவில்லை. இவரே தம் மைந்தனுக்கு அவதானங்களைப் பயிற்றுவித்ததால் மைந்தன் அறிந்த அனைத்தும் இவர் அறிந்ததே என்று கருத இடமுண்டு.

### ச. முத்துக்குமாரு

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். பாண்டி நாட்டைச் சேர்ந்த இவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் போன்ற அவர் பற்றிய குறிப்புகள் கிட்டவில்லை.

தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையோடு கற்றுத் தேர்ந்த இவர் சிறந்த கவிராயராகவும் விளங்கி யுள்ளார்.

அட்டாவதானங்கள் செய்யும் ஆற்றலையும் பெற்றிருந்த இக்கவிராயர் பாடியனவாகச் சில தனிப்பாடல்கள் உள்ளன. அதிவீரராமன் பட்டிணம் என்ற ஊரில் வாழ்ந்த குருசாமிப் பிள்ளை என்பவர் இயற்றிய ஓர் நூலுக்கு இவர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார்.

## இராமசாமிக் கவிராயர்

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். பாண்டி நாட்டிலுள்ள புளியங்குளம் என்னும் ஊரில் பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் அருணாசலக் கவிராயர். அவரும் ஒரு சிறந்த கவிஞராகத் திகழ்ந்தவர். தமது தந்தை யாரிடமே தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பாடம்கேட்ட இவர் இளமையிலேயே விரைந்து கவிபாடும் ஆற்றலையும் பெற்றிருந்தார்.

எண்வகை அவதானங்களையும் சிறப்பாகச் செய்யும் ஆற்றல் பெற்றிருந்த இவர் மதுரையிலும் வேறு பிற இடங் களிலும் அவதான நிகழ்ச்சிகளை நடத்திக்காட்டிப் புகழ் பெற்றார். சில தனிப்பாடல்களைப் பாடியுள்ள இவர் பிற புலவர்களது நூல்களுக்குச் சிறப்புப்பாயிரமும் பாடியுள்ளார்.

## வாலசுப்ரமணிய ஐயர்

இருபதாம் நூற்றாண்டுப் புலவர்களில் ஒருவரான இவர் பாண்டிய நாட்டைச் சேர்ந்த காரைக்குடியில் வாழ்ந்தவர். தமிழ் வட மொழி ஆகிய மொழிகளில் புலமைபெற்றுச் சிறந்த இவர் ஆங்கிலக் கல்வியறிவிலும் சிறந்து விளங்கியுள்ளார்

கவிபாடும் ஆற்றலையும் பெற்றிருந்த இவர் அட்டாவ தானங்கள் செய்வதிலும் வல்லவராக விளங்கியுள்ளார். காரைக்குடி, தேவகோட்டை போன்ற தன வணிகர்கள் வாழும் நகரங்களில் அவதான நிகழ்ச்சிகளை நடத்திக்காட்டிப் பரிசு களைப் பெற்றுள்ளார்.

பக்திப் பாடல்களையும் பாடியுள்ள இவர் பாண்டி நாட்டைச் சேர்ந்த இராயபுரத்தில் வாழ்ந்த சுப்பிரமணிய ஐயர் மகன் இராமசாமி ஐயர் எழுதி நூலுக்குச் சிறப்புப்பாயிரமும் பாடியுள்ளார்.

## அச்சுத உபாத்தியாயர்

கி. பி. 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். புதுச்சேரியைச் சேர்ந்த இவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மிகுந்த புலமை பெற்றுச் சிறந்தவர். விரைந்து கவிபாடும் ஆற்றலையும் பெற்றவர்.

அட்டாவதானங்கள் செய்வதில் வல்லவரான இவர் திண்ணைப்பள்ளி யொன்றை வைத்து ஆசிரியராகவும் பணியாற்றி யுள்ளார். தம்மிடம் பயிலும் மாணவர்கட்குத் தமிழறிவைப் போதிப்பதுடன் அட்டாவதானத்தையும் போதித்துள்ளார். இவரிடம் தமிழறிவையும் அட்டாவதானம் செய்யும் ஆற்றலையும் பெற்றுச் சிறந்தவர்தான். புரசை சபாபதி முதலியார். குருவையும் விஞ்சிய சீடனாகப் பிற்காலத்தில் அவர் விளங்கினார்.

சென்னை புரசைவாக்கத்தில் எழுந்தருளிய கங்காதரேசுவரர் மீது 'வருக்கப் பாமாலை' என்னும் நூலை இவர் எழுதியுள்ளார். அந்நூலில் ஒருபாடல்:

''ஊனமாம் உடலை மனைவியைச் சுதரை
உலக வாழ்வினை நிலையாக
மானம் வைத் துழலும் மதியிலி என்றுன்
மலரடிக் கன்பனாய் வாழ்வேன்?
தானவர் புரமூன் றெரியெழ நகைத்த
தழற்கண னேயெனைத் தடுத்தாள்
தீனரட் சகனே புரசையம் பதியில்
திகழுகங் காதரே சுரனே''

## இராமலிங்கம் பிள்ளை

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அட்டாவதானிகளில் இவரும் ஒருவர். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கருந் திட்டக்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையோடு கற்றுப் புலமைபெற்ற இவர் கவி பாடும் ஆற்றலையும் பெற்று விளங்கினார்.

தஞ்சையிலும் இன்னும் பிற இடங்களிலும் அவதான நிகழ்ச்சிகளை நடத்திப் புகழ்பெற்றுள்ள இவர் சில தனிப் பாடல்களைப் பாடியிருப்பதுடன் பிற புலவர்களது நூலுக்குச் சிறப்புப்பாயிரமும் பாடியுள்ளார்.

## சொக்க நாதப் புலவர்

'பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய' சேக்கிழார் பிறந்த மரபில் தொண்டை மண்டலத்தில் வேளாளர் குடும்பத்தில் பிறந்தவர் இவர். கல்வியறிவில் மேம்பட்டிருந்த இப்புலவர் முத்தமிழிலும் வித்தகராக விளங்கினார். தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுயர்ந்த இவர்தாமே ஆசிரியராக இருந்து பல மாணவர்கட்கும் போதித்துள்ளார்.

தமிழ்க்கல்வியைப் போதித்ததுபோலவே அட்டாவ தானங்களையும் இவர் பிறருக்குப்போதித்துள்ளார். அந்த அளவு அவதானக்கலையில் வல்லவராகவும் விளங்கியுள்ளார். இவரிடம் கல்வியறிவையும் அட்டாவதானம் செய்யும் ஆற்றலையும் பெற்றுச் சிறந்தவர் பலர். இவரது பேரர் அட்டாவதானம் அரங்கநாதக் கவிராயரும் இவரிடம் கற்றுச் சிறப்படைந்தவரே யாவர். தனிப்பாடல்கள் பல இவரால் பாடப்பெற்றுள்ளன

## பொன்னுங்கூட அவதானி

மதுரை மாவட்டம் திருமங்கலம்பிரிவைச் சேர்ந்த பேரையூர் என்னும் ஊரில் கி. பி. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த அவதானி இவர். சிறந்த தமிழ்ப்புலவராகவும் அட்டாவ தானங்கள் செய்வதில் தேர்ச்சி பெற்றவராகவும் விளங்கிய இவரிடம் அவதானங்களைத் கற்றுப் புகழ்பெற்றவர் கள் பலர்.

இவரது மகன் மீனாட்சி சுந்தரக் கவிராயருக்கு இவரே அட்டாவதானங்களைப் பயிற்றுவித்தார். இவரது பேரன் இராமலிங்கக் கவிராயரும் சிறந்த அட்டாவதானியாக விளங்கியவர். இவ்வாறு தமமுடைய மரபே அட்டாவதானஙகள செய்யும நிலையை உருவாக்கிய இவரைப் பறறிய வேறு செய்தி கள் கிட்டவில்லை.

## பாப்பையர்

கி. பி. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில். சென்னையில் உளள சூளைபபகுதியில் வாழ்ந்திருந்த அவதானி யாவார் இவர். தமிழ் இலக்கிய இலக்கணப் புலமையும் கவிபாடும ஆறறலும் பெற்றவர் இவர்.

அட்டாவதானங்கள் செய்யும் ஆற்றல் பெற்றிருந்த இவர் சென்னை சூ. பெ. பாவராசம் பிள்ளை என்ற அறிஞர் காலத்தவர். இவரைப் பற்றிய வேறு செய்திகள் ஏதும் கிட்ட வில்லை.

## சுப்பராயச் செட்டியார்

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அட்டாவதானிகளில் ஒருவரான இவர், திருச்சியில் வாழ்ந்த நாகமுத்துப் புலவர் தாயுமானவர் மீது பாடிய 'பதிற்றுப்பத்தந்தாதி' என்னும் நூலுக்குச் சிறப்புப் பாயிரம்பாடியுள்ளார். இவரைப் பற்றிய பிற செய்தி ஏதும் கிட்டவில்லை.

# தசாவதானம்

ஒரே சமயத்தில் பத்துப்பேர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூறும் வகையில் அமைந்த இந்த அவதானத்தைப் பலர் செய்ததாகத் தெரியவில்லை.ஆறுபேர்களின் பெயர்கள் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன. ,எனவே, அட்டாவதானத் திற்கிருந்த ஈடுபாடு இதற்கு இல்லை என்றே தெரிகிறது.எனினும் அவர்கள் அனைவருமே பல்துறைச் செந்நாப் பாவலர்களாகவும். ஆற்றல்மிக்க அவதானிகளாகவுமே காணப்படுகிறார்கள். கி.பி 19,20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்களே இவர்கள்.என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே ,அட்டாவதானம் தோன்றிவளர்ந்த பிறகே தசாவதானம் தோன்றத் தொடங்கியுள்ளது.

## ஆறுமுகம் பிள்ளை

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த புலவர்களில் ஒருவராகவும் அவதானிகளில் குறிப்பிடத் தக்கவருமான இவர் நாகர்கோயிலைச் சேர்ந்த கோட்டாறு என்னும்ஊரில் கொல்லம் ஆண்டு 1067 இல் மாசித்திங்களில் பிறந்தவர். 'விளையும்பயிர் முளையிலே தெரியும்'என்ற பழமொழிக்கேற்ப இளமையிலேயே இவரிடம் கவிதைபாடும் ஆற்றலும், எதையும் கூர்ந்துநோக்கி யறியும் பாங்கும் காணப்பட்டது.

இவருக்குக் கிடைத்த அரியவாய்ப்பு, இவர் பிறந்த அதே ஊரில் சதாவதானி செய்குத்தம்பிப் பாவலரும் வாழ்ந்ததே. அவரையே ஆசிரியராகக் கொண்டு கல்விகற்கத் தொடங்கிய இவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையோடு கற்றுப் புலமைபெற்றதோடன்றி விரைந்து கவிபாடவும் கற்றுக் கொண்டார்.

தமிழறிவைப் பெறுவதற்காகவே செய்குத்தம்பிப் பாவலரை அடைந்த இவர், அவதானங்கள் செய்வதிலும் அவர் வல்லவ ராக விளங்கியது கண்டு தாமும் அவதானங்களைக் கற்கத் தொடங்கினார். இவரது ஆர்வத்தையும் ஆற்றலையும் நன்குணர்ந்த செய்குத்தம்பிப் பாவலர் அவதானங்கள் செய்யும் முறைகளையும் இவர்க்குக் கூறிப் பயிற்றுவித்தார் ஆசிரியரைப் போலவே இவரும் நூறு அவதானங்கள் செய்யும் நிலைக்கு உயராவிட்டாலும் பத்து அவதானங்களைச் சிறப்பாகச் செய்து பலரும் போற்றும் நிலையை அடைந்தார்.

இவர் செய்த அவதானங்கள் எவை என்பதையும் இவர் வரலாற்றிலிருந்து அறியமுடிகிறது. ஆசுகவி,கண்டப்பத்திரிகை கண்டத்தொகை போன்ற கடினமான அவதானங்களைய்ம் கூட மிக எளிமையாக இவர் செய்து பாராட்டுப் பெற்றுள்ளார். இந்த அவதானங்களுக்குரிய விளக்கம் இந்நூலின் முற்பகுதியில் கூறப்பட்டுள்ளது. இவ்வளவுகடினமான அவதானங்களை இவரைத்தவிர வேறு தசாவதானிகள் யாரும் செய்ததாகத் தெரியவில்லை.

கோட்டாற்றிலும் இன்னும் பிற இடங்களிலும் அறிஞர்கள் பலர் கூடியுள்ள அவைகளில் தசாவதான நிகழ்ச்சியை நடத்திக் காட்டிப் பலரது பாராட்டுதல்களையும் இவர் பெற்றுள்ளார். ஒருமுறை இவர் அவதானம் செய்யும் போது கவிமணி. தேசிக விநாயகம்பிள்ளையவர்களும் பார்வையாளர்களில் ஒருவராக வீற்றிருந்து பார்த்து மகிழ்ந்துள்ளார். இவரது ஆற்றலைக் கண்டு வியந்த கவிமணி அவர்கள் தமது பாராட்டை ஓர் வெண்பாவாக வடித்துக் கொடுத்தார்.

"ஆறுமுகம் பிள்ளை அவதானம் கண்டெளியேன்
வேறுமுக மன்கூற வேண்டுமோ?— தேறுமதி
சேஷையா மெச்சித் திருவாய் மலர்ந்து, சபாஷ்
பேஷையா என்ற பிறகு" என்பதுவே

அப்பாடல். சேஷையாஎன்ற அறிஞர் ஒருவரும் ஆறுமுகம் பிள்ளையின் அவதான நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்து, "சபாஷ் பேஷையா" என்று பாராட்டியுள்ளார் என்பதும் கவிமணியின் பாடலால் தெரியவருகிறது.

பிற புலவர்கள் பாடிய நூல்களுக்குச் சிறப்புப்பாயிரமும் இவர் பாடியுள்ளார். நாஞ்சில்நாட்டில் பறக்கை என்னும் ஊரில் பிறந்த மாணிக்கவாசகம் பிள்ளை என்பவர் இயற்றிய 'திருச் செந்தில் பதிற்றுப் பத்தந்தாதி'யைப் பாராட்டியும் இவர்சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். வெண்பாப்புலியாகவும், விரைந்து பல்வகைப் பாடல்களைப் பாட வல்லவராகவும் விளங்கிய இவர் சிவஞான போத அதிகரண வெண்பா, சேரமண்டல சதகம், குசேல வெண்பா, தில்லைப் பதிற்றுப்பத்தந்தாதி,சாந்தி வெண்பா முதலிய பலநூல்களையும் இயற்றியுள்ளார்.

## ஜெகநாதப் பிள்ளை

கி.பி.19 ஆம் நூற்றாண்டில் சிறந்த கவிஞர்களில் ஒருவரா கவும் அவதானங்கள் செய்வதில் தன்னிகரற்றவராகவும் விளங் கியவர் இவர். பாண்டி நாட்டைச்சேர்ந்த பேறையூர் என்னும் ஊரில் பிறந்த இவர் தம் தொண்டு சிறக்கப் பணியாற்றியது· தொண்டை நாட்டில்தான், கி.பி.1875இல் இவர் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த செங்கற்பட்டில் தங்கியிருந்து தமிழ்ப் பணியாற்றியுள்ளார்,

முத்தமிழ் வித்தகரான இவர் தமிழ் இலக்கணத்தில் மிகவும் தேர்ச்சிபெற்று விளங்கி, 'இலக்கணக்கடல்' என்று பிறர்போற் றும் பெருமை பெற்றுள்ளார். அருங்கலை வாணரான இவர் ஆசிரியப் பணியாற்றி பல மாணவர்களை உருவாக்கியுள்ளார், செங்கற்பட்டிலிருந்த தி. சுப்பராய முதலியார் என்பவர் இவரிடம் பாடம் கேட்டுப் புலவராக விளங்கியவர். அட்டாவ தானிகள் வரிசையில் தனியிடம் பெற்றுத் திகழ்ந்தவர் பூவை. கலியாணசுந்தர முதலியார். அவரும் கூட ஜெகநாதப்பிள்ளை யிடம் கல்வி கற்றுச் சிறந்த புலமையினையும் கவிபாடும் ஆற் றலையும் பெற்றவரே. நன்னூல் தொல்காப்பியம் போன்ற இலக்கணங்களையும் இவர் அவ்ருக்குப் பயிற்று வித்துள்ளார்.

கி'பி- 1876 ஆம் ஆண்டில்தான் சென்னைக்கும் செங்கற் பட்டிற்கும் இடையே முதன் முதல் புகை வண்டி விடப்பட்டது. அப்போது இவர் செங்கற்பட்டில் வாழ்ந்திருந்தார். அட்டாவ தானம் பூவை கலியாணசுந்தர முதலியார் இவரிடம் கல்வி கற்ற தருணம் அது. அந்நிகழ்ச்சியை ஆசிரியரும் மாணவருமாகச் சேர்ந்து ஒரு வெண்பாவில் வடித்துத் தந்துள்ளார்கள். வெண்பா வின் முதலிரண்டடிகள் ஆசிரியர்பாட, பின்னிரண்டடிகளை மாணவர் பாடியுள்ளார்.

> ''பாருங்கள் ஓர்நொடியில் பன்னுமிடம் போய்வரலாம்
> வாருங்கள் என்னதடை மாநிலத்தீர்? —நீருங்கள்
> காலால் நடவாமல் காசுமிக நல்காமல்
> மேலாக வாழவினி மேல்''

என்பது அப்பாடல். இவரிடம் கல்வி கற்றது போலவே அவதானங்கள் செய்வதற்கும் கற்ற மாணவரே பூவை. கலியாணசுந்தரமுதலியார்.

பத்து வகையான அவதானங்களையும் செய்வதில் வல்லவ ரான இவர் அறிஞர்கள் பலர் கூடியுள்ள அவைகளில் தசாவ தான நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டிப் பரிசுகளையும் பாராட்

டுதல்களையும் பெற்றுள்ளார். இலக்கணக்கடலாக விளங்கியது போலவே தசாவதானத்திலும் சிறந்து விளங்கியுள்ளார். ஆனால் இவர் செய்த அவதானங்கள் எவையென்று தெரியவில்லை.

பிற புலவர்கள் செய்த நூல்களையும் பாராட்டிச் சிறப்புப் பாயிரம் பாடும் பெருமையினையும் பெற்ற இவர் முத்துசாமிப் பாரதியார் பாடிய 'விசுலப் பிரம புராணம்' என்ற நூலைப் பாராட்டியும் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். இவர் பாடியன வாகத் தனிப்பாடல்கள் உள்ளனவேயன்றி நூலேதும் இல்லை.

## மு. திருஞான சம்பந்தன்

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அவதானிகளில் இவரும் ஒருவர். சென்னையைச் சேர்ந்த திருமயிலையில் வாழ்ந்தவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களை ஆழ்ந்து கற்று அறிஞராகத் திகழ்ந்தவர். வடமொழிப் புலமையும் வாய்க்கப் பெற்ற இவர் சித்தாந்தங்களில் மேதையாகத் திகழ்ந்தவர். 'சித்தாந்தப் போராசிரியர்' என்று அறிஞர்கள் போற்றும் நிலையை அடைந்தவர்.

பத்துவகையான அவதானங்களையும் சிறப்பாகச் செய்து அறிஞர்களது பாராட்டைப் பெற்றவர். அருங்கலைகள் பலவற்றையும் அறிந்த வித்தகராக இவர் விளங்கியதால் 'பல்கலைக் கிழவர்' என்று பாராட்டப் பெற்றார். இவர் பல் ஆய்வு நூல்களையும் எழுதி அருந்தமிழுக்குத் தொண்டாற்றி யுள்ளார். 'ஏழின் தத்துவார்த்த விளக்கம்' என்பது இவர் எழுதிய சிறந்த நூல்களுள் ஒன்று. தத்துவக் கருத்துகளைக் கூறும் அந்நூலைப் பாராட்டி,தனித்தமிழ்க்காவலராக விளங்கிய மறைமலையடிகளார் அவர்கள் சிறப்புப்பாயிரம் வழங்கி யுள்ளார்கள். அப்பாயிரத்தின் முன்னுரையில் இவ்வாசிரியரது நுண்மாண் நுழைபுலத்தையும் பல்கலையறிவையும், சிந்தாந்தங்களில் இவருக்குள்ள ஈடுபாட்டையும் அடிகளார் அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள்.

சென்னை மாநகரில் பல இடங்களில் அறிஞர்கள் முன்பு இவர் தமது தசாவதான நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டியுள் ளார்.ஒரு முறை மறைமலை யடிகளாருங் கூட அந் நிகழ்ச்சியைப் பார்த்து மகிழ்ந்து பாராட்டியுள்ளார்கள். விரைந்து கவிபாடும் ஆற்றலையும் பெற்றிருந்த இந்த அறிஞர் அவதான நிகழ்ச் சிகளின் போது பாடிய பாடல்கள் சில உள்ளனவேயன்றி வேறு தனிப்பாடல்களோ கவிதை நூல்களோ இவர் இயற்றி யுள்ளதாகத் தெரியவில்லை.

## முத்துவீர உபாத்தியாயர்

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அவதானிகளில் இவரும் ஒருவர். தொண்டை நாட்டைச் சேர்ந்த புலவர்களில் ஒருவரான இவரது சொந்த ஊர் போன்ற பிற செய்திகள் தெரியவில்லை. தமிழ் இலக்கிய இலக்கணங்களை ஆழ்ந்து கற்று அறிஞராகத் திகழ்ந்துள்ளார். சைவ சித்தாந்தங்களிலும் இவருக்கு ஈடுபாடுண்டு. சமய நூற்புலமை மிக்குடையவராகத் திகழ்ந்த இவர் ஆராய்ச்சி நுட்பமும் வாதிடும் வன்மையும் வாய்க்கப் பெற்றிருந்தார்.

பத்துவகையான அவதானங்களையும் சிறப்பாகச் செய்யும் ஆற்றல் பெற்றிருந்த இவர் சென்னை மாநகரில் பல இடங்களிலும் அவதான நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டிப் புகழ் பெற்றுள்ளார். எனவே இவர் சென்னை மாநகரைச் சேர்ந்தவராக இருக்கக் கூடும் என்று கருதுபவர்களும் உண்டு. சிறந்த தமிழறிஞரான இவர் ஆசிரியப்பணியையும் ஆற்றிப் பல மாணவர்களை உருவாக்கியுள்ளார்.

பத்திரிகை ஆசிரியராகவும் விளங்கியுள்ள இவர் 'பூலோக வியாசன்' என்ற ஓர் திங்கள் இதழையும் நடத்தியுள்ளார். ஆராய்ச்சிக் கட்டுரைகள் கவிதைகள் முதலிய சிறப்பு அம்சங்களுடன் வெளியாகிய அப்பத்திரிகை புலவர்கள் போற்றும் அறிவுப் பேழையாகத் திகழ்ந்துள்ளது. இவர் தனிப்பாடல்கள் பல பாடியிருப்பதுடன் நூல்களும் இயற்றியுள்ளார். 'திருப்போரூர் முருகக் கடவுள் வெண்பாமாலை' என்பது இவர் இயற்றிய நூல்களுள் குறிப்பிடத் தக்கது .வெண்பா இயற்றுவதில் எத்துணை வல்லவர் என்பதற்கு அந்நூலே தக்க சான்று. பக்திப் பாசுரங்கள் வரிசையில் வைத்துப்போற்றுமளவிற்கு அந்நூல் சிறந்ததாகக் காணப்படுகிறது.

## பாலசுப்ரமணிய ஐயர்

கி. பி 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அவதானிகளில் இவரும் ஒருவர். சேலத்தில் வாழ்ந்த இவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும் மிகுந்த புலமை பெற்றிருந்ததுடன் வடமொழி வாணராகவும் விளங்கியுள்ளார். வேதங்களை நன்குணர்ந்த விற்பன்னராகவும் இவர் விளங்கியுள்ளார். இளமையிலேயே கவிபாடும் ஆற்றலும் வாய்க்கப் பெற்றுள்ளார்.

பத்துவகையான அவதானங்களையும் செய்வதில் வல்லவராக இவர் திகழ்ந்துள்ளார். சேலத்திலும் இன்னும் பிற இடங்களிலும் இவர் தமது அவதான நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டிப் புகழ் பெற்றுள்ளார். அவதானம் செய்கையில் ஆசுகவி பாடுவதில் இவர் தம் தனித் திறனைக் காட்டியுள்ளார். இவரை போல் விரைவாக வெண்பாப்பாடும் ஆற்றல் பெற்றவர் சிலரே என்றும் போற்றப் பெற்றுள்ளார்.

தனிப்பாடல்கள் சிலவற்றை இவர் பாடியிருப்பதுடன் நூல்களும் இயற்றியுள்ளார். தமக்கு உதவிகள் புரிந்த பெ. மா. மதுரைப் பிள்ளை என்பவர் மீது நடுவெழுத்தலங்காரப் பாடலையும் இவர் பாடியுள்ளார். பிற புலவர்கள் இயற்றிய நூல்களுக்குச் சிறப்புப் பாயிரமும் இவர் பாடியுள்ளார்.

## சரவணப் பெருமாள் கவிராயர் (2)

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அவதானிகளில் இவரும் ஒருவர். சேது நாட்டிலுள்ள முதுகுளத்தூர் இவர் பிறந்த ஊராகும். வேளாளர் குலத்தில் பிறந்த இக்கவிராயர் இளமையிலேயே கவிபாடும் ஆற்றலைப் பெற்று விளங்கினார்.

அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயரின் பேரர் இவர். மிகச் சிறந்த அட்டவதானிகளுல் ஒருவராகவும், யாருக்கும் அஞ்சாது துணிந்து எண்ணியதைக் கூறும் ஆற்றல் மிக்கவராகவும் விளங்கிய அவரால் உருவாக்கப்பட்டவர் இவர். எனவே அவதானங்கள் செய்வதிலும் கவிபாடுவதிலும் அவரைப்போலவே இக் கவிராயரும் சிறத்து விளங்கியுள்ளார். பாட்டனாரைப் போலவே இவரும் முதலில் எட்டுவகை அவதானங்களையே செய்து வந்துள்ளார் ஆனால் பின்பு பத்துவகை அவதானங்களையும் செய்யும் நிலைக்கு உயர்ந்து சிறப்புப்பெற்றுள்ளார். 'துவாத்ரீம் தசாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர்' என்று இவரைப் பிறர் போற்றி அழைப்பதுண்டு. இவரது அவதானக்கலையாற்றலைக்கண்டு மகிழ்ந்த சேதுபதியரசர் பொன்னும் பொருளும் வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

இக்கவிராயரின் முன்னோர்கள் சேதுமன்னர்களின் அவைக் களப்புலவர்களாக வீற்றிருந்து பெருமை பெற்றவர்கள். தம் முன்னோரைப் போலவே இவரும் அவைக்களப் புலவராக வீற்றிருந்து அவதானத் திறமையையும் கவிபாடும் ஆற்றலையும் வெளிப்படுத்திப் புகழ் பெற்றுள்ளார். இவர் காலத்தில்

ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர் முத்துராமலிங்கசேதுபதி. அவரும் கவிதைபாடும் ஆற்றல் வாய்க்கப் பெற்றவர்.

ஒரு முறை அரண்மனையிலிருந்த மெத்தைகளில் மூட்டைப் பூச்சிகள் இருந்ததால் அம்மெத்தைகளை வெயிலில் போட்டுக் காவலர்கள் அடித்தார்கள். அக்காட்சியைக் கண்டமன்னர் அவர்கள் செயலைப்பற்றிக் கவிராயரிடம் கேட்டார். அவரும் தக்க பதில் தந்தார். கேள்வி வெண்பாவின் முதற் பகுதியாகவும், பதில் மறுபகுதியாகவும் ஓர் அருமையான வெண்பா உருவாகியது.

"துஞ்சுவரை மூட்டை துளைக்கச் சுகங்கொடுக்கும்
பஞ்சணையை மோதுவதென் பாவலா?
இது மன்னரின் கேள்வி.
—வஞ்சகரைச்
சேர்ந்தவரும் அன்னவர்தந் தண்டணைக்குள் ளாவதுபோல்
சார்ந்ததனால் வந்தவினை தான்"

என்பது கவிராயரின் பதில்.

இது போலவே வேறோர் சமயம் இருவரும் உரையாடிக் கொண்டிருந்த போது மன்னர் கேட்டகேள்வியும் கவிராயரின் பதிலும் ஓர் வெண்பாவாக அமைந்தது.

"வரங்களுயிர்க் கீந்தளிக்கும் மால்,வால் படைத்த
குரங்குதுணைக் கொண்ட குறிப்பேன்?—

என்று கேட்டார் அரசர்.

—உரங்கொண்ட
வல்லவர்க்குப் புல்லும் வலியபடை என்பாரச்
சொல்வலிகாக் கைக்குமதித் து"

என்று பதில் கூறினார் கவிராயர்.

இப்படிப் பல சமயங்களில் அரசரோடு தமிழ்விளையாட்டு களை நடத்தி அரியபலபாடல்களைப் படைத்துள்ளார் இக்கவி ராயர். இவர் இயற்றிய நூல்கள் அனைத்தும் பொருட் சிறப்பும் சொற்சிறப்பும் அமையப் பெற்றுக் கற்றோர்க்கு இன்பம் பயப்பனவாகும்.

மதுரைச்சிலேடைவெண்பா. குன்றக்குடி சிலேடை வெண்பா, கந்த வருக்கச் சந்த வெண்பா. திருச்சுழியல் ஓரெழுத்தந்தாதி, மகரவந்தாதி, கழுகுமலை ஓரெழுத்தந்தாதி, பனைசைத் திரிபத்தந்தாதி, கயற்கண்ணிமாலை, புவனேந்திரன் அம்மானை என்பன இவரியற்றிய நூல்களாகும்.

## தசாவதானி இராமையா.

அவதானக்கலையின் பெருமையை நாம் நேரிலேயே கண்டு மகிழுமாறு நிகழ்த்திக் காட்டி இன்று நம்மிடையேவாழ்ந்துவருப வர் இக்கலைஞர். மதுரைமாவட்டம் சாலிச்சந்தை என்னும் சிற்றூரில் பிறந்த திருக்குறள் அவதானியான இவர் ஐந்து வயதிற்குள்ளாகவே தம் பெற்றோரை இழக்கும் நிலைக்கு ஆளானார். அதன் விளைவால் ஐந்தாம் வகுப்போடு இவரது கல்விப் பயணம் முடிந்தது.

இவரது தொடக்கப்பள்ளி ஆசிரியராகிய வீரபத்திர ஐயர் என்பவரே பிற்காலத்தில் இலக்கண இலக்கியங்களையும் இவருக்குப் பயிற்றுவித்துள்ளார். சிறுவயதிலேயே ஆத்திசூடி கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, வெற்றிவேற்கை, கருவை அந்தாதி போன்ற நூல்களை மனப்பாடமாக ஒப்புவிக்கும். ஆற்றல் இவருக்கிருந்தது. பிற்காலத்தில் அவதானக்கலையில் சிறப்படைவதற்கு இளமையில் ஏற்பட்ட அப்பழக்கமே அடிப் படை என்று கருதுகிறார் இவர். அறிஞர்தம் இலக்கியச் சொற் பொழிவுகளை ஆர்வமுடன் கேட்டுத் தமிழறிவை வளர்த்து வந்த இவர் நாமக்கல் கவிஞரின் பாடல்கள் பலவற்றையும் பாரதிதாசனின் சில நூல்களையும் அடிபிறழாமல் அப்படியே ஒப்புவித்தும் பிறரது பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார்.

நாட்டு விடுதலைக்காகச் சிறைப்பட்டு பல்லாரிச் சிறையில் இவர் இருந்தபோது கம்பம்பீர்முகமதுப் பாவலர் அவர்களும் அங்கு வந்திருந்தார். தமிழார்வம் மிக்கவர்களை அழைத்துத் தாம் ஒரு வெண்பாவை இருமுறை சொன்னவுடன் அப்படியே அதை மற்றவர்கூறவேண்டும் என்று குறிப்பிட்டார். அங்கிருந்த வர்களில் உடனேயே முதலில் அவ்வெண்பாவைக் கூறிப்பாவல ரின் பாராட்டுதல்களைப் பெற்றார் இக்கலைஞர்,

> ''நேசனைக் காணாவிடத்து நெஞ்சார வேதுதித்தல்
> ஆசானை எவ்விடத்தும் அப்படியே - வாச
> மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில்
> வினையாளை வேலைமுடி வில்''

என்பது அவ்வெண்பா, இப்பாடலில் வெண்பா விலக்கணம் பிறழ்ந்துள்ளது. தசாவதானியார் குறிப்பிலேயே இப்படித் தான் இப்பாடல் காணப்படுவதால் இது குறித்து வேறு ஏதும் கூறுதற்கில்லை. சிறைப்பட்டிருந்த போது தமதுமுப்பதாம் வயதில் எதிர்பாராமல் கண்பார்வையை இழந்த இவர், அதன்

பிறகே இலக்கண இலக்கியங்களைக் கற்றுப்புலமை பெற்றுள்ளார்.

பேரையூர் தமிழாசான் பாப்பு இராமநாதன் என்பவரிடம் செய்யுள் அமைக்கும் முறைகளையும், பேரையூர் அட்டாவதானியார் இராமலிங்கம் செட்டியார் என்பவரிடம் அவதானம் செய்யும் முறைகளையும் கற்றறிந்த இவரது அவதான அரங்கேற்றம் 1956ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் நாள் சாப்டூருக்கு அருகிலுள்ள அத்திப்பட்டியில் நடைபெற்றது. கண்பார்வையை இழந்தாலும் அவதானக்கலைக்குக் கண் போன்று திகழும் இந்த அறிஞர், தமிழ்கூறும் நல்லுலகெங்கும் சென்று திருக்குறளின் சிறப்பினையும் அவதானக் கலையின் அருமையினையும் உணர்த்திவருகிறார். இவரைப் போற்றிச் சிறப்பிப்பது அவதானக்கலையைச் சிறப்பிப்பதாகும்.

# சோடசாவதானம்

ஒரே நேரத்தில் பதினாறு வகையான அவதானங்களைச் செய்து காட்டும் இவ்வகை அவதானமும் அவ்வளவாகப் புகழ் பெறவில்லை என்றே தெரிகிறது. சோடசாவதானிகளாக நான்கு பேர்களின் பெயர்களையே அறிய முடிகிறது. அவர்களிலும் சிலர் தான் அந்த அவதானத்தால் புகழ் பெற்றுள்ளார்கள். சோடசாவதானிகளும் கூட பிற்கால அவதானிகளின் வரிசையில் தான் இடம் பெறுகின்றனர். எனவே பதினாறு வகையான அவதானங்களைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் பிற்றை நாளில் தோன்றியதே எனவும், அந்த எண்ணம் அவ்வளவாக வெற்றி பெறவில்லை எனவும் அறிய முடிகிறது.

## சுப்பராயச் செட்டியார்

ஒரே சமயத்தில் பதினாறு வகையான அவதானங்களைச் செய்து புகழ் பெற்ற சிலரில் தனியிடம் பெற்றவர் இவர். திரிசபுரத்தைச் சேர்ந்த பாலக்கரையில் கி. பி. 19ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர். இவரது தந்தையார் பெயர் வீரராகவசெட்டியார்.

பெரும் புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் இளமையில் கல்வி கற்ற இவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையோடு கற்றுத் தேறியதுடன் கவிபாடும் ஆற்றலையும் பெற்று விளங்கினார். இவரது நினைவாற்றலையும், எதனையும் கூர்ந்து கவனித்து உண்மையினையறியும் பாங்கினையும் ஆசிரியரே பன்முறை பார்த்துப் பாராட்டியுள்ளார். ஒரு முறை மீனாட்சி சுந்தரம் பிள்ளையினைப் பார்க்க வந்த சிலர் அவதானக் கலையின் சிறப்பினைப் பாராட்டிக் கூறியதுடன் உங்கள் மாணவர்களில் எவரையேனும் அவதானியாக்கக் கூடாதா என்றும் கேட்டனர். அவதானியாவதென்பது அப்படியொன்றும் அரிய செயல் அல்ல என்றும், முயற்சித்தால் எவரும் அறிய முடியும் என்றும் கூறிய பிள்ளையவர்கள் தம்முடைய மாணவர்களில் ஒருவரையும் அவதானியாக்கிக் காட்டுவதாக உறுதியளித்தார்.

அவரது உறுதி மொழி மாணவர் சுப்பராயர் மூலம் நிறைவேறியது. ஒவ்வொரு நாளும் அவருக்குப் பயிற்சி கொடுத்துப்

பழக்கினார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. அவர் ஓர் அவதானி யாக இல்லாவிட்டாலும், கூட ஓர் அவதானியை அவர் உரு வாக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. முதலில் எட்டு வகையான அவதானங்களைச் செய்து அட்டாவதானியாக அறிமுகமாகி, மிக விரைவிலேயே பத்து, பன்னிரண்டு என்று வளர்ந்து, பதினாறு அவதானங்களையும் செய்யும் நிலைக்கு உயர்ந்தார் இவர். தம்முடைய ஆசானுக்கு முன்பும், வேறு பல அறிஞர்கள் கூடிய அவையிலும் சோடசாவதான நிகழ்ச்சிகளைப் பன் முறை நடத்திக் காட்டிப் பாராட்டப் பெற்றார்.

சிறந்த கவிஞராகவும் திகழ்ந்த இவர் பலரது நூல்களைப் பாராட்டிச் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். பவழை சண்முக முதலியார் என்பவர் 1890 ஆம் ஆண்டு திருத்தணி முருகன் மீது 'வெண்பா வந்தாதி' என்றோர் நூல் பாடியுள்ளார். அந் நூலுக்கு இவர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். சென்னை, பெரம்பூரில் வாழ்ந்த கோவிந்தராசக் கவிராயர் நூலுக்கும் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். 'விரிஞ்சேசர் சதகம்', 'ஆதிபுர தலபுராணம்' ஆகிய நூல்களை எழுதியிருப்பதுடன் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம், சிவஞான முனிவரின் காஞ்சிப் புராணம், கம்பராமாயணம் அயோத்தியா காண்டம், புலியூர் வெண்பா ஆகிய நூல்கட்கு உரையும் எழுதி யுள்ளார்.

பருத்தி நகரத் தந்தாதி என்னும் நூலுக்கு இவர் பாடிய சிறப்புக்கவி கீழே தரப்பட்டுள்ளது.

> ''தேனாறுந் துளவலங்கல் பெருமானோ டயன்முதலார்
> துதித்தெஞ் ஞான்றும்
> பானாறும் பல்வளனும் பெறவருளும் பருத்தி நகர்ப்
> பரமன் றேறல்
> கானாறுங் கடம்புகமழ் கழல்மீதோ ரந்தாதிக்
> கண்ணி சூட்டி
> வானாறும் புகழ்படைத்தோன் சுப்பராயப் புலமை
> வல்லோன் மாதோ!''

இவரது புலமைக்கு இப்பாடல் தக்க சான்றாகும்.

சிறந்த கவிஞராகவும் அவதானியாகவும் விளங்கிய இவர் சிறந்த ஆசிரியராகவும் விளங்கிப் பல மாணவர்களை உரு வாக்கியுள்ளார். 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் சென்னை யில் சிறந்த புலவராகத் திகழ்ந்த சென்னை சுப்பிரமணிய பிள்ளை என்பவரும் இவரால் உருவாக்கப்பட்டவரேயாவார்.

## வேலாயுதக் கவிராயர்

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். சேது நாட்டைச் சேர்ந்த முதுகுளத்தூரில் பிறந்த இவர் இளமையிலேயே விரைந்து கவிபாடும் ஆற்றலைப் பெற்றுச் சிறப்படைந்துள்ளார். தமிழ் இலக்கிய இலக்கணங் களை முறையோடு கற்றுத் தேறிய இவர் நாவன்மை தோன்றப் பேசும் ஆற்றலையும் பெற்றுச் சிறந்துள்ளார்.

துவாத் ரீம் தசாவதானி சரவணப் பெருமாள் கவிராயரின் மைத்துனர் இவர். எனவே, சரவணப் பெருமாள் கவிராயர், தமது பாட்டனாராகிய அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயரிடம் அவதானங்களைச் செய்யக் கற்றுக் கொண்டது போலவே இவரும் கற்றுத் தேறியிருக்கலாம். தம் மைத்துனரைக் காட்டிலும் தாம் அதிகமான அவதானங்கள் செய்ய வேண்டும் என்று இவர் ஆர்வமுடன் முயன்று பதினாறு அவதானங் களைச் செய்யக் கற்றிருக்க வேண்டும். இராமனாதபுரம் சேது பதியரசர் முன்பும் வேறு பிற இடங்களிலும் இவர் தமது அவதான நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டிப் புகழ் பெற்றுள்ளார்.

இவரது மைத்துனரையும், முன்னோர்களையும் போலவே இவரும் இராமநாதபுரம் சமத்தானப் புலவராக வீற்றிருந்து பெருமை பெற்றுள்ளார். அது போல இவரது புலமை நலம் வெளியிடுமாறு பல அறிய பாடல்களைப் பாடி மன்னரையும் பிறரையும் மகிழ்வித்துள்ளார். பிற புலவர்கள் பாடிய நூல் களுக்குச் சிறப்புப் பாயிரமும் இவர் பாடியுள்ளார். எண்பது ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த 'குளந்தைக் களத்தில் வென்றார்,' என்ற புலவர் இயற்றிய 'சிவகிரி வெண்பா' என்னும் நூலைப் பாராட்டியும் இவர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். இவரது ஊரைச் சேர்ந்த சுப்பையா பிள்ளை என்பவர் இயற்றிய புவனேந்திர காவியம்' என்னும் நூலுக்கு இவர்,

> "கல்லார்கள் எளிதினில் கற்றிடக் கற்றார்
> இது போலுங் கற்க நாமோ
> வல்லாரென் றதிசயிப்ப மனுநீதி
> நெறிக்கிதுவோர் வரம்பாம் என்னத்
> தொல்லாரும் புவனேந்திர காவியமென்
> றொருபுதுநூல் சொற்றான்மற்றை
> எல்லாநூ லும்பழநூல் எனப்புகலச்
> சுப்பையவேள் இசைவலோனே"

என்று சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார்.

### மீனாட்சி சுந்தரக் கவிராயர்

19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். பாண்டி நாட்டின் தலை நகரான மதுரையில் வாழ்ந்த இவர் முத்தமிழ் வித்தகராகவும் தமிழ் இலக்கிய இலக்கணங் களை ஆழ்ந்து கற்றுத் தேறிய அறிஞராகவும் விளங்கியுள்ளார். சமய இலக்கியங்களில் பெரிதும் ஈடுபாடுடைய இவர் சிந்தாந்தச் செம்மல் என்று போற்றும் நிலையில் வாழ்ந்துள்ளார்.

இவரும் முதலில் அட்டாவதானியாக விளங்கியுள்ளார். தொடர்ந்து முயன்று பதினாறு அவதானங்களைச் செய்து புகழ் பெற்றுள்ளார். மதுரை சோம சுந்தரர் மீனாட்சி ஆலயத்தில் முதன் முதல் இவரது அவதான நிகழ்ச்சி அரங்கேறியது. அறிஞர் கள் பலர் அந்நிகழ்ச்சியைப் பாராட்டிப் போற்றியுள்ளனர். அதன் பிறகு வேறு பல இடங்களிலும் இவர் தமது சோடசாவ தான நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டி புகழ் பெற்றுள்ளார்.

பல்வேறு வகையான சந்தப் பாடல்களையும் பாடுவதில் வல்லவரான இவர் வெண்பாவிற் புலியாகவும் விளங்கியுள்ளார். இவரது கவிதையாற்றலைக் கண்டு வியந்தோர் 'கவிராயர்' என்று செல்லமாக அழைத்து மகிழ்வதுண்டு. பிறரது நூல் களுக்கு இவரும் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். மதுரையைச் சேர்ந்த P.M. சண்முகஞ்செட்டியார் என்பவர் எழுதிய 'திருப் பரங்கிரிப் பதிற்றுப் பந்தாதி' என்ற நூலைப் பாராட்டியும் இவர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார்.

### சரவணப் பெருமாள் கவிராயர்

இருபதாம் நூற்றாண்டுப் புலவர்களில் ஒருவரான இவர் சேது நாட்டைச் சேர்ந்த முதுகுளத்தூரில் பிறந்தவர். தமிழ் இலக்கண இலக்கியங்களில் வல்லவராகவும், கவிபாடும் ஆற்றல் மிக்கவராகவும் விளங்கியுள்ள இவர் இராமனாதபுரம் சமத் தானப் புலவராகவும் விளங்கியுள்ளார்.

பதினாறு வகையான அவதானங்களையும் செய்வதில் தேர்ச்சி பெற்று விளங்கிய இக் கவிராயர் சேதுபதி அரசர் முன்பு தம் ஆற்றலை வெளிப் படுத்திப் பாராட்டுப் பெற்றுள்ளார். சிறந்த கவிஞராகவும் விளங்கிய இவர் பிற புலவர்கள் பாடிய நூல்களுக்கும் சிறப்புப் பாயிரமும் பாடியுள்ளார். பாண்டி நாடு, புளியங்குளத்தைச் சேர்ந்த அட்டாவதானம் இராமசாமிக் கவிராயர் பாடிய நூலுக்கும் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார்.

சரவணப் பெருமாள் கவிராயர் என்ற பெயரில் அட்டாவதானிகளும் தசாவதானி ஒருவரும் உள்ளனர் என்பதை ஏற்கெனவே கண்டோம். சோடசாவதானியாகக் காட்சியளிக்கும் இக் கவிராயர் அவர்களில் ஒருவர் தானா அல்லது வேறொருவரா என்பது விளங்கவில்லை. இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக இவர் இருந்தாலும் இவரும் இராமநாதபுரம் சமத்தானப் புலவராக விளங்கியிருப்பதாலும் தசாவதானியாக இருந்தவரே பின்பு சோடசாவதானியாக உயர்ந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு. அல்லது, இப்பெயரில் வாழ்ந்த பல கவிராயர்களைப் போல் இவரும் ஒருவராக இருக்கலாம்.

# சதாவதானம்

அவதானக் கலையின் வளர்ச்சியில் சாதனை யென்றே போற்றத் தக்கது இச்சதாவதானம். ஒரே சமயத்தில் நூறு வகையான அவதானங்களைச் செய்வதென்பது அவ்வளவு எளிய செயல் அன்று. ஆனால் அட்டாவதானத்திற்கடுத்த நிலையில் பல அறிஞர்கள் இவ்வகை அவதானங்களைச் செய்து புகழ்பெற்றுள்ளதை அறிகிறோம். அவர்களில் பலர் மிகச் சிறந்த புலவர்களாகவும் விளங்கி அரிய பல நூல்களையும் ஆக்கியுள்ளார்கள். சதாவதானிகள் அனைவரும் அண்மையில் அல்லது நூற்றாண்டுகட்கு முன்னர்தான் வாழ்ந்துள்ளனர் என்பதை நோக்க அட்டாவதானத்தில் தொடங்கிய முயற்சி காலப் போக்கில் படிப்படியாக வளர்ந்து பின்னர்தான் அது சதாவதானமாக ஆகியுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

## செய்குத் தம்பிப் பாவலர்

19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் குறிப்பிடத் தக்கவராக விளங்கிய இவர் சதாவதானிகளிலும் முதலிடம் பெற்றவராக விளங்கியுள்ளார். நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த நாகர் கோயிலை அடுத்த இலங்கடை என்னும் ஊரில் 1857 ஆம் ஆண்டு ஆடித் திங்கள் பதினேழாம் நாள் இவர் பிறந்தார். தந்தையார் பெயர் பக்கீர் மீரான் சாகிப். தாயார் பெயர் அமீனா.

ஐந்து வயதிற்குள் அரபு மொழிப் பள்ளியில் சேர்ந்து படித்த இவர் எட்டாம் வயதில் முகமதியர்களுக்கான கல்வியையும் கற்கும் வாய்ப்பைப் பெற்றார். அதன் பிறகே தமிழ்க்கல்வி கற்கத் தொடங்கிய இவர், குறுகிய காலத்திற்குள்ளாகவே அதாவது அவருக்குப் பதினைந்து வயது ஆவதற்குள்ளகவே, கல்வியறிவு நிரம்பப் பெற்று விளங்கினார். நாராயண உபாத்தியாயர் என்பவரே அவருக்குத் தமிழ்கல்வியைப் போதித்தார். இளமையிலேயே கவிபாடும் ஆற்றலையும் பெற்று விளங்கிய இவர் தமது பதினாறாம் வயதிலேயே அந்தாதி, பிள்ளைத் தமிழ் போன்ற நூல்களைத் தம் மதக் கடவுள் மீது பாடும் அளவுக்குப் புலமை பெற்றிருந்தார். அதனால் அந்த இளம் வயதிலேயே இவரை அனைவரும் 'பாவலர்' என்று பட்டம் கொடுத்து அழைக்கலாயினர். விரைந்து பேசக் கூடிய ஆற்றலையும் இவர் பெற்றிருந்தார்.

வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் நிலை இந்தப் பாவலருக்கும் ஏற்பட்டதால் அத்துயர் போக்கும் பொருட்டு நெசவு போன்ற தொழில்களையும் கூட இவர் செய்தார். மத நூல்களை அச்சிடும் பணிக்காக இவர் சென்னை வரும் வாய்ப்பு ஏற்பட்டது. சென்னையில் பார்த்த சாரதி நாயுடு பதிப்பகத்தில் தங்கிப் பல நூல்களைப் பிழையின்றி அச்சிடும் படி செய்தார். சீறாப்புராணமும் கூட இவரால் அங்கு அச்சிடப்பட்டது.

இவர் சென்னையில் தங்கி இருந்த போதுதான் அருட்பாவை மருட்பா என்று வாதிடும் நிலை உருவாகியிருந்தது திருவருட் பாவிற்கு எதிர்ப்பு வளர்ந்து வந்த அந்நிலையில் முகமதியரான இவர் மதவேறுபாடு கருதாது திருவருட்பாவை நன்கு ஆராய்ந்து அதன் பெருமைகளையுணர்ந்து அது அருட்பாவேயாம் என்று ஆணித்தரமாக வாதிட்டார். இவரது வலுவான விவாதம் அருட்பா ஆதரவாளர்கட்குத் தெம்பையூட்டியதுடன் இவர் கருத்தே சரியென்று பலர் நம்பவும் வைத்தது. சென்னை வாழ்வு தான் இவரை ஓர் அவதானியாகவும் ஆக்கியது. அங்கிருந்த போது அவதானங்களைப்பற்றி யறிந்த இவர் தாமும் ஓர் அவ தானியாக வேண்டும் என்று விரும்பினார். இவருக்கு அவதானங் களைப் பயிற்றுவித்த துயார் என்று தெரியவில்லை. ஆனால் குறுகியகாலத்திற்குள்ளேயே நூறு அவதானங்களையும் செய்யச் கூடிய ஆற்றலை இவர் பெற்றார். 1907 ஆம் ஆண்டு சென்னை விக்டோரியா மண்டபத்தில் கண்ணபிரான் முதலியார் என்பவர் தலைமையில் இவரது சதாவதான நிகழ்ச்சி அரங் கேறியது. அறிஞர்கள் பலர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தக்க பதிலைத் தந்து அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றார். இவரது கவிதையாற்றலைச் சோதிக்கும் வண்ணம் ஈற்றடி கொடுத்து வெண்பாப் பாடுமாறும் இவரைக் கேட்டனர். அச் சோதனைகளையும் இவர் எளிதில் வென்றார்.

'விராடனையே பெண்ணெனலா மே' என்பது ஓர் ஈற்றடி.

"உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதுமொன்றை
எண்ணும் பொழுதும் எரிமுன்னாய் — மண்ணில்
வராடவனை யேதெய்வம் மன்னனெனும் சொற்ற
விராடனையே பெண்ணெனலா மே"

என்பது இவர் பாடிய வெண்பா.

'மாமனுக்குக் கந்தன் மகன்' என்ற வேறோர் ஈற்றடி 'யும் கொடுக்கப்பட்டது.

'அண்டர் முறையால் அலைகடலில் பள்ளிகொண்ட
கொண்டலென்ன மேனிக் குரிசிலாம் — விண்டுபெற்ற
காமனுக்கு முற்றும் கருதும் படியமைந்த
மாமனுக்குக் கந்தன் மகன்''

என்ற வெண்பா இவரால் பாடப் பெற்றது.

இதே ஆண்டில்தான் இவருக்குத் திருமணமும் நடை பெற்றது. சிறந்த அவதானியாகத் திகழ்ந்த இவர் சிறந்த ஆசிரியராகவும் திகழ்ந்து பல மாணவர்களை உருவாக்கியுள்ளார். தசாவதானி ஆறுமுகம்பிள்ளை, திருக்குறள் அவதானி சுப்பிர மணிய தாசு போன்ற அறிஞர்கள் இவரால் உருவாக்கப்பட்ட மாணவர்களாவார். தனிப்பாடல்கள் பலவற்றைப் பாடியிருப்ப துடன் சிறந்த நூல்கள் சிலவற்றையும் இவர் இயற்றியுள்ளார். சம்சுதீன் கோவை, திருநாகூர்த் திருவந்தாதி, திருக்கோட் டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, கல்வத்துநாயகம் இன்னிசைப் பாமாலை என்பன இவர்இயற்றிய நூல்களாகும்.

எழுபத்தெட்டு ஆண்டுகள் வாழ்ந்து அவதானக்கலைக்கும் அருந்தமிழுக்கும் முகமதிய மதத்திற்கும் சிறந்த தொண்டாற்றிய செய்குத்தம்பிப் பாவலர். 1950 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் இயற்கை எய்தினார்.

## தெ. போ. கிருட்டிணசாமிப் பாவலர்

இருபதாம் நூற்றாண்டில் சிறந்த அவதானிகளில் ஒருவரா கவும், நடிகராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் நாட்டு விடுதலைக்காகப் போராடிய தியாகியாகவும் வாழ்ந்து வரலாற்றுப் புகழ்பெற்றவர் இவர். இவரது தந்தையார் பெயர் பொன்னுசாமிக் கிராமணி. செங்கற்பட்டு மாவட்டத் தில் உள்ள தென்பட்டிணம் இவர் பிறந்த ஊர். பின்பு சென்னையிலுள்ள சிந்தாதிரிப் பேட்டையில் வாழத் தொடங் கினார். பத்தாம் வகுப்புவரை படித்த இவர் அதற்கு மேலுங் கல்வியைத் தொடர விரும்பவில்லை. தமிழ் இலக்கிய இலக் கணங்களைக் கற்க வேண்டும் என்ற விருப்பம் இவர் உள்ளத்தில் மேலோங்கியிருந்தது. சென்னையில் புகழ்பெற்ற தமிழ்ப்புலவ ராக விளங்கிய கோ. வடிவேலுச் செட்டியார் என்பவரிடம்

தமிழ் கற்கத் தொடங்கினார். அவரது முயற்சி நற்பயனைத் தந்தது. சிறந்த புலவர்களில் ஒருவராகும் நிலையை விரை விலேயே பெற்றார்.

முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பொறுப்பேற்று அரும்பணியாற்றினார். மாணவர் மனங்கொள்ளும் விதத்தில் பாடங்களை நடத்தி அனைவரது நன்மதிப்பையும் பெற்றார். அப்போதுதான் அவதானங்களைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் அவருக்குத் தோன்றியது. தமிழ் பயிற்றுவித்த வடிவேலுச் செட்டியாரிடமே அவதானங்களையும் கற்றுத் தேர்ச்சிபெற்று விளங்கினார். நீதிபதி சதாசிவ ஐயர் தலைமையில் வடிவேலுச் செட்டியார் முன்னிலையில், சென்னை வி.பி. மண்டபத்தில் இவரது அவதான நிகழ்ச்சி அரங்கேற்றப் பட்டது. நூறு வகையான அவதானங்களையும் கண்டோர் வியக்குமாறு செய்து காட்டி அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றார்.

கேட்டார்ப் பிணிக்கும் வண்ணம் பேசக்கூடிய நாவன்மையும் இவருக்கிருந்ததால் இவரை 'பிரசங்க சிந்தாமணி' என்று சிறப் பித்துக் கூறலாயினர். சிவகாசி உயர்நிலைப்பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர் அன்று தேசவிடுதலைக் காகப் போராடிய காங்கிரஸ் இயக்கத்துடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதன் மூலம் நற்பணிகள் பல ஆற்றிய இவர் பத்திரிகை ஆசிரியராகவும் விளங்கியுள்ளார். 'நாரதர்' 'தேசபந்து' 'இன்றைய சமாச்சாரம்' போன்ற பத்திரிகைகளின் ஆசிரியராக விளங்கித் தேசவிடுதலைக்குப் போராடக்கூடிய எழுச்சியையும் உணர்ச்சியையும் மக்கள் மத்தியில் ஊட்டினார். இவரது பத்திரிகைப்பணி இந்திய சுதந்திரப் போரின் வரலாற்றில் குறிப் பிடத்தக்கது.

தாம் வாழ்ந்துவந்த சிந்தாதிரிப்பேட்டையில் இருந்த உயர் நிலைப்பள்ளி, போதிய வளர்ச்சி பெறாத நிலையில் இருந்ததால் அதை வளர்ச்சியடையச் செய்யவேண்டி அமைக்கப்பட்ட குழுவில் வாணாள் உறுப்பினராகத் தாம் ஆகியதுடன் தமது இளவல் தெ.பொ. மீனாட்சிசுந்தரத்தையும் அங்கு பணியாற்றச் செய்தார். பள்ளியின் முன்னேற்றத்திற்காகப்பல நாடகங்களை இவர் நடத்தினார். அதன் மூலம் பெற்ற வருவாயினால் பள்ளிக் கட்டிடம் உருவாகியது. நாடகப் பேராசிரியராக விளங்கிய

பம்மல் சம்பந்த முதலியாருடன் சேர்ந்து நடித்து வியத்தகு சாதனைகள் பல புரிந்தார். 'பாலமனோகர நாடக சபா' என்ற அமைப்பினை ஏற்படுத்திஅதன் மூலம் பல சிறந்த நாடகங்களைத் தமிழகத்திற்கு வழங்கினார். அரிச்சந்திரன், கோவலன் போன்ற பல நாடகங்கள் இவரது ஆற்றலால் சிறந்து விளங்கின. பின்பு 'பாய்ஸ் கம்பெனி' என்ற வேறோர் அமைப்பினையும் தோற்று வித்தார். அதன் மூலம் பல அரிய நாடகங்களை அரங்கேற்றி னார்.

இங்கிலாந்து அரசராக அப்போது விளங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இவரது நாடகத் திறமையைக் கேட்டறிந்து தம் குடும்பத்தினர் பார்த்து மகிழுமாறு ஓர் நாடகம் நடத்தும்படி இவரைக் கேட்டுக்கொண்டார். அப்போது தான் 'மார்க்கண்டேயர்' நாடகம் உருவாகியது. அந்நாடகத்தில் இவரது நடிப்பாற்றலையும் காட்சி அமைப்புகளையும் கண்டு வியந்த அரசர் இவரைப் புகழ்ந்து போற்றினார்.

சிறந்த நாடக ஆசிரியராகவும் நடிகராகவும் விளங்கிய இவர் சிறந்த நூலாசிரியராகவும் விளங்கியுள்ளார். 'கலைசைச்சிலேடை வெண்பா' என்ற நூலுக்கு அரிய உரையினை இவர் எழுதியுள்ளார் பெசன்ட் அம்மையார் வரலாறு, சிவாசி, தேசிங்குராசன், பிரகலாதன், சாவித்திரி போன்ற சிறந்த நூல்களையும் இவர் எழுதியுள்ளார். நூறு அவதானங்களைச் செய்து அவதான வரலாற்றில் சாதனை புரிந்தது மட்டுமன்றி பல்துறைவல்ல அறிஞராகவும் விளங்கிய இவரது வரலாறே சாதனைகளின் தொகுப்பு நிகழ்ச்சியாக அமைந்துள்ளதை அறிகிறோம்.

## முத்துசாமி ஐயங்கார்

19 ஆம் நூற்றாண்டுப் புலவர்களில் ஒருவராக விளங்கிய இவர் இராமநாதபுரத்தில் பிறந்தவர். தமிழ், வடமொழி ஆகிய இருமொழிப் புலமையும் பெற்றுவிளங்கிய இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். கவிதை எழுதும் ஆற்றலையும் பெற்றிருந்தார். தமிழ் அறிஞராகத் திகழ்ந்த மு. இராகவ ஐயங்கார் இவருடைய திருக்குமாரரே. இவரிடம் பெற்ற தமிழறிவால் தான் மகனும் சிறந்தஅறிஞராகத் திகழ முடிந்தது.

நூறு வகை அவதானங்களையும் செய்யும் ஆற்றல் பெற்றிருந்த இவர் சேதுபதியரசர் அவையில் புலவராக

வீற்றிருந்து தம் புலமைத் திறத்தையும் அவதானம் செய்யும் ஆற்றலையும் வெளிப்படுத்தியுள்ளார். இவரது பேராற்றலைக் கண்டு வியந்த சேதுபதியரசர் பொன்னும் பொருளும் வழங்கி மகிழ்வித்துள்ளார். தனிப்பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ள இவர் பிறபுலவர்கள் பாடிய நூல்களுக்குச் சிறப்புப் பாயிரமும் பாடியுள்ளார்.

சிறந்த சதாவதானியாகத் திகழ்ந்த இவர் மிகச்சிறந்த ஆசிரியராகவும் திகழ்ந்துள்ளார். இவரிடம் பாடம்கேட்ட பலர் புலமைமிக்கவர்களாக விளங்கியுள்ளார்கள். இராமநாதபுரத்தைச் சேர்ந்த உ.வே.தேவராசபாரதிகள் என்பவருக்கும் இவர் தமிழ் கற்பித்துள்ளார். மைசூர் நாட்டில் சாசன இலாகாப் பொறுப் பாளராகப் பணியாற்றியவரும் சிறந்த அறிஞராக விளங்கிய வருமான ராவ்பகதூர் ரா. நரசிம்மாச்சாரியார் என்பவரும் இவரிடம் தமிழ்கற்றவரே!

சதாவதானியான இவர் சிறந்த நூலாசிரியராகவும் விளங்கி யுள்ளார். நூற்றெட்டுத்திருப்பதி அகவல், மணவாள மாமுனி கள் நூற்றந்தாதி என்பன இவரியற்றிய சிறந்த நூல்களாகும். இவ்விரண்டு நூல்களையும் இவரது மாணவர் ரா. நரசிம்மாச் சாரியே அச்சிட்டு 1908ஆம்ஆண்டு வெளியிட்டுள்ளார். அந்நூலின் பதிப்புரையில் தம் ஆசிரியரைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார். அவர்,

"இவ்வாசிரியரிடம் படித்தவர்களில் நானும் ஒருவன் என்பதை இங்கு கூறுவது மிகையாகாதென்று எண்ணுகிறேன்; அக்காலத்தில் தாமியற்றிய இவ்விருநூல்களின் கையெழுத்துப் பிரதியை ஆசிரியர் அடியேனிடம் அளித்து, அநுகூலப்படும்போது இவற்றைப் பதிப்பித்து வெளியிடுக என்று கட்டளையிட்டருளி னார். நெடுநாள் சென்றபோதிலும் இக்கைங்கரியம் என்னால் நடத்தப்படாமலேயே இருந்தது. அதனை நிறைவேற்றுதற்கு இப்போது சமயம்வாய்த்ததற்கு மகிழ்கிறேன்"

மேற்கண்ட குறிப்பிலிருந்து இவ்வாசிரியர் பல மாண வர்களை உருவாக்கியுள்ளார் என்பதும், மாணவர்களைத் தம் சொந்த மகனைக் காட்டிலும் பெரிதாகமதித்துத் தம் நூல் களை வெளியிடும் வாய்ப்பையும் தந்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

**பாலசுப்ரமணிய ஐயர்**

19 ஆம் நூற்றாண்டுப் புலவர்களில் இவரும் ஒருவர். மழவராயனேந்தல் என்னும் ஊரில் சிதம்பர ஐயர் என்பவருக்கு மகனாக 1894 ஆம் ஆண்டு இவர் பிறந்தார். தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றிருந்த இவர் இளமையிலேயே விரைந்து கவிபாடும் ஆற்றலையும் பெற்றிருந்தார். அப்பருவத்திலேயே பிள்ளைத்தமிழ், அந்தாதி போன்ற நூல்களைப் பாடுமளவிற்கு இவரிடம் புலமை காணப்பட்டது.

நூறுவகையான அவதானங்களையும் செய்யும் ஆற்றல் பெற்றிருந்த இவர் தனவணிகர்கள் வாழும் காரைக்குடி,தேவகோட்டை போன்ற நகரங்களிலும் சிவகங்கையிலும் அறிஞர்கள் பலர் முன்பு அவதானக்கலையாற்றலை வெளிப்படுத்திப் பாராட்டுப் பெற்றுள்ளார்.

தனிப்பாடல்கள் பலவற்றை அவ்வப்போது பாடியுள்ள இவர் சிறந்த நூல்கள் சிலவற்றையும் எழுதியுள்ளார். 'கண்டனூர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சுந்தரேசர் பதிகம் என்பன இவர் இயற்றிய நூல்களாகும். இவ்விரு நூல்களும் இவரது புலமைக்குத் தக்க சான்று பகர்கின்ற விதத்தில் அமைந்தனவாம். 'கண்டனூர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் செங்கீரைப் பருவத்திலிருந்து ஒரு பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

"சென்னியின் மீதணி செம்மணி வெண்மணி
சீர்மைய தானமணி
சேர விழைத்திடு பொன்முடி மீதெழு
திவவொளி பளபளென
மின்னியருக்களை நீதுணி படுகொடு
விடமுறு மரவாலே
மெலிமை யடைந்தனை நானதை மாலையின்
மேவின னதனாலே
நின்னிலு நானதி கம்மென வோதிமுன்
நின்றா டுதலேபோல்
நிகழ்கின் றதுவென உலகம் புகழ்தர
நேரின சைந்தாட
அன்னிய வத்துவி லாத பெரும் பொருள்
ஆடுக செங்கீரை
அண்டர்கள் போற்றிய கண்ட நல்லூர்க் கொடி
ஆடுக செங்கீரை".

பிற புலவர்கள் பாடிய நூல்களுக்கு இவர் சிறப்புப்பாயிரமும் பாடியுள்ளார்,

### மீனாட்சிசுந்தரம் ஐயர்

19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் இவரும் ஒருவர். பாண்டிநாட்டைச் சேர்ந்த காரைக்குடி இவரது சொந்த ஊர். தமிழ், வடமொழி ஆகிய இருமொழிப் புலமையும் பெற்று விளங்கியதுடன் ஆங்கிலமொழியறிவும் நிரம்பப்பெற்றிருந்தார்.சமய இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த இவர் சமயச் சொற்பொழிவாளராகவும் விளங்கியுள்ளார்.

ஒரே சமயத்தில் நூறு அவதானங்களைச் செய்யும் ஆற்றல் பெற்றிருந்த இவர் தமது அவதானக்கலைத் தேர்ச்சியை காரைக்குடி, தேவகோட்டை போன்ற நகரங்களிலுள்ள செல்வர்கள் முன்பு நடத்திக்காட்டிப் பரிசுகளையும் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார். தனிப்பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ள இவர் பிற புலவர்களது நூல்களுக்குச் சிறப்புப் பாயிரமும் பாடியுள்ளார். காரைக்குடி மு. இராமசாமிச் செட்டியார் பாடிய நூல்தனைப் பாராட்டியும் இவர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். கானாடு காத்தானில் வாழ்ந்த இராம சாமிப்புலவர் என்பவர், கருவூர்ப்பதியில் எழுந்தருளிய இறைவன் மீது 'ஆநிலைவெண்பா'என்ற ஓர் சிறந்த நூலைப் படைத்துள்ளார்.அந்நூலைப் பாராட்டியும் இவர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார்.

காரைகுடியில் எழுந்தருளியுள்ள கொப்புடையம்மன் மீதும் இவர் ஓர்கோவை நூல் பாடியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நூல்பற்றிய தெளிவான செய்திகள் ஏதும் தெரியவில்லை.

### பாலசுப்ரமணிய ஐயர்

இருபதாம்நூற்றாண்டுப் புலவர்களில் இவரும் ஒருவர். இராமனாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த காரைக்குடி இவரது சொந்த ஊராகும். இவரும் தமிழ்,வடமொழி ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்று விளங்கினார்; கவிதைபாடும் ஆற்றலை இளமையிலேயே பெற்று விளங்கிய இவர் அப்போதே பல பக்திப் பாடல்களைப் பாடியுள்ளார்.

நூறு அவதானங்களைச் செய்யும் ஆற்றல் பெற்று விளங்கிய இவர் காரைக்குடி, தேவகோட்டை, திருமயம்,புதுக்கோட்டை,

போன்ற நகரங்களில் அறிஞர்கள் பலர் கூடிய அவைகளில் தம் அவதானத் திறமையை வெளிப்படுத்திப் பலரது பாராட்டு தல்களையும் பெற்று வந்துள்ளார்.

சிறந்த புலவரான இவர் பல தனிப்பாடல்களைப் பாடியிருப்பதுடன் பிறபுலவர்கள் பாடிய நூல்களுக்குச் சிறப்புப் பாயிரமும் பாடியுள்ளார். திருமயம் என்ற ஊரில் வாழ்ந்த நரசிம்ம பாரதி என்பவர் இயற்றிய நூலைப் பாராட்டியும் இவர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். இவர் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றிப் பல மாணவர்களை உருவாக்கியுள்ளார் என்றும் கருதப்படுகிறது. மாணவர்கள் எவர் என்று தெரியவில்லை. ஒருவேளை,குறிப்பிடும் அளவுக்குப் புகழ் பெறாதவர்களாக அவர்கள் இருந்திருக்கக்கூடும்.

## இராமநாதச் செட்டியார்

19 ஆம் நூற்றாண்டுப் புலவர்களில் ஒருவரான இவர் சொன்னனாதபுரம் என்னும் ஊரைச் சேர்ந்தவர்· சோழநாடு, கும்பகோணத்தில் வாழ்ந்த முத்துச்சாமி ஐயர் என்பவர் பாடிய 'திருமுல்லைவாயில் நான்மணிமாலை' என்னும் நூலுக்கு இவர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார்.

சதாவதானி என்று இவர் குறிப்பிடப்பட்டிருப்பதால் நூறு அவதானங்களையும் செய்யவல்லவர் என்பதை அறிய முடிகிறதேயன்றி இவரைப் பற்றிய வேறு செய்திகள் ஏதும் தெரியவில்லை.

## சுப்பிரமணிய ஐயர்

இருபதாம் நூற்றாண்டுப் புலவர்களில் இவரும் ஒருவர் இவரது சொந்த ஊர் தஞ்சை. தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் புலமை பெற்ற இவர் தமிழ் இலக்கணங் களில் வல்லவராகவும் ஆராய்ச்சி அறிஞராகவும் விளங்கியுள்ளார். சிறந்தகவிஞராகவும் விளங்கியுள்ள இவர் வேதவிற்பன்னர் என்று போற்றும் நிலையிலும் வாழ்ந்துள்ளார்.

நூறு அவதானங்களைச் செய்யும் ஆற்றல் மிக்கவர்களில் ஒருவராகவும் விளங்கியுள்ள இவர் தமது சொந்த ஊராகிய தஞ்சையிலும் இன்னும் பிற இடங்களிலும் அவதான நிகழ்ச்சிகளை நடத்திக்காட்டிப் பாராட்டப் பட்டுள்ளார். தனிப்பாடல்

கள் சிலவற்றைப் பாடியிருப்பதுடன் பிறபுலவர்கள் பாடிய நூல் களுக்கு இவர் சிறப்புப் பாயிரமும் பாடியுள்ளார். சென்னைக் கருகிலுள்ள பொன்னேரியில் வாழ்ந்த அமிர்தலிங்க சோதிடர் என்பவர் இயற்றிய 'சென்னை சாலி விநாயகர் தோத்திரப் பாமாலை' என்ற நூலையும், காஞ்சியில் வாழ்ந்த இராமாநந்த சுவாமிகள் பாடிய நூலையும் பாராட்டி இவர் சிறப்புப்பாயிரங் கள் பாடியுள்ளார். தெய்வசிகாமணிக் குருக்கள் என்பவர் இயற்றிய 'சிவாநந்த சுவாமிகள் பதிகம்' என்ற நூலுக்கு இவர் பாடிய சிறப்புப்பாயிரத்தில் ஒருபாடல்,

"பொன்மாலை வனமார்பில் பூண்மாலை
அயின்றிடுமிப் புவி மா லைக்கோர்
மின்மாலை என நீ த்து மிகு மாலைச்
சாறோடி விரியை யாற்றில்
மன்மாலை நிறத்தாற்கு மலர் மாலை
மனத்தனிசி வாதந் தற்கோர்
சொன்மாலை தனைவாக்கால் தெய்வசிகா
மணிக்கவிஞன் சூட்டி னானால்!"

## சரவணப் பெருமாள் கவிராயர்

இருபதாம் நூற்றாண்டுப் புலவர்களில் ஒருவரான இவர் இராமநாதபுரம் சேதுபதி யரசர் அரண்மனையில் அவைக்களப் புலவராகவும் விளங்கியுள்ளார். மாணிக்கவாசகம் பிள்ளை என்பாரியற்றிய 'திருச்செந்தில் பதிற்றுப்பத்தந்தாதி' என்னும் நூலுக்குச் சிறப்புப்பாயிரம் பாடியவர்களில் ஒருவராக இவரும் குறிப்பிடப்படுகிறார். இவரைப் பற்றிய வேறுசெய்திகள் ஏதும் கிடைக்காததால் இதே பெயரில் உள்ள பிற அவதானிகளில் ஒருவரே பின்பு நூறு அவதானங்கள் செய்யும் நிலைக்கு உயர்ந் தாரா என்பதும் ஐயத்திற்குரியது.

## வாலசுப்ரமணிய ஐயர்

19 ஆம் நூற்றாண்டுப் புலவர்களில் ஒருவரான இவர் பாண்டிய நாட்டைச்சேர்ந்த மழவராயனேந்தல் என்னும் ஊரில் பிறந்தவர். இவரது தந்தையார் சிதம்பர தீட் சதரும் புலவராத லின் அவரிடமே பாடங் கேட்டு இளமையிலேயே கல்வியறிவில் இவர் ஓங்கினார். நூறு அவதானங்கள் செய்வதில் வல்லவராக விளங்கிய இவர் கற்பக விநாயகர் அகவல், கற்பக விநாயகர் பதிகம், கொப்புடை நாயகி பதிகம், கொப்புடை நாயகி மும் மணிக் கோவை முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார்.

கற்பகத் தருவினின் முளைத்திரச மூறுசெங்
கனியே, கனிக்குள் மதுவே
கரையிலாப் பேரின்ப வெள்ளமே, வெள்ளம்
கனிந்துதவு கருணை முகிலே!
விற்பக வளைந்தழகு யர்ந்த நுதல் வில்லியே!
மிளிர் மருங் கொடி வல்லியே;
விஞ்சையர் துதிக்கும் கலாப மயிலே! மறை
விளம்ப வொண் ணாத குயிலே
தற்பரஞ் சுடரே! யெனிட ரொழித் தாண்டு தின
சரியுமன மொருமை யாயுந்
தனையோது மதியெனக் கருளாய் சமயமிது
தமியன்மேல் வரும மேது?
மற்பொருது மகிடன் முடியைப் பொடித் தனவரத
மணிமதிற் காரை மேவும்
வளமிகற் புதநன்மை யிலகுகற் பினின் மெய்ம்மை
மருவு கொப்புடை யம்மை யே'' என்பது

கொப்புடை நாயகி பதிகத்தில் உள்ள ஓர் பாடல்,

# துவி சதாவதானம்

ஒரேசமயத்தில் இருநூறு பேர் கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் கூறும் வகையில் அமைந்ததுதான் துவி சதாவதானம். இரண்டு சக்கர வண்டியைச் துவிச் சக்கரவண்டி என்று குறிப்பிடுவதுபோல இரண்டு நூறு அவதானங்கள் துவி சதாவதானம் என்று அழைக்கப்படுகிறது. சதாவதானம் செய்வதே எவ்வளவு அரிது என்பதை அறிவோம். இரு நூறு பேர்கட்கு ஒரே சமயத்தில் ஈடுகொடுக்குமளவிற்கு ஆற்றல் படைத்திருப்பது வியக்கத் தக்கதே. சதாவதானத்தையும் விஞ்ச வேண்டும் என்ற முயற்சியின் பயனாகப் பிறந்ததே துவி சதாவதானம். ஆனால் அத்தகு முயற்சியில் வெற்றி பெற்றவராக ஒருவரைத் தான் நாம் காணமுடிகிறது.

**ம. உ. சுப்பராமையர்**

19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களில் ஒருவரான இவர் சிவகங்கையைச் சேர்ந்த மழவராயபுரம் என்னும் ஊரில் பிறந்தவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் ஆழமான புலமை பெற்றுச் சிறந்த இவர் விரைந்து கவிபாடும் ஆற்றலையும் பெற்றுள்ளார். இளமையிலேயே நல்ல நினைவாற்றலைப் பெற்றிருந்த இவருக்கு அதுவே பின்பு இரு நூறு அவதானங்களைச் செய்யும் துணிவைத்தந்தது.

'துவிசதாவதானி' என்று போற்றப்படும் இவர் யாரிடம் அவதானங்களைக் கற்றார்? எங்கெல்லாம் அவதானங்களை நிகழ்த்திக் காட்டினார்என்பன போன்ற செய்திகள்கிட்டவில்லை. ஆனால் இவர் இரு நூறு அவதானங்களைச் செய்து புகழ் பெற்றுள்ளார் என்ற செய்தி பலராலும் குறிக்கப்பட்டுள்ளது.

தனிப்பாடல்கள் பல பாடியிருப்பதுடன் பிற நூலாசிரியர் களது நூல்களுக்கும் இவர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். இராமச் சந்திர வெள்ளைப் பொம்மைய நாயகர் என்பவர் கரிசைப்பட்டு என்னும் ஊரைச்சேர்ந்தவர். இவர் 1863 ஆம் ஆண்டு 'இதயதீபம்' என்னும் நூலை வெளியிட்டபோது அந்நூலுக்கு இவர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். நாராயணன் என்பவர் இயற்றிய பழனிவெண்பா என்னும் நூலுக்கு இவர் வழங்கிய சாற்றுக்கவியில் ஒரு பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

"அருந்துவரை இதழெண்ணா சிகைவள்ளி
யைப்புணர்ந்த அன்பர் நீதா
திருந்துவரைத் தோட்டேவி சேயர்பழ
நிக்கந்தர் தீரமிக்காய்ப்
பொருந்துவரைந் துடனொன்று முகத்தர்மேல்
மாலை வெண்பாப் புவிபின்மால
விருந்துவரைக் கண்ணணா ராயணநா
வலன் செய்தான் விரும்பத்தானே"

வேறு நூல்கள் ஏதும் இவர் எழுதியதாகத் தெரியவில்லை. இவருக்குப்பின் இரு நூறு அவதானங்கள் செய்தவராக எவரும் இல்லையாதலால் இவ்வகையில் இவரே தனித்து நிற்கின்றார்.

# திருக்குறள் அவதானம்

இதுகாறும் நாம் கண்ட அவதானங்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடங்கியதல்ல. அவைகளின் எண்ணிக்கை அளவைக் கொண்டு பெயர்கள் வைக்கப்பட்டனவேயன்றி வேறு கட்டுப்பாடுகள் ஏதும் இருக்கவில்லை. ஆனால் திருக்குறள் ஒன்றனையே களமாகக் கொண்டும் அவதானங்கள் நடத்தியுள்ளார்கள். இது அவதான வரலாற்றில் ஒரு புதுமை. வேறு நூல்களுக்கு இல்லாத சிறப்பு திருக்குறளுக்கு உண்டு என்பதற்கு இது ஓர் தக்க சான்று. அன்றியும் திருக்குறளில் ஆழமான புலமையிருந்தால்தான் அதில் அவதானம் செய்யமுடியும். அத்தகைய புலமை அமையப்பெற்ற சிலர் திருக்குறள் அவதானிகளாக விளங்கியுள்ளார்கள்.

## சுப்பிரமணிய தாசு

19 ஆம் நூற்றாண்டுப் புலவர்களில் ஒருவராக விளங்கிய இவர் வரலாறு அட்டாவதானிகள் வரிசையில் இடம் பெற்றுள்ளது. இவர் செய்த அவதானங்கள் எட்டாக இருந்த போதிலும் அந்த எட்டும் திருக்குறளை மையமாகக் கொண்டே அமைந்திருந்தது. அதற்காக இவர் திருக்குறளின் பாட்டிலக்கம், உரை, அதிகாரம், தொடர்எண் முதலியனவைகளில் முழுக்கவனம் செலுத்தி ஐயமற அவைகளைக் கற்றுத் தெளிந்துள்ளார். இவ்வகையில் முதன்முதல் முயன்று வெற்றிபெற்ற பெருமை இவரையே சாரும்.

## இராமதாசு

திருக்குறள் அவதானி சுப்பிரமணியதாசின் மகன் இவர். தம் தந்தையைப் போலவே இவரும் திருக்குறள் அவதானியாக விளங்கிப் புகழ்பெற்றுள்ளார். இருபதாம் நூற்றாண்டுப் புலவர்களில் ஒருவராக விளங்கி நாஞ்சில் நாடெங்கும் திருக்குறள் மணங்கமழச் செய்த இவர் இளம்வயதிலேயே திருக்குறளை மனப்பாடம் செய்து ஒப்புவித்து அறிஞர் பலரது பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார். இவருக்குப் பன்னிரண்டு வயது நிரம்பு முன்னமே இவரது அவதான நிகழ்ச்சி அரங்கேற்றப் பட்டு பலரது பாராட்டுதல்களைப் பெற்றுத் தந்தது.

திருக்குறள் அவதானியாகத் திகழ்ந்ததோடன்றி திருக் குறளை ஆய்வு செய்து கூறும் ஆற்றல் மிக்கவராகவும் இவர் விளங்கினார். இவர் எழுதிய 'வள்ளுவர் வகுத்த அரசியல்' என்ற நூல் புலவர்கள் போற்றும் பெருமையைப் பெற்றது. ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றையும் இவர் திருக்குறளை மையமாகக் கொண்டு எழுதிப் புகழ் பெற்றுள்ளார். சிறந்த கவிஞராகவும் திகழ்ந்த இவர் தனிப்பாடல்கள் பல அவ்வப்போது பாடி யுள்ளார். கவிதைநூல் ஏதும் எழுதியிருப்பதாகத் தெரிய வில்லை.

# அட்சரா வதானம்

ஆயிரம் அட்சரங்களை எவ்வாறு மாற்றி அமைத்தாலும் அதை முறையாக அமைத்து வாசிப்பது அட்சராவதானம் எனப் படும். திருக்குறள் அவதானத்தைப் போல இதுவும் ஒரு குறிப் பிட்டகளத்திற்குள் அவதானம் செய்வதாகும். ஆயிரம் அட்சரங் களையும் ஐயந்திரிபற அறிந்தோரால் மட்டுமே இப்படிப் பட்ட அவதானத்தைச் செய்ய முடியும். இந்த அவதானத்தில் வல்லவராகவும் ஒருவர் திகழ்ந்துள்ளார்.

## பெருங்கருணை முத்தழகர்

கி. பி. 19ஆம் நூற்றாண்டில் சேதுநாட்டில் வாழ்ந்த புலவர் இவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மிகுந்த புலமை பெற்றுத் திகழ்ந்த இவர் வடமொழி விற்பன்னராகவும் விளங் கியவர்.

வேதங்களை நன்குணர்ந்ததுடன் ஆயிரம் அட்சரங்களையும் ஐயம் சிறிதுமின்றிக் கற்றுத்தெளிந்து விளங்கினார். எந்த அட்சரத்தை எப்படி மாற்றினாலும் அதை முறைப்படுத்திப் படிக்கும் பாங்கு இவரிடத்தில் காணப்பட்டது. அட்சராவதானத் தை இவர் பல இடங்களிலும் நடத்திக்காட்டிப் பாராட்டப் பெற்றுள்ளார்.

அட்சரங்களை மட்டுமன்றி அவர் அறியாத பிறமொழிச் சொற்களையும் கூட அவதானத்தின் இடையில் எவரேனும் சொல்லக் கேட்டால் பின்பு கூறியவர் கேட்கும்போது சிறிதும் பிறழாமல் கூறக்கூடிய ஆற்றலும் இவருக்கிருந்தது.

சிறந்த கவிஞராகவும் திகழ்ந்த இவர் தனிப்பாடல்கள் சில வற்றைப் பாடியிருப்பதுடன், ''திருக்கோட்டியூர்க் கலம்பகம்'' என்ற நூலையும் பாடியுள்ளார்.

**துணை நூற்பட்டியல்**


1. தமிழ்ப் புலவர் அகரவரிசை — பகுதி—1 — கழக வெளியீடு.
2. ,, பகுதி-2 ,,
3. ,, தொகுதி—2—பகுதி—1 ,,
4. ,, தொகுதி—2—பகுதி—2 ,,
5. ,, பகுதி-3 ,,
6. தமிழ்ப் புலவர்வரிசை— பகுதி-1 ,,
7. ,, பகுதி-2 ,,
8. ,, பகுதி-3 ,,
9 ,, பகுதி-4 ,,
10. ,, பகுதி-5 ,,
11. ,, பகுதி-6 ,,
12. ,, பகுதி-10 ,,
13. தமிழ்ப் புலவர் அகராதி—ந.சி. கந்தையாபிள்ளை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை—1.
14. தமிழ்ப் புலவர் வரிசை 1 ஆம் புத்தகம்—கழகவெளியீடு.
15. ,, 8 ஆம் புத்தகம் ,,
16. ,, 10 ஆம் புத்தகம் ,,
17. ,, 12 ஆம் புத்தகம் ,,
18. ,, 16 ஆம் புத்தகம் ,,
19. ,, 20 ஆம் புத்தகம் ,,
20. ,, 23 ஆம் புத்தகம் ,,
21. ,, 24 ஆம் புத்தகம் ,,
22. ,, 27 ஆம் புத்தகம் ,,
23. ஈழ நாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள்— தென்புலோலியூர். — மு.கணபதிப்பிள்ளை —பாரி நிலைய வெளியீடு.
24. குமரிநாட்டுப்புலவர்கள்—புலவர். சொ. முருகேசமுதலியார், கழக வெளியீடு.
25. தமிழ் இலக்கிய வரலாறு —டாக்டர். மு. வரதராசன். சாகித்ய அகாதமி வெளியீடு.
26. The Tamil Literature ... M. S. Poornalingam ... Pillai B.A.L.T. — The Bibliotheca, Munnir Palam, Tinnevely-Dt.
27. மனித உள்ளம் — Dr. ஆதி நாராயண், பழநியப்பா —பிரதர்ஸ், சென்னை—14.
28. கலைக்களஞ்சியம் —தொகுதி—3.
29. கலைக்களஞ்சியம் —தொகுதி—8.
30. செந்தமிழ் அகராதி— ந.சி. கந்தையாபிள்ளை

31. கோனார் தமிழ்க்கையகராதி —திரு.ஐயன்பெருமாள் கோனார் —(பழநியப்பா பிரதர்ஸ்).

32. கழகத் தமிழ்க்கையகராதி —சேலை .சகதேவமுதலியார் —காழி .சிவ. கண்ணுச்சாமி பிள்ளை, —கழக வெளியீடு.

33. செந்தமிழ்ச் செல்வி —சிலம்பு —43—சு.அ.இராமசாமிப் புலவர், —கழகவெளியீடு.

# அவதானிகளின் பெயர்கள்-அகரவரிசை

## சட்டாவதானம்

கங்காதர பாலதேசிகர்
வைரக்கண் வேலாயுதப் புலவர்

## அட்டாவதானம்

அச்சுத உபாத்தியாயர்
அட்டாவ தானியார்
அப்துல்காதர்
அரங்கநாதக் கவிராயர்
அரங்கையர்.
அரங்கசாமி ஐயங்கார்
இரங்கநாதக் கவிராயர்
இராமசாமியா பிள்ளை
இராமநாதன் செட்டியார்
இராமலிங்கம் பிள்ளை
இராமானுசக் கவிராயர்
இராமசாமிக் கவிராயர்
இராமசாமிக் கவிஞர்
இராமலிங்கக் கவிராயர்
இராமலிங்கக் கவிராயர்
இன்ப கவிராயர்
ஏகாம்பரம். நா,
கதிரை வேற்பிள்ளை. நா.
கதிர்வேல் கவிராச பண்டிதர்
கலியாண சுந்தரம் பிள்ளை
கிருஷ்ண ஐயங்கார்
குமாரசாமிக் கவிராயர்
சபாபதி முதலியார்
சந்திரசேகர உபாத்தியாயர்
சரவணக் கவிராயர்
சரவணப் பெருமாள் பிள்ளை
சாமிநாதையர்
சிறிய சரவணக் கவிராயர்
சின்ன இபுறாகீம் மொகையதீன்

சுந்தரம் ஐயர்
சுப்பிரமணிய ஐயர்
சுப்பிரமணிய தாசு
சுப்பையர்
சுப்பராயச் செட்டியார்
செகராவ் முதலியார்
சேடாசலக் கவிராயர்
சொக்கலிங்கப் புலவர்
சொக்கநாதப் புலவர்
சோமசுந்தர குரு
நயினார் பிள்ளை
நாகலிங்கம் பிள்ளை
பாப்பையர்
பூவை. கலியாணசுந்தர முதலியார்
பெரிய திருவடிக் கவிராயர்
பொன்னுங் கூட அவதானி
மகாதேவ ஐயர்
மீனாட்சிசுந்தரக் கவிராயர்
முத்துசாமி ஐயங்கார்
முத்துக்குமாரு. ச.
முத்துச்சாமிக் கோனார்
முகமது மீரா ராவுத்தர் அ. ம. கி.
முகம்மது அப்துல்காதர்
வடபத்திர ஐயங்கார்
வாலசுப்பிரமணிய ஐயர்
வீராசாமி செட்டியார்
வேலாயுதக் கவிராயர்

தசாவதானம்

ஆறுமுகம் பிள்ளை
இராமையா
சரவணப் பெருமாள் கவிராயர்
ஜெகநாதப் பிள்ளை
திருஞானசம்பந்தன்
பால சுப்ரமணிய ஐயர்
முத்துவீர உபாத்தியாயர்

### சோட சாவதானம்

சரவணப் பெருமாள் கவிராயர்
சுப்பராயச் செட்டியார்
மீனாட்சி சுந்தரக் கவிராயர்
வேலாயுதக் கவிராயர்

### சதாவதானம்

இராமநாதச் செட்டியார்
கிருஷ்ணசாமிப் பாவலர் தெ. பொ
சரவணப் பெருமாள் கவிராயர்
சுப்பிரமணிய ஐயர்
செய்குத்தம்பிப் பாவலர்
பாலசுப்ரமணிய ஐயர்
பாலசுப்ரமணிய ஐயர்
மீனாட்சிசுந்தர ஐயர்
முத்துச்சாமி ஐயங்கார்
வாலசுப்ரமணி ஐயர்

துவிசதாவதானம் : ம. உ. சுப்பராமையர்
திருக்குறள் அவதானம் : இராமையா
இராமதாசு
சுப்பிரமணிய தாசு
அட்சராவதானம் : பெருங்கருணை முத்தழகர்.

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் நூல்களும்

தமிழ்ப் பதிப்பக நூல்களும்

| | | ரூ | |
|---|---|---|---|
| 1. | இலக்கணத்தொகை—யாப்பு பாட்டியல் | 34 | 00 |
| 2. | மொழிச் கட்டுரைகள் | 5 | 00 |
| 3. | இலக்கியக் கனவுகள் | 6 | 00 |
| 4. | மாந்தர் சிறப்பு | 5 | 00 |
| 5. | தமிழில் விடுகதைகள் | 12 | 00 |
| 6. | அடியார்க்கு நல்லார் உரைத்திறன் | 12 | 00 |
| 7. | ஒன்று நன்று | 8 | 00 |
| 8. | வீரசோழியம்—ஒருதிறனாய்வு—மூலமும் கருத்தும் | 5 | 00 |
| 9. | தாயுமானவர் | 3 | 00 |
| 10. | சிலம்பும் சிந்தாமணியும் | 8 | 00 |
| 11. | தொன்னூல் விளக்கம் | 6 | 00 |
| 12. | கம்பன் கற்பனை | 12 | 00 |
| 13. | இலக்கிய உணர்வுகள் | 7 | 00 |
| 14. | தமிழ் இலக்கியத்தில் ஆறு | 10 | 00 |
| 15. | காப்பியப் புனைதிறன் | 12 | 00 |
| 16. | குவலயானந்தம்—சந்திராலோகம் | 8 | 00 |
| 17. | பிரபந்ததீபம் | 5 | 00 |
| 18. | கூவநூல் | 7 | 00 |
| 19. | கம்பனும் உலகியல் அறிவும் | 10 | 00 |
| 20. | ஞாயிறு ஆயிரம் | 12 | 00 |
| 21. | கம்பன் ஆய்வடங்கல்—செல்வி ச. சிவகாமி | 15 | 00 |
| 22. | தமிழ் நாவல் வகைகள்-டாக்டர் தா. வே. வீராசாமி | 10 | 00 |
| 23. | தமிழ்வில்லுப்பாட்டுகள்-திரு. தி. சி.கோமதிநாயகம் | 12 | 00 |
| 24. | தமிழ்நாடகம்-ஓர் ஆய்வு-டாக்டர்ஏ. என். பெருமாள் | 16 | 00 |
| 25. | ஈழத்துநாட்டார் பாடல்கள்-கலாநிதி சி. பாலசுந்தரம் | 18 | 00 |
| 26. | சைவசமயஓர் அறிமுகம்—டாக்டர் வி. அருணசலம் | 6 | 00 |
| 27. | உலகக் காப்பியங்கள்—டாக்டர் இரா. காசிராஜன் | 20 | 00 |
| 28. | தமிழே எல்லாம்-திரு. கரு. நாகராஜன் | 12 | 00 |
| 29. | Convention and Creativity in Sangam Lyrics —A. V. Subramaniam | 6 | 00 |

கிடைக்குமிடம்

# பாரி நிலையம்

184, பிராட்வே—சென்னை-600 001.

Wrapper printed at PONMANI ART PRINTERS, MADRAS-5.